விலை: 30.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 20 வள்ளுவர் ஆண்டு 2050 மாசி 25 சனிக்கிழமை (09.03.2019) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 080

## நீதியை நிலைநாட்டுவதற்கு இலங்கையால் இயலுமா?

### ஐ.நா மீளாய்வு அறிக்கையில் கேள்வி

(ஜெனிவா) இலங்கையில் இடம்பெற்ற பாரதூரமான குற்றங்கள் தொடர்பில் நீதியை நிலைநாட்ட இலங்கையால் இயலுமா? என ஐ.நா மீளாய்வு அறிக்கையில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. (24-ம் பக்.)

## இன்னும் 6 மாதத்தில் ஆட்சியை பிடிப்போம்

### எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த

(கொழும்பு)

இன்னும் 6 மாதங்களுக்குள் அரசாங்கத்தைப் பிடித்து கண்டி - கொழும்பு அதிவேக பாதையை 6 மாதங்களுக்குள் நிறைவு செய்து பொது மக்களிடம் ஒப்படைக்கவுள்ளதாக எதிர்க் கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பொறுத்தது போதும் எனும் தலைப்பில் கண்டியில் நேற்று



மாலை ஆரம்பமான கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் 23

### 65 வீடுகளுக்கு தனித்தனியே சென்ற சஜித்

## அரச வேலைவாய்ப்பினை ஐவருக்கு உடனடியாக வழங்கி வைத்தார்

(யாழ்ப்பாணம்)

மூளாயில் நிர்மாணிக்கப்பட்ட பொன்னொளி நகரின் 65 வீடுகளுக்கும் அமைச்சர் சஜித் பிரேமதாஸ ஒவ்வொரு வீடாகச் சென்று வீட்டு உரிமையாளர்களிடம் வீட்டு உரிமப்பத்திரங்களை நேற்றுக் கையளித்துள்ளார்.

சங்கானை பிரதேச செயலகத்துக்குட்பட்ட பொன்னொளி நகர் 176ஆவது மாதிரிக் கிராமம் நேற்று வெள்ளிக்கிழமை வீடமைப்பு நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் சஜித் பிரேமதாஸவினால் மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இதன்போதே அமைச்சர் சஜித் பிரேமதாஸ 65 வீடுகளுக் 24

### பொன்னொளி வீடு கையளிப்பில்

## அமைச்சர் சஜித்தின் கேள்வியால் சங்கடப்பட்ட அரச அதிகாரிகள்!

(யாழ்ப்பாணம்)

யாழ் மூளாயில் நேற்று இடம்பெற்ற பொன்னொளி நகர கிராம மக்களிடம் வீடுகளை கையளிக்கும் நிகழ்வில் அரச அதிகாரிகளிடம் பல்வேறு கேள்விகளை கேட்டு அதிகாரிகளை சங்கடத்திற்கு உள்ளாக்கினார் சஜித் பிரேமதாஸ.

பொன்னொளிக் கிராம வீட்டுத் திட்டத்தின் முன்பக்க வாயிலில் அமைந்துள்ள வைரவர் ஆலயத்தைக் கண்டதும் ஆலயம் நோக்கி சென்ற அமைச்சர் ஏன் ஆலயம் சிறியதாக உள்ளது என 24

## மன்னார் புதைகுழி அகழ்வை நிறுத்த நீதிமன்று உத்தரவு

(மன்னார்)

மன்னார் மனித புதைகுழி அகழ்வை தற்காலிகமாக நிறுத்துமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சுமார் 140 தடவைக 24

### வவுனியா பகுதியில்

## அடி காயங்களுடன் குடும்பஸ்தரின் சடலம் நேற்று மீட்பு

(மன்னார்)

வவுனியா, உக்கிளாங்குளம் பகுதியில் அடி காயங்களுடன் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் 24

## வடமராட்சியை சேர்ந்த இளம் குடும்பஸ்தர் பிரான்சில் படுகொலை

(கரணவாய்)

பிரான்சில் இடம்பெற்ற கத்திக்குத்து சம்பவத்தில் வடமராட்சி கற்கோவளம் பகுதியைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தர் ஒருவர் 24

### வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்றவில்லை

# இலங்கைக்கு எதிராக கடும் நடவடிக்கை!

### ஐ.நா மனித உரிமை ஆணையாளர் பரிந்துரை

(ஜெனிவா) ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்கு வழங்கிய வாக்குறுதிகள் சிலவற்றை நடைமுறைப்படுத்தத் தவறிய இலங்கைக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை எடுக்குமாறு ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் பரிந்துரைந்துள்ளார். (23-ம் பக்.)




## கட்டுப்பாட்டை இழந்த பட்டா மரத்துடன் மோதி விபத்து

### இளைஞன் ஸ்தலத்திலேயே பலி



(யாழ்ப்பாணம்)

ரயர் காற்றுப் போனதால் கட்டுப்பாட்டை இழந்த பட்டா ரக வாகனம் மரத்துடன் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் இளைஞன் சம்பவ இடத்தில் பலியானதுடன் மற்றொருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ் போதனா வைத்திய 23

## நாட்டை மீட்க ஒன்றிணைக

### மகிந்த அணி அழைப்பு

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியிடமிருந்து நாட்டை மீட்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என மகிந்த அணி அழைப்பு விடுத்துள்ளது. அரசாங்கத்திற்கு எதிராக பொதுஜன பெர 23

### ஐ.நாவில் இலங்கை இணை அனுசரணை

## கிரியெல்ல - தயாசிறி சபையில் .வாக்குவாதம்

(கொழும்பு)

இலங்கையின் போர்க்குற்றச்சாட்டு குறித்து ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் முன்னெடுக்கப்படும் இலங்கை குறித்த விவகாரத்தில் இணை அனுசரணை விடயத்தில் சபை முதல்வர் கிரியெல்லவிற்கும் எதிர்க்கட்சி உறுப்பினர் தயாசிறி எம்.பிக்குமிடையில் வாக்குவாதம் இடம்பெற்றது.

பாராளுமன்றத்தில் நேற்று வாய்மூல வினாக்கான நேரத்தில் ஒழுங்குப்பிரச்சினை எழுப்பி கேள்வியொன்றை முன்வைத்த எதிர்க்கட்சி உறுப்பினர் தயாசிறி ஜெயசேகர, இம்முறை ஜெனிவா 23

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532


# திறப்பு விழா

தமிழ் மக்கள் கூட்டணியின் மாவட்டப் பணிமனைத் திறப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப 10 மணிக்கு இல.258, ஆனந்தபுரம் மேற்கு, கிளிநொச்சி எனும் முகவரியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வுக்கு தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும் முன்னாள் வட மாகாண முதலமைச்சருமான நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

(ம-3)

## பண்ணை வேலையாள் தேவை

விவசாய வேலைகளிலும் மாடு பராமரிப்பு வேலைகளிலும் உற்சாகத்துடன் ஈடுபடக்கூடிய இருவர் தேவை. பெண்கள்/ஆண்கள், சாப்பாடு, தங்குமிட வசதியுண்டு.

திருநாவுக்கரசு ஞாபகார்த்த மாதிரிப்பண்ணை

தொடர்புகளுக்கு:- 077 172 6583 (7799)

## மணிவிழா அழைப்பு



### திரு. சின்னத்துரை வேதவனம்

(ஓய்வு நிலை பொது முகாமையாளர்)

கடந்த 35 வருடத்துக்கு மேலாக கூட்டுறவுத்துறையில் சேவையாற்றி கடந்த 02.07.2018 இல் அகவை அறுபதில் கால் பதித்து ஓய்வு பெற்றிருக்கும் திரு.சின்னத்துரை வேதவனம் அவர்களின் மணிவிழா சிறக்க வாழ்த்துகின்றோம்.

இடம் : கற்சிலைமடு பண்டாரவன்னியன் மகா வித்தியாலயம் கலையரங்கம்
காலம் : 10/03/2019 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : காலை 9.00 மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

*அனுசரணை:* திரு.இரத்தினம் ஜெயரூபன் (ரூபன் குடும்பத்தினர்)
இரத்தினம் உதிரிகள் வாணிபம்
புதுக்குடியிருப்பு வீதி,
கற்சிலைமடு சந்தி, கற்சிலைமடு.

மணிவிழா ஏற்பாட்டுக்குழு
கற்சிலைமடு,
ஒட்டிசுட்டான்.

## வல்வெட்டித்துறை தீருவில் இளைஞர் விளையாட்டுக்கழகத்தின் 72ம் ஆண்டு நிறைவை முன்னிட்டு இடம்பெறும்

## விளையாட்டு விழா - 2019

இவ்விழாவில்

- கபடி
- கரப்பந்தாட்டம் (Setup)
- வலைப்பந்தாட்டம்

ஆகிய போட்டிகளில் பங்குகொள்ள விருப்பம் உள்ள அனைத்து கழகங்களும் 13.03.2019ம் திகதி மாலை 6 மணிக்கு முன்பாக தொடர்பு கொள்ளவும்.

வெற்றி பெறும் கழகத்தின் ஒவ்வொரு வீரர்களுக்கும் வெற்றி கேடயமும் பணப்பரிசும் வழங்கப்படும்.

(C-5722)

தொடர்புகளுக்கு
0771517898 கண்ணன் 0774162692 மயூரன்

## அஞ்சலி நிகழ்வும் இறுதி மரியாதையும்



06.03.2019 அன்று இறைபதம் அடைந்த

### டாக்டர் என்.சிவராஜா

(முன்னைநாள் துறைத் தலைவர், சிரேஷ்ட விரிவுரையாளர் - சமுதாய மற்றும் குடும்ப மருத்துவத்துறை, மருத்துவபீடம், யாழ்.பல்கலைக்கழகம்)

அன்னாரது இறுதி அஞ்சலி நிகழ்வானது நாளை (10.03.2019) ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணியளவில் யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடத்தின் கூவர் உள்ளக அரங்கில் (Hoover Auditorium) இடம்பெற்று பூதவுடல் இறுதி தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும் என்பதனை துயரோடு தெரியப்படுத்துகின்றோம்.

*தகவல்:*
சமுதாய மற்றும் குடும்ப மருத்துவத்துறை,
மருத்துவபீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

## மரண அறிவித்தல்

மண்ணில் 29 - 06 - 1997



விண்ணில் 07 - 03 - 2019

### செல்வன் செல்வநாயகம் பீற்றர் ஜஸ்மின்

பலாலி புனித செபஸ்தியார் ஆலய சமூகத்தைப் பிறப்பிடமாகவும் சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயப் பங்கை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வன் செல்வநாயகம் பீற்றர் ஜஸ்மின் 07.03.2019 (வியாழக்கிழமை) அன்று அகால மரணமானார்.

அன்னார் செல்வநாயகம் (ஓய்வுநிலை, பாதுகாப்பு உத்தியோகஸ்தர், யாழ்.பல்கலைக்கழகம்), மேரி மரியகொறற்றி ஆகியோரின் பாசமிகு புதல்வனும் ரொனால்ட் யஸ்மின் (பாதுகாப்பு உத்தியோகஸ்தர் - யாழ்.பல்கலைக்கழகம்), ஆன் மேரி யஸ்மினின் அன்புச் சகோதரனும் அன்ரனி றபாயேலின் (விளையாட்டுத்துறை - யாழ்.பல்கலைக்கழகம்) அன்பு மைத்துனரும் ஆன் ஜனோரியாவின் பாசம் நிறைந்த மாமனாரும் அன்ரன் அமலதாஸ் (புடைவை வியாபாரி - சுன்னாகம்) - கிருஷ்ணவேணி ஆகியோரின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான ஞானமுத்து - றீற்றம்மா, தேவசகாயம் - மரியம்மா ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற வரப்பிரகாசம் மற்றும் அன்னம்மாவின் மருமகனும் காலஞ்சென்ற பேரின்பநாயகம் மற்றும் பரமநாயகம் - ஞானபுஸ்பம் ஆகியோரின் பெறாமகனும் காலஞ்சென்ற யஸ்தஸ், சின்னப்பு மற்றும் சகாயநாயகி ஆகியோரின் மருமகனும் அருட்தந்தை யூட் குயின்ரஸின் (சொமாஸ்கன்) ஒன்றுவிட்ட சகோதரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (10.03.2019) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணியளவில் சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெற்று திருவுடல் சுன்னாகம் புனித அந்தோனியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(C-5726)

ஐயனார் வீதி,
சுன்னாகம்.

தகவல்:- குடும்பத்தினர்
077 754 8247

# பொன்னொளி நகர் கிராமம் கையளிப்பு



(யாழ்ப்பாணம்)

சங்கானைப் பரிதேச செயலகத்திற்குட்பட்ட பொன்னொளி நகர் 176 ஆவது மாதிரிக் கிராமம் நேற்றுக் காலை வீடமைப்பு நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் சஜித் பிரேமதாஸவால் மக்களிடம் கையளிக்கப்பட்டது.

மூளாய் பகுதியில் அமைந்துள்ள பொன்னொளி கிராம வீட்டுத்திட்டத்தில் 65 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு அவர்களுக்கான வீட்டு உரிமப் பத்திரங்களும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் கல்வி இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், யாழ்.அரச அதிபர் நா.வேதநாயகன், வலி.மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் எஸ்.நடனேந்திரன், சங்கானைப் பிரதேச செயலாளர்,உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (இ-10)

# மட்டக்களப்பில் மேலும் மனித எச்சங்கள் மீட்பு



(சத்துருக்கொண்டான்)

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவிலுள்ள சத்துருக் கொண்டான், சவுக்கடி கடற்கரை பகுதியிலிருந்து மேலும் சில மனித எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளதாக மட்டு. தலைமையக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த புதன்கிழமை கிணற்றை புனரமைப்பதற்காக குழி தோண்டும்போது குறித்த இடத்திலிருந்து மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை சம்பவ இடத்திற்கு விரைந்த மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதிபதி ஏ.சீ.றிஸ்வான் முன்னிலையில் விசாரணைகள் இடம்பெற்றன.

அதனைத் தொடர்ந்து நீதவானின் உத்தரவிற்கு அமைவாக குறித்த இடம் தொடர்ந்தும் அகழப்பட்டபோதே மனித மண்டை ஓட்டின் பகுதிகளும், எலும்புகளும் மீட்கப்பட்டுள்ளன.

அத்துடன் அகழ்வுப் பணிகளும் நிறைவுக்கு வந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் இந்த விடயம் தொடர்பாக மட்டக்களப்பு குற்றத்தடயவியல் பிரிவு பொறுப்பதிகாரி ரவிச்சந்திரன் தலைமையில் விசாரணைகள் இடம்பெற்றன.

அத்துடன், நீதிபதியின் உத்தரவிற்கமைய மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையின் சட்ட வைத்திய அதிகாரி சத்துர நந்தசிறி மனித எலும்பு எச்சங்களை பகுப்பாய்வு செய்வதற்காக கொண்டு சென்றுள்ளார்.

இந்த விடயம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(இ-7)

# தரம் ஐந்து புலமைப்பரிசிலுக்கு ரூ.100 மில்.ஒதுக்காதது ஏன்?

## நாடாளுமன்றில் நளின் கேள்வி



(கொழும்பு)

தரம் ஐந்து புலமைப்பரிசிலுக்காக 100 மில்லியன் ரூபா ஒதுக்கியிருந்தால்மேலும் 20 ஆயிரம் மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கி வெட்டுப்புள்ளியை 120 முதல் 125வரை குறைத்து இந்தப் பிரச்சினைக்கு ஓரளவு தீர்வு வழங்கியிருக்க முடியும் என ஜே.வி.பி பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் நளின் ஜெயதிஸ்ஸ தெரிவித்தார்.

2019 வரவு-செலவுத் திட்ட இரண்டாம் வாசிப்பு மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் நேற்று முன்தினம் உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை பிரச்சினை தொடர்பாகவும் எதுவும் குறிப்பிடப்படவில்லை. 168 வெட்டுப்புள்ளிகளை பெற்றாலே இந்தப் பரீட்சையில் சித்தியடைய முடியும். ஒரு பாடத்தில் 84புள்ளிகளைப் பெறாத பிள்ளையை கல்வியறிவு குறைவு பிள்ளையாகப் பெற்றோர் கருதுகிறார்கள்.

இம்முறை வரவு-செலவுத் திட்டத்தில் புலமைப்பரிசில் வழங்க நிதி ஒதுக்கப்படவில்லை. இதற்காக 100 மில்லியன் ரூபா ஒதுக்கியிருந்தால் தற்பொழுது வழங்கப்படும் 15 ஆயிரம் புலமைப் பரிசில்களுக்கு மேலதிகமாக மேலும் 20ஆயிரம் மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்க முடியும். இதனூடாக வெட்டுப்புள்ளியை 120 முதல் 125வரை குறைக்கலாம். மக்கள் 2,000 பில்லியன் ரூபா வரி செலுத்துகையில் ஏன் இந்த நிதியை ஒதுக்க முடியாது.

நாடு முழுவதும் 5வீதமான மக்களுக்கு மலசல கூட வசதி கிடையாது. அம்பாந்தோட்டையில் 10வீதமானவர்களுக்கு இந்த வசதி இல்லை. ஒரு வீதமான மக்களுக்கு கழிப்பறை வசதி கிடையாது என அமைச்சர் ரவூப் ஹக்கீம் 2017இல் கூறியிருந்தார்.

ஆனால் 2012 புள்ளி விபரவியல் மதிப்பீட்டில் 87,000 குடும்பங்களுக்கு மலசலகூட வசதி கிடையாது என அறிவிக்கப்பட்டது. வீடமைப்பு அமைச்சின் புள்ளி விபரங்களின் படி 94,000 குடும்பங்களுக்கு இந்த வசதி இல்லை. ஆனால் 2 இலட்சத்து 64,000 குடும் பங்களுக்கு இந்த வசதி இல்லை என நிதி அமைச்சர் கூறினார்.

வீடமைப்பு அமைச்சர் சஜித் பிரேமதாஸவின் மாவட்டத்தில் 10 வீதமானவர்களுக்கு மலசலகூடம் வழங்கப்படவில்லை. கடந்த ஆட்சியிலும் இந்த குறைபாடு தீர்க்கப்படவில்லை.

இந்த ஆட்சியிலும் இது தொடர்கிறது என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-7)

# பொருளாதார நெருக்கடி இலங்கையில் இல்லை

## சவால்களை வெற்றிகொள்ள அரசு துரிதம்



(கொழும்பு)

இலங்கையில் பொருளாதார நெருக்கடி இல்லை, பொருளாதார சவால்களே உள்ளன. இந்தச் சவால்களை வெற்றிகொள்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. அதற்கிணங்கவே இம்முறை வரவு-செலவுத் திட்டமும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ளது அரசாங்கத்தின் ஐந்தாவது வரவு-செலவுத் திட்டமாக இருந்தாலும் ஐக்கிய தேசியக் கட்சியின் முதலாவது வரவு-செலவுத் திட்டமே என குறிப்பிட்ட அமைச்சர், பொருளாதாரத்தைப் பலப்படுத்தி நாட்டை முன்னேற்றுவதுடன் குறைந்த வருமானம் பெறும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை பலப்படுத்தும் வகையிலேயே இந்த வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

வரவு - செலவுத் திட்டம் தொடர்பில் இதுவரை குறிப்பிடத்தக்க விமர்சனங்கள் எதுவும் முன்வைக்கப்படவில்லை என்பதால் இது எதிர்க்கட்சி உட்பட அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள சிறந்ததொரு வரவு-செலவுத் திட்டமாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

நிதியமைச்சில் நேற்று முன்தினம்நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் விளக்கமளிக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நிதி இராஜாங்க அமைச்சர் எரான் விக்கிரமரட்ண, நிதியமைச்சின் அரச நிதியம் தொடர்பான பணிப்பாளர் நாயகம் விமலேந்திர ராஜா உட்பட முக்கியஸ்தர்கள் கலந்துகொண்ட இந்த செய்தியாளர் சந்திப்பில் அமைச்சர் மங்கள தெரிவிக்கையில்,

சமூக பாதுகாப்பு, சமூக பொருளாதாரத்தை முறைப்படுத்தும் வகையில் இம்முறை வரவு-செலவுத் திட்டத்தில் யோசனைகள் முன்வைக்கப்பட்டன. அரசாங்கம் என்ற பிறைஸ் ஸ்ரீலங்கா திட்டத்தை கடந்த வரவு-செலவுத் திட்டத்தில் அறிமுகப்படுத்தியது.

21ஆம் நூற்றாண்டில் பொருளாதார கேந்திரமாக இலங்கையை கட்டியெழுப்புவதற்காக பல்வேறு செயற்றிட்டங்கள் இதனூடாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

குறைந்த வருமானம் பெறுவோரை பலப்படுத்தும் பொறுப்பு அரசாங்கத்திற்குள்ளது. அதனால் அது தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இம்முறை வரவு-செலவுத் திட்டம் தேர்தலை இலக்காகக் கொண்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக சில தரப்பினரால் பிரசாரம் செய்யப்படுகிறது. உண்மையில் அவ்வாறு இல்லை. தேர்தல் இருந்தாலும் இல்லாவிட்டாலும் நாட்டு மக்களை பலப்படுத்த வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு. அதற்காக நாம் கைகொடுத்துள்ளோம்.

பட்டினியில் உள்ள ஒருவருக்கு மீனொன்றை கொடுப்பதை விட தூண்டில் ஒன்றை கொடுப்பது சிறந்ததல்லவா? அதனையே நாம் செய்துள்ளோம். எதிர்வரும் ஒக்டோபர் மாதத்தில் ஜனாதிபதித் தேர்தல் வரலாம். அதற்கு முன்னர் பொதுத் தேர்தலும் வரலாம். எனினும் தேர்தலை இலக்காகக் கொண்டு நாம் செயற்படவில்லை.

வரவு-செலவுத் திட்டம் தொடர்பில் மூன்று கருத்தரங்குகளில்நான் கலந்து கொண்டுள்ளேன். இந்த வரவு-செலவுத் திட்டம் சிறந்ததென்றே அங்கு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

கடந்த இரண்டு தினங்களாக பாராளுமன்றத்திலும் கூட எதிர்க்கட்சிகள் பெரிதாக குரலெழுப்பவுமில்லை. அவர்களில் சிலர் இது சிறந்த வரவு- செலவுத் திட்டமென கூறுகின்றனர். நாமே மீண்டும் அரசாங்கம் அமைப்போம் என்ற நம்பிக்கையிலேயே இந்த வரவு-செலவுத் திட்டத்தை சமர்ப்பித்துள்ளோம். அரசாங்க ஊழியர்களின் சம்பளம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

2015ஆம்ஆண்டு 10,000 ரூபா கொடுப்பனவு ஒன்றை வழங்கினோம். தற்போது 2,500 ரூபா கொடுப்பனவை வழங்கியுள்ளோம். அமைச்சின் செயலாளர்களின் சம்பளமும் கூடியுள்ளது.

அரசாங்க'ஊழியர்களுக்கான 2,500 ரூபா கொடுப்பனவு ஜுலை முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியமித்துள்ள ஜனாதிபதி சம்பள ஆணைக்குழுவின் அறிக்கை எமக்கு கிடைத்துள்ளது. அது தொடர்பில் ஆராய்ந்து வருகிறோம்.

அரசாங்கம் பெரும் கடன் தொகைகளை செலுத்த வேண்டியுள்ளது. இந்த வருடத்தில் கடனுடன் போராடியே இத்தகைய வரவு-செலவுத் திட்டத்தை நாம் சமர்ப்பித்துள்ளோம் என்றும் மங்கள மேலும் தெரிவித்தார்.(இ-7)

# ஊழல் மோசடி தொடர்பில் கல்வியமைச்சர் காரியவசத்திடம் விசாரணை

(கொழும்பு)

2015-2018 காலப்பகுதியில் ஊழல் மோசடி தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை குழுவிடம் கல்வியமைச்சர் அகிலவிராஜ் காரியவசத்திற்கு எதிராக நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ முன்வைத்த முறைப்பாடு குறித்து விசாரணைகளை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சின் சுரக்ஷா காப்புறுதியோசனை முறைமை மூலம் மாணவர்களுக்கு எந்த வித நன்மையும்ஏற்படவில்லை என அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்காரணமாக 2300



மில்லியன் ரூபா விரயமாகியுள்ளதாக அந்த முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் 2018 ஆம் ஆண்டு 29 மில்லியன் புத்தகங்கள் அச்சிடப்பட்டுள்ளதுடன் அதில் அமைச்சரின் புகைப்படம் மற்றும் வாழ்த்து செய்தி வெளியீடு மூலம் பொதுமக்களின் பணம் முறையற்ற வகையில் பயன்படுத்தப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

இதுதவிர பாடசாலை சீருடைகளுக்கான வவுச்சர் முறைமை காரணமாக மேலதிகமாக 538 மில்லியன் ரூபா ஒதுக்க நேரிட்டதாகவும் அந்த முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, 2015-2018 காலப்பகுதியில் இடம்பெற்ற ஊழல் மோசடி தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவிற்கு இதுவரை 522 முறைப்பாடுகள் கிடைக்க பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# தனுஜன் 'தவிடுபொடி' சௌமியன் 'சரவெடி' வடக்கின் போரில் சென்.ஜோன்ஸ் 'வெற்றிப்படி'

## யாழ்.மத்திய கல்லூரி 'மந்த கதி'



துடுப்பெடுத்தாடும் சென்.ஜோன்ஸ் கல்லூரி வீரர்



அரைச்சதம் அடித்த யாழ்.மத்தியின் இயலரசன்

யாழ்.மத்திய கல்லூரி அணியின் பந்துவீச்சை தவிடு பொடியாக்கிய தனுஜனின் அரைச்சத துடுப்பாட்டமும் சௌமியனின் சர வெடியான ஆட்டமும் கைகொடுக்க, வடக்கின் பெரும் போரில் சென். ஜோன்ஸ் கல்லூரி வீறுநடை போடுகிறது.

யாழ்ப்பாணம் மத்தியின் மிகவும் அதிகப்படியான பொறுமையான ஆட்டம், அணிக்கு எவ்விதத்திலும் கைகொடுக்கவில்லை. சென்.ஜோன்ஸ் இரண்டாவது இனிங்ஸில் அசத்தலாக ஆடி விக்கெட் இழப்பின்றி 121 ஓட்டங்களைக் குவித்துள்ளது.

புனித பரியோவன் கல்லூரி என அழைக்கப்படும் சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் இடையிலான வடக்கின் மாபெரும் போரின் 113ஆவது அத்தியாயம் நேற்று முன்தினம் 7ஆம் திகதி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகியது.

நாணயச் சுழற்சியில் வென்ற யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் அணித் தலைவர் செல்வராசா மதுசன் முதலில் தமது அணி களத்தடுப்பில் ஈடுபடும் என தீர்மானித்தார்.

இதன்படி களமிறங்கிய சென். ஜோன்ஸ் அணி டினோசனின் அதிரடியான 98 ஓட்டங்களின் உதவியுடன், 46.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 181 ஓட்டங்களை எடுத்தது.

பதிலுக்குத்தமது முதலாவது இன்னிங்ஸினை ஆட ஆரம்பித்த யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி, நேற்று முன்தினம் முதல் நாள் ஆட்டநேர முடிவில், 2 விக்கெட்டுக்களை இழந்து 59 ஓட்டங்களை எடுத்திருந்தது.

நேற்றைய 2ஆம் நாளாட்டத்தில் 2ஆவது இன்னிங்ஸை தொடர்ந்த யாழ்ப்பாணம் மத்தியின் துடுப்பாட்டம் மிகவும் மந்த கதியில் இருந்தது.

நிலைத்து நிற்க எத்தனித்த துடுப்பாட்ட வீரர்களால் ஓட்டங்களை எடுக்க முடியவில்லை. எனினும், அந்த நிலையை விஜஸ்காந்த் சிறிது நேரம் அதிரடியாக மாற்றி ஓட்டங்களைச் சேர்த்தார். மறுமுனையில் இயலரசன் அரைச் சதம் கடந்தார். விஜஸ்காந்த் ஆட்டமிழந்ததைத் தொடர்ந்து, யாழ்ப்பாணம் மத்தியின் விக்கெட்டும் மளமளவென வீழ்ந்தது. ஒரு முனையில் நின்றிருந்த இயலரசனால் எதுவும் செய்ய முடியவில்லை.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி, 79.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 195 ஓட்டங்களை எடுத்தது.

இயலரசன் 77, விஜஸ்காந்த் 41ஓட்டங்களை எடுத்தனர்.

பந்துவீச்சில் சென்.ஜோன்ஸ் அணி சார்பாக, செல்வதாஸ் அன்ரன்சரன் 54 ஓட்டங்களுக்கு 3, தெய்வேந்திரம் டினோசன், மகேந்திரம் ஹேமதுசாந்த், எல்சன் டேனுசன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

14 ஓட்டங்கள் பின்னிலையில் தமது இரண்டாவது இன்னிங்ஸினை ஆரம்பித்த, சென்.ஜோன்ஸ் கல்லூரி அணிக்கு ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களான நாகேந்திரராஜா சௌமியன் - கிறிஸ்ரி பிரசன்னா தனுஜன் ஆகியோர் மிகச் சிறப்பான ஆட்டத்தை வெளிக்காட்டினர். இருவரும், வேகமாக ஓட்டங்களை அடித்தாடிப் பெற்றனர். தனுஜன் அரைச்சதம் கடந்தார்.

இந்நிலையில் நேற்றைய இரண்டாவதும் இறுதியுமான நாளாட்டம் நிறைவுக்கு வந்த போது சென்.ஜோன்ஸ் கல்லூரி அணி, 39 ஓவர்களை எதிர்கொண்டு விக்கெட் இழப்பின்றி 121 ஓட்டங்களை எடுத்திருந்தது.

தனுஜன் 57, சௌமியன் 46 ஓட்டங்களுடன் களத்தில் உள்ளனர். போட்டியின் 3ஆவதும் இறுதியுமான நாளாட்டம் இன்றாகும். (26)

# விழுந்து... எழுந்து... சரிந்த இந்தியா

## அவுஸ்திரேலியா அசத்தல் வெற்றி 'கிங்' ஹோலியின் சதம் வீணானது



கன்னிச்சதம் அடித்த மகிழ்ச்சியில் ஆஸியின் கவாஜா



41ஆவது சதம் அடித்த இந்திய அணித் தலைவர் ஹோலி

ஒருநாள் அரங்கில் 'சேஸ்' செய்த போட்டிகளில் ஹோலி (123) சதம் அடித்த பிறகும் இந்திய அணி தோற்றது நேற்று நான்காவது முறையாக நடந்தது. இதற்கு முன் நேப்பியர் (2014ல் 123, நியூசி.), கான்பெரா (2016, 106, ஆஸி.), புனே (2018, 107, மே.தீவுகள்) போட்டிகளில் இது போல தோற்றது.

ராஞ்சி ஒருநாள் போட்டியில் இந்திய அணி 32 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது. தனி நபராக போராடிய அணித் தலைவர் ஹோலியின் சதம் வீணானது. அவுஸ்திரேலிய அணி முதல் வெற்றி பெற்றது.

இந்தியா சென்றுள்ள அவுஸ்திரேலிய அணி ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற கிறது. முதல் இரு போட்டிகளில் வென்ற இந்திய அணி 2:0 என முன்னிலை பெற்றிருந்த நிலையில் இரு அணிகளுக்கும் இடையிலான மூன்றாவது ஒரு நாள் போட்டி ராஞ்சியில் நேற்று நடந்தது.

நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய அணித் தலைவர் ஹோலி, களத்தடுப்பை தேர்வு செய்தார். இந்திய அணியில் எவ் வித மாற்றமும் செய்யப்படவில்லை.

### பின்ச் விளாசல்

அவுஸ்திரேலிய அணிக்கு அணித் தலைவர் பின்ச் - கவாஜா ஜோடி ஆரம்பம் கொடுத்தது. கவாஜா 17 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது ஜடேஜா பந்தில்கொடுத்த 'பிடியை' ஷிகர் தவான்கோட்டை விட்டார். பின்ச் 19வது அரைசதம் எட்டினார். முதல் விக்கெட்டுக்காக 193 ஓட் டங்கள் சேர்த்த போது குல்தீப் சுழலில், பின்ச் (93) ஆட்டமிழந்தார்.

### கவாஜா கலக்கல்

கவாஜா (104) ஒரு நாள் அரங்கில் முதல் சதம் எட்டினார். மக்ஸ்வெல் (47) ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். குல்தீப் வீசிய 44வது ஓவரில் ஷோன் மார்ஷ் (7), ஹேண்ட்ஸ்கோம்ப் (0) ஆட்டமிழக்க, அவுஸ்திரேலிய அணியின் ஓட்டவேகம் வேகம் குறைந்தது.

50 ஓவர்கள் நிறைவில் அவுஸ்திரேலிய அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 313 ஓட்டங்களைக் குவித்தது. கரி (21), ஸ்ரொய்னிஸ் (31) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பந்துவீச்சில் இந்தியா சார்பில் குல்தீப் 3 விக்கெட்டுக்களைச் சாய்த்தார்.

### ஆரம்பம் ஏமாற்றம்

கடின இலக்கைத் துரத்திய இந்திய அணிக்கு ரோகித் சர்மா, ஷிகர் தவான் ஜோடி மீண்டும் மோசமான ஆரம்பம் கொடுத்தது. தவான் 10 பந்துகளில் ஒரு ஓட்டம் எடுத்தார். 2 பவுண்டரிகள், ஒரு சிக்சர் என அடித்து நம்பிக்கை கொடுத்த ரோகித் சர்மா (14) நீடிக்கவில்லை. 143 கி.மீ., வேகத்தில் கம்மின்ஸ் வீசிய பந்தில் அம்பதி ராயுடு (2) போல்டாக, இந்தியா 27/3 ஓட் டங்கள் என தள்ளாடியது.

### தோனி 'அவுட்'

பெரிய வரவேற்பு டன் களமிறங்கினார் தோனி. லயன் பந்தில் சிக்சர் அடித்து ரசிகர்களை உற்சாகப்படுத்தி னார். இம்மகிழ்ச்சி சிறிது நேரம் கூட நீடிக்க வில்லை. ஷாம்பா சுழலில், தோனி (26) போல்டா னார். கைகொடுப்பார் என நம்பப்பட்ட கேதர் ஜாதவ் (26) அணியை கைவிட்டார்.

### ஹோலி சதம்

ஒருபுறம் விக்கெட் சரிந்தாலும் உறுதியான ஆட்டத்தை வெளிப்படுத்திய ஹோலி மட்டும் ஏற்றம் கண்டார். 85வது பந்தில் ஒரு நாள் அரங்கில் 41ஆவது சதம் விளாசினார்.

இந்திய அணி 35.3ஆவது ஓவரில் 200 ஓட்டங்களை எட்டியது. வேகமாக ஓட்டங்கள் சேர்க்க முயற்சித்த ஹோலி 123 ஓட்டங்களுடன் போல்டாக, இந்திய ரசிகர்கள் நம்பிக்கை தகர்ந்தது. விஜய் சங்கர் 32, ஜடேஜா 24 ஓட்டங்கள் எடுத்த போதும் வெற்றிக்கு போதவில்லை. ஷமி (8), கடைசியில் குல்தீப் (10) ஆட்டமிழக்க இந்திய அணி 48.2 ஓவர்களில் 281 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. 32 ஓட்டங்களால் அவுஸ்திரேலியா வெற்றி பெற்றது. நான்காவது போட்டி நாளை சண்டிகரில் நடக்கிறது.


## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை நவரத்தினம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)



நெல்லியடி மகாத்மா வீதியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை நவரத்தினம் அவர்கள் நேற்று (08.03.2019) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும். (C-5727)

இல.34, மகாத்மா வீதி, நெல்லியடி, கரவெட்டி.

தகவல்:- குடும்பத்தினர் 021 226 3069

# கண்ணீர் பூக்கள்



**அமரர் Dr.நடராஜா சிவராஜா**

மலர்வு 12.04.1938 உதிர்வு 06.03.2019

சித்த மருத்துவர்களுக்கு சமுதாய மருத்துவத்தை கற்பித்தும் அவர்கள் தம் அறிவுசார் விருத்தியையும் தொழில்சார் விருத்தியையும் வளர்த்திட்ட எம் ஆசான் சிவராஜா ஐயா அவர்கள் இறைவனின் திருவடியில் பணி சேர பிரார்த்திப்போம்.

(7791)

B.S.M.S தனியார் வைத்தியர்கள் சங்கம்

# சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு திருகோணமலையில் விழிப்புணர்வு

(உப்புவெளி)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு திருகோணமலையில் நேற்று விழிப்புணர்வு ஊர்வலமும் கலந்துரையாடலும் இடம் பெற்றது.




திருகோணமலை உப்புவெளி பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையும் பட்டணமும் சூழலும் பிரதேச சபையும் இணைந்து நடத்திய ஊர்வலத்தில் பிரதேசசபையின்தவிசாளர்வைத்திய கலாநிதி ஜி.ஞானகுணாளன் மற்றும் பொது சுகாதார பரிசோதகர்கள், மருத்துவ தாதிகள், பொது மக்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் என பலர்கலந்து கொண்டனர். (இ-7)

# கண்ணீர் அஞ்சலி



## அமரர். நடராஜா சிவராஜா



தோற்றம் 12 - 04 - 1938

மறைவு 06 - 03 - 2019

வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கத்தின் தலைவர் வைத்திய கலாநிதி அமரர் **நடராஜா சிவராஜா** அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவித்துக் கொள்கின்றோம்

இல- 47/2,ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல-021 221 5925

இல்லப்பிள்ளைகளும், நிர்வாகத்தினரும் வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கம்

(7776)

# இராசி பலன்

09.03.2019

மாசி 25, சனிக்கிழமை

சூரிய உதயம் காலை 6.22 மணிக்கு

திருதியை பின்னிரவு 2.02 மணிவரை

ரேவதி பின்னிரவு 12.24 மணிவரை

சுபநேரம் 3.24 - 4.54 மணிவரை

இராகுகாலம் 9.24 - 10.54 மணிவரை

வளவன்

கிரகநிலை: சந் | செவ் | ராகு | சூரி, புத | சுக் | சனி, கேது | குரு

சந்திராஷ்டமம் உத்தரம், அத்தம் இரவு 11.58 மணிக்கு மேட.சந்

**மேடம்:** திடீர் பயணங்கள் ஏற்படலாம், உறவினர்களின் வருகையுண்டு, எடுத்த காரியத்தை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும்.

**இடபம்:** தொலை தூரத்திலிருந்து சுப தகவல்கள் வந்து சேரலாம், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், எடுத்த காரியத்தில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மிதுனம்:** மன நிறைவு கூடும் நாள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்களின் தகுதியை உயர்த்தும், மறக்க முடியாத சம்பவங்கள் இடம்பெறலாம்.

**கடகம்:** பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து சேரலாம், புதிய முயற்சிகளில் ஆர்வம் கூடும்.

**சிம்மம்:** சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், தொழில் ரீதியான சில தொல்லைகள் ஏற்படலாம், மனதில் இனம்புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும், திருடர் பயமுண்டு.

**கன்னி:** கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, குடும்பத்தினரின் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் வாய்ப்புண்டு, கௌரவமான நாள்.

**துலாம்:** நீண்ட நாளைய பிரச்சினையொன்று நல்ல முடிவுக்கு வரலாம், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் ஏற்படலாம், வாக்கு மேன்மையுண்டு, கௌரவமான நாள்.

**விருச்சிகம்:** விருந்தினர் வருகையுண்டு, காலைப்பொழுதே கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம், வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும்.

**தனுசு:** மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், சுப செலவுகள் அதிகரிக்கும் நாள், வாக்கு மேன்மையுண்டு.

**மகரம்:** உள்ளம் மகிழும் சம்பவமொன்று நடைபெறலாம், ஏட்டிக்குப்போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், வருமானம் திருப்திதரும் வகையில் அமையும்.

**கும்பம்:** பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், உஷ்ண சம்பந்தமான ரோக பயமுண்டு, எடுத்த காரியத்தில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**மீனம்:** மற்றவர்கள் வாங்கிய பொருளைப்பார்த்து நீங்களும் வாங்க முற்படுவீர்கள், மனதில் இனம் புரியாத கற்பனைகளை வளர்த்துக்கொள்வீர்கள, போசன சுகமுண்டு.



கோப்பாய் ஸ்ரீ சுப்பிரமுனிய கோட்டச் சைவச் சிறார்களின் ஏற்பாட்டில் கடந்த திங்கட்கிழமை மஹா சிவராத்திரியன்று காலையில் குருதேவர் ஸ்ரீ சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளின் திருவடிக்கு அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்றன. இந்நிகழ்வில் தொண்டுநாதசுவாமிகளும் வேதாந்தமட ஸ்ரீவேதவித்யாசாகர் சுவாமிகளும் கலந்து சிறப்பித்தனர்.

# திருக்குறள் தேர்வில் பரிசில்கள் பெறுவோர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் உயர்தர மாணவர்களிடையே கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடத்திய திருக்குறள் தேர்வின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன. யாழ்.குடாநாட்டின் 26 உயர்தரப் பாடசாலைகளில் இருந்து 800 பேர் விண்ணப்பித்து 620 பேர் தோற்றிய இத்தேர்வின் பிரகாரம் முதல் எட்டு இடங்களைப் பெற்றுள்ளவர்களுக்கான பரிசில்களும் சான்றிதழ்களும் இன்று 9 ஆம் திகதி சனிக்கிழமை தமிழ்ச்சங்கத்தால் முன்னெடுக்கப்படும் திருவள்ளுவர் விழாவின் போது வழங்கப்படவுள்ளது. பரிசில் பெறவுள்ளவர்களின் விபரம்,

முதலாம் இடம்- யோ. நிவேதித்தா (கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரி), இரண்டாம் இடம்- உ.வர்ணிகா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), மூன்றாம் இடம் இருவர்-கு.நிருஜா (வேம்படி மகளிர் கல்லூரி), ஸ்ரீ.அனுசியா (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), நான்காம் இடம்- ச.சண்முகப்பிரியா (புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரி), ஐந்தாம் இடம்-ஸ்ரீ.அபிநயா (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), ஆறாம் இடம் இருவர்- பா.ராகவன் (கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரி), கோ.ஜெயப்பிரியா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), ஏழாம் இடம் இருவர்- சி.தனுஜா (கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரி), ஜே.லக்சனா (யாழ்.இந்து மகளிர் கல்லூரி), எட்டாம் இடம்- யோ.பிரியதர்சினி (வேம்படி மகளிர் கல்லூரி), ஜோ.கிருஷா (வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி), சி.அனிஸ்ரிகா (மகாஜனக் கல்லூரி), ர.சஜீவினி (வயாவிளான் மத்திய கல்லூரி), வி.மதுமிதா (மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை), ஜெ.அபினா (இளவாலை மெய்கண்டான் ம.வி.) ஆகியோர் என அறிவிக்கப்பட்டுள்ளது. (5-7)




# நல்லொழுக்க செயற்பாட்டு விழிப்புணர்வு நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இந்நாட்டிலிருந்து மதுவையும் புகைத்தலையும் ஒழித்து நல்லொழுக்கமாக வாழ்வதற்கான விழிப்புணர்வுச் செயற்பாட்டு நிகழ்வுகள், கிராம உத்தியோகத்தரின் பங்களிப்புடன் நேற்று 8 ஆம் திகதி மானிப்பாய் மகளிர் கல்லூரியில் ஆரம்பமாகியது.

இதனையடுத்து நாளை மறுதினம் 11 ஆம் திகதி முற்பகல் 11.30 மணியளவில் ஆனைக்கோட்டை உயரப்புலம் மகா வித்தியாலயத்திலும் 12 ஆம் திகதி பிற்பகல் 4 மணியளவில் ஜே/154 மாரீசன் கூடல் உயரப்புலம் பொது மண்டபத்திலும் 13 ஆம் திகதி பிற்பகல் 12.30 மணியளவில் மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் 15 ஆம் திகதி பிற்பகல் 4 மணியளவில் ஜே/131 சாவக்காடு, சாவக்காடு வாசிகசாலையிலும் 22 ஆம் திகதி ஜே/148 சில்லாலை சாந்தை வாசிக சாலையிலும் நடைபெறவுள்ளன. (5)

# நல்லூர் பிரதேச செயலகம் எழுத்தாளர்களுக்கு ஊக்குவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் வறுமைக் கோட்டிற்குட்பட்ட எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் வகையில் அவர்களின் கையெழுத்துப் பிரதியாகவுள்ள ஆக்கங்களைப் பதிப்புச் செய்வதற்கு நல்லூர் பிரதேச செயலகத்தால் நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

எனவே அவ்வாறான எழுத்தாளர்கள் தமது பிரதியுடனும் கிராம அலுவலரின் வருமான சிபாரிசுக் கடிதத்துடனும் தங்கள் விண்ணப்பங்களை 30.03.2019 இற்கு முன்னர் நல்லூர் பிரதேச செயலக கலாசார பிரிவில் சமர்ப்பிக்கும்படி நல்லூர் பிரதேச செயலாளர் எ.அன்ரன் யோகநாயகம் கேட்டுக் கொண்டுள்ளார். (5)

## சதுர்த்தி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை கிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தான சதுர்த்தி உற்சவம் நாளை 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில்நடைபெறும்.(5)



சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணம் தேசிய சேமிப்பு வங்கியில் வங்கி முகாமையாளர் சி.தனீஸ்வரன் தலைமையில் மகளிர்தின நிகழ்வு நேற்று நடைபெற்றது. நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்.மாநகர சபையின் பிரதம கணக்காளர் திருமதி உதயகுமார் இராஜேஸ்வரி, சிறப்பு விருந்தினராக அழகுக்கலை நிபுணர் திருமதி விக்னேஸ்வரலிங்கம் விஜயதர்சினி ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

# கனரக வாகனங்கள் நிறுத்த தடைவிதிக்கத் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

பாடசாலை ஆரம்பிக்கும் முடிவடையும் நேரங்களில் நெல்லியடி - வதிரி - மாலுசந்தி வீதியில் கனரக வாகனங்கள் உள்செல்ல, தரித்துநிற்க, பொருட்கள் இறக்க தடை விதிப்பது என்று தீர்மானிக்கப்பட்டது.

கரவெட்டி பிரதேசசபையின் மாதாந்த கூட்டம் அண்மையில் பிரதேசசபை மண்டபத்தில் தவிசாளர் த.ஐங்கரன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது பாடசாலை நேரத்தில் மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினையினை கருத்திற் கொண்டு நெல்லியடி - வதிரி - மாலுசந்தி வரையான வீதியில் இரண்டு பெரிய பாடசாலைகள் இருக்கின்றன. அங்கு இரண்டாயிரம் வரையான மாணவர்கள் கல்வி கற்கிறார்கள். அவர்கள் பாடசாலை வரும் போதும் திரும்பிச் செல்லும் போதும் கனரக வாகனங்களால் தடைகள் ஏற்படுகின்றன.

இதனை கருத்திற் கொண்டு மேற்படி வீதியில் காலை 7 மணி யில் இருந்து 7.45 மணி வரையும் பிற்பகல் 1.15 மணியில் இருந்து 2 மணி வரையும் கனரக வாகனங் கள் உட்செல்வதும் தரித்து நிற்பது, பொருட்கள் இறக்க தடை விதிப்பது என்றும் இது தொடர்பில் நெல்லியடி பொலிஸாருக்கும் அறிவிப்பது என தீர்மானிக்கப்பட்டது. (5-60)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வட இலங்கை சமாதான நீதவான் சங்கப் பொதுக்கூட்டம் நாளை 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் நாவலர் கலாசார மண்டபத்தில் கலாநிதி பீ.ஜெயவிந்தன் (ஜே.பி.) தலைமையில் நடைபெறும். இதில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட மனித உரிமைகள் திரியாய பவுண்டேசன் பொறுப்பாளர் அருட்பணி நடராஜா சுபாஸ் ஆகியோர் கலந்து கொள்வர். (5)

# நல்லூரில் இன்று திருவள்ளுவர் விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கம் முன்னெடுக்கும் திருவள்ளுவர் விழா இன்று 9 ஆம் திகதி பிற்பகல் 4.30 மணியளவில் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் தமிழ்ச்சங்கத் தலைவர் ச.லலீசன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் தமிழகத்தின் பிரபல பேச்சாளர் இலக்கியச்சுடர் த.இராமலிங்கம் தலைமையில் பட்டிமண்டபம் நடைபெறும். இவ் விழாவையொட்டி நடத்தப்பட்ட திருக்குறள் தேர்வுக்கான பரிசளிப்பும் இடம்பெறும். (5-7)

# மகளிர் தினப்பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பெண் விடுதலைச் சிந்தனை அமைப்பு, சமூக மேம்பாட்டுக் கழகம், சமூக மேம்பாட்டு இணையம் ஆகிய பொது அமைப்புகளின் ஏற்பாட்டில் சர்வதேச மகளிர் தின விசேட பொதுக்கூட்டம் நாளை மறுதினம் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று பிற்பகல் 3.30 மணியளவில்இல. 62, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி என்ற முகவரியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவை[illegible]ர் கவிஞர் முருகையன் [illegible]கட்போர் கூடத்தில் பெண் விடுதலைச் சிந்தனை அமைப்பின் யாழ். மாவட்டத்திற்கான தலைவர் திருமதி சிவாஜினி சுரேஸ்குமார் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் வரவேற்புரையினை சமூக, அரசியல் செயற்பாட்டாளர் திருமதி வசந்திராதேவி கதிர்காமநாதன், விசேட உரைகளை சர்வதேச ஊடகவியலாளரும் சமூக செயற்பாட்டாளருமான துளசி முத்துலிங்கம், தொழிற்சங்க செயற்பாட்டாளர் திருமதி தீபா ஸ்ரீதரன், வலி. கிழக்குப் பிரதேச சபை உறுப்பினர் சசிநந்தினி தேவன், ஆசிரியை திருமதி உமாதேவி பார்த்தீபன் ஆகியோர் ஆற்றவுள்ளனர். (5-7)

# நீதிநூல் தொகுப்புகள் அறிமுக விழா இன்று

(யாழ்ப்பாணம்)

இந்து சமய அறநெறிக் கல்வி புதிய பாடத்திட்டத்திற்கமைவாக வெளியிடப்பட்ட நீதி நூல் தொகுப்புக்களின் அறிமுக விழா இன்று 9 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணியளவில் யாழ்ப்பாணம் நீராவியடி இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வானது நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் முன்னிலையில் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெறும்.

இதில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் நா.வேதநாயகன் கலந்து கொள்வார். (5)

# மெய்ப்பொருள் காண்பது அறிவு சிறுகதை தொர்குப்பு நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

"மெய்ப்பொருள் காண்பது அறிவு" சிறுகதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா நாளை 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் தச்சன் தோப்பு கனகம்மா நினைவாலயத்தில் யாழ். நாவற்குழி மகா வித்தியாலய அதிபர் சி.பவளகுமாரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் யாழ். கைதடி குருசாமி வித்தியாலய அதிபர் ந.ஜெயரூபன் வெளியீட்டுரையையும் வலம்புரி பிரதம ஆசிரியர் ந.விஜயசுந்தரம் ஆய்வுரையையும் வழங்குவர். (இ-5)

# நெல்லுக்கான உத்தரவாத விலையை கோரி ஆர்ப்பாட்டம்



(கொழும்பு)

இம்முறை பாதீட்டில் விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கப்படவில்லை என தெரிவித்தும் நெல்லுக்கான உத்தரவாத விலை பெற்றுத் தருமாறு கோரியும் நேற்று நாட்டில் பல்வேறு பகுதிகளில் விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேவேளை, எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் அமுலாகும் வகையில் நாடு மற்றும் சம்பா ஆகிய அரிசிகளுக்கான உச்ச விலை வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. விவசாய அமைச்சர் பீ.ஹரிசன் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய நாடு அரிசி கிலோ ஒன்றுக்காக 80 ரூபாவும், சம்பா அரிசி கிலோ ஒன்றுக்காக 85 ரூபாவாகவும் விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (இ-7)

## வீடு,காணி விற்பனை

வேம்படி சந்தியில் அமைந்துள்ள மாடி வீட்டுடன் முகப்பு கடைத்தொகுதியும் கொண்ட 3 1/4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு:**

**தொ.இல:- 077 315 1500**

**காலை 7.00 முதல் மாலை 5.00வரை**

(C-5713)

## தனிப்பட்ட ஆங்கில,விஞ்ஞான வகுப்புக்கள்

- தரம் 6-11 வரை மாணவருக்கான ஆங்கில மொழி மூல விஞ்ஞான வகுப்பு.
- மாணவர் மற்றும் வேலை செய்வோருக்கான ஆங்கில வகுப்பு.

தனிப்படவும், சிறு குழுவாகவும் நடைபெறுகிறது.

**இடம்:-இணுவில்.**

**தொடர்பு இலக்கம்:- 077 960 6133**

(7763)

## கிராம அபிவிருத்தி திணைக்களம், வடக்கு மாகாணம் பகிரங்க ஏல விற்பனை

வருடாந்த பொருட்கணக்கெடுப்பில் விற்பனைக்கு சிபார்சு செய்யப்பட்ட பாவிக்கப்பட்ட தையல் இயந்திரங்கள், 27.03.2019 ஆம் திகதி புதன்கிழமை காலை 10.00 மணியளவில் திணைக்கள முன்றலில் ஏலத்தில் விடப்படவுள்ளது. ஏலத்தில் எடுக்கப்படும் பொருட்களுக்குரிய பெறுமதி செலுத்தப்பட்டு பொருட்கள் உடனடியாக வளாகத்தை விட்டு அகற்றப்பட வேண்டும்.

**திருமதி. ந.இன்பராஜ், பணிப்பாளர்,**
**கிராம அபிவிருத்தி திணைக்களம்,**
**வடக்கு மாகாணம்.**

(C-5720)

**வலம்புரி**
**021 221 7603, 021 567 1532**
**விளம்பரத் தொடர்புகளுக்கு**

## பகிரங்க ஏல விற்பனை - 2019
## பருத்தித்துறை பிரதேச சபை - புலோலி

பருத்தித்துறை பிரதேச சபை புலோலியிலும் குடத்தனை உப அலுவலகத்திலும் உள்ள பழைய கட்டுமானப் பொருட்களும் அலுவலக தளபாடங்கள், உபகரணங்களும் பகிரங்க ஏலத்தில் பின்வரும் திகதி,விபரப்படி விற்பனை செய்யப்படவுள்ளன. ஏல விற்பனையில் பொருட்களை கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் மேற்குறித்த அலுவலகங்களில் ஏல விற்பனை நடைபெறும் நாளுக்கு முதல் நாள் மு.ப 9.00 மணிமுதல் பி.ப 1.00 மணி வரை பொருட்களைப் பார்வையிடலாம். ஏலவிற்பனைப் பொருட்களைப் பெறுகின்றவர்கள் உடனடியாக முழுப் பணத்தினையும் செலுத்தி பற்றுச் சீட்டினைப் பெற்று அன்றையதினம் மாலை 4.00 மணிக்கு முன்னர் பொருட்களை அவ்விடத்தில் இருந்து அகற்றுதல் வேண்டும்

ஏலவிற்பனைத் திகதி : 07.03.2019
வியாழக்கிழமை: மு.ப.09.30 மணி
இடம் :- குடத்தனை உப அலுவலகம்,

**பருத்தித்துறை பிரதேச சபை.**

| தொ. இல | விபரம் | எண் |
|---|---|---|
| 1 | Computer Chair | 01 |
| 2 | Computer Table | 01 |
| 3 | Almirah Steel File | 05 |
| 4 | Moniter | 01 |
| 5 | UPS | 02 |
| 6 | Key board | 03 |
| 7 | Knife Small | 02 |
| 8 | Type Writer | 01 |
| 9 | White board | 02 |
| 10 | Printer | 01 |
| 11 | Hummer | 01 |
| 12 | Bucket | 01 |
| 13 | Office Table Executive | 01 |
| 14 | Plastic Chair | 03 |
| 15 | Table large Steel | 01 |
| 16 | Grass cutter | 01 |
| 17 | Forest Knife | 04 |
| 18 | Shovel | 03 |

ஏலவிற்பனைத் திகதி : 07.03.2019
வியாழக்கிழமை :மு.ப 10.30 மணி
இடம்:- வாகனதரிப்பிடம், ஆனைவிழுந்தான்

**பருத்தித்துறை பிரதேச சபை.**

| தொ. இல | விபரம் | எண் |
|---|---|---|
| 19 | Rake | 02 |
| 20 | Chair Normal | 03 |
| 21 | சாய்மனைவாங்கு | 01 |
| 22 | ஓடு | 1800 |
| 23 | முகட்டு ஓடு | 20 |
| 24 | பழையபற்றரிகள் | 06 |
| 25 | நிலை | 07 |
| 26 | ஜன்னல் கதவுடன் (பெரிது) | 01 |
| 27 | கதவுடன் நிலை | 03 |
| 28 | யன்னல் நிலை | 33 |
| 29 | கதவு | 01 |
| 30 | Radiator | 01 |
| 31 | வாகனஉதிரிப்பாகங்கள் | - |
| 32 | பழையரயர்கள் | 23 |
| 33 | பழையபோத்தல்கள் | 150 |

**தவிசாளர்**
**பருத்தித்துறை பிரதேச சபை,**
**புலோலி.**

(C-5721)

## 60 ஆவது அகவையில் பிறந்தநாளும் சேவை நயப்பும்



எமது பாடசாலையில் 5 ஆண்டுகள் ஆசிரியராகவும் கிளிநொச்சி கல்வி வலயத்தில் 2 1/2 ஆண்டுகள் சேவைக் கால ஆசிரிய ஆலோசகராகவும் 4 ஆண்டுகள் அழகியல் பாட உதவிக் கல்விப்பணிப்பாளராகவும் கடமையாற்றியதோடு, வாழ்வில் 37 ஆண்டுகள் அளப்பரிய கல்விச் சேவையாற்றி இன்று (09.03.2019) அகவை அறுபதில் ஓய்வு பெறும்

**திருமதி. திலகவதியார் பொன் குணரத்தினம்**

அவர்களின் சேவையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Congratulations

**சேவை விபரம்:**

- யா/கரம்பன் சிறிய புஸ்பம் மகளிர் மகா வித்தியாலயம்: 19.05.1982-31.07.1989
- யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்:01.08.1989-18.05.1996
- கிளி/உருத்திரபுரம் ம.வி: 19.05.1996-17.11.1996
- மு/மல்லாவி மத்திய கல்லூரி:18.11.1996-31.07.2002
- யா/வண்ணார்பண்ணை இளையதம்பி வித்தியாலயம்: 01.08.2002 -07.01.2003
- யா/இராமநாதன் கல்லூரி: 08.01.2003-30.09.2005
- யா/விக்ரோறியாக் கல்லூரி:01.10.2005-02.01.2006
- யா/பண்ணாகம் மெய்கண்டான் ம.வி.:03.01.2006-15.01.2006
- கிளி/உருத்திரபுரம் ம.வி.: 16.01.2006-29.03.2007
- கிளி/புனித பற்றிமா றோ.க.த.பாடசாலை: 30.03.2007-30.12.2007
- வலயக்கல்வி அலுவலகம், கிளிநொச்சி (ஆசிரிய ஆலோசகர்): 03.01.2008-30.06.2010
- வலயக்கல்வி அலுவலகம், கிளிநொச்சி (உதவிக் கல்விப் பணிப்பாளர், அழகியல்): 01.07.2010-23.07.2014
- யா/பண்ணாகம் மெய்கண்டான் ம.வி.: 24.07.2014-08.03.2019

**வாழ்த்துவோர்:**
**யா/பண்ணாகம் மெய்கண்டான் ம.வி.**
**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**

(7784)

## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: சதயம் 3
கி.பா: 15 ¼
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:B.Sc, அரசஆசிரியர்
எதிர்பார்ப்பு:பட்டதாரி,வங்கி,ஆசிரியர்,உள்நாடு
தொ.இ: B/9423

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்:ஆயிலியம் 3
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:MBBS Doctor
எதிர்பார்ப்பு: சைவபோசனம்,உள்நாடு
தொ.இ: B/9424

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்:திருவோணம்
கி.பா:13 ¾
உயரம்: 5'8"
தகைமை/தொழில்:B.Sc, M.Sc, Programme Officer
எதிர்பார்ப்பு: பட்டதாரி,நிரந்தரதொழில், உள்நாடு
தொ.இ: B/9429

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 2
கி.பா: செவ் 7 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:A/L, Canada
எதிர்பார்ப்பு: A/Lமேல், தொழில் தகைமை, உள்நாடு,வெளிநாடு
தொ.இ: B/9430

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்:அவிட்டம் 1
கி.பா: 59செவ் 8 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:BA, LLB Lawyer
எதிர்பார்ப்பு: Engineer, Accountant, பட்டதாரி(BAதவிர்ந்த),உள்நாடு, வெளிநாடு
தொ.இ: G/9434

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: உத்தராடம் 4
கி.பா: 51 ½
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:A/L, (HNDA -1year)
எதிர்பார்ப்பு:அரசதொழில்,உள்நாடு வெளிநாடு
தொ.இ: G/9436

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்:பூசம் 3
கி.பா: 33 ¼
உயரம்: 5'1"
தகைமை/தொழில்:A/L,Bank
எதிர்பார்ப்பு: படித்த உத்தியோகத்தர், உள்நாடு,வெளிநாடு
தொ.இ: G/9442

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்:மகம் 2
கி.பா: 43
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:College of Education, அரசஆசிரியர்
எதிர்பார்ப்பு: அரச தொழில்,உள்நாடு
தொ.இ: G/9445

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
**அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை**
**விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை**
**பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.**

# அதிபர், ஆசிரியர்கள் ஒன்றிணைந்து 13 ஆம் திகதி கவனயீர்ப்புப் போராட்டம்

## ஆசிரியர் சங்கங்கள் கூட்டாக அழைப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு, கிழக்கு உள்ளிட்ட அனைத்து மாகாணங்களிலும் எதிர்வரும் 13 ஆம் திகதி புதன்கிழமை அதிபர், ஆசிரியர்கள் ஒன்றிணைந்து கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுக்கவுள்ளனர். இதற்கான அழைப்பை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சரா.புவனேஸ்வரனும், இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலினும் கூட்டிணைந்து விடுத்துள்ளனர்.

தொடர்ச்சியாக வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஹர்த்தால்களும் கடையடைப்புக்களும் காலத்தின் தேவை கருதி நடைபெறுகின்றன. அவற்றுக்குத் தீர்வு கிடைக்க வேண்டும் என எமது ஆதங்கங்களையும் அநீதிகளையும் உலகுக்கு எடுத்துக்காட்டுகின்றோம். அதன் ஒரு செயற்பாடாக கடந்த 25.02.2019 அன்று நடைபெற்ற வடமாகாணம் தழுவிய காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கான போராட்டத்தில் நாம் முழுமையாக பங்கு கொண்டோம். அவ்வாறே அடக்குமுறைகளுக்கும் அநீதிகளுக்கும் எதிரான போராட்டங்களுக்கு நாம் பூரண ஆதரவையும் வழங்கி வருகின்றோம்.

அதேபோன்று குறைந்த வேதனங்களோடு பணியாற்றுகின்ற அதிபர்கள், ஆசிரியர்கள் தமது வேதனங்கள் அதிகரிக்கப்பட வேண்டும் எனவும் அவசியமற்ற சுமைகள் நீக்கப் படவேண்டும் எனவும் மத்திய அரசு கல்விக்காக ஒதுக்கும் நிதி போதுமானதாக இல்லை எனவும் பல போராட்டங்களை முன்னெடுத்தும் எந்தப் பயனும் இல்லை.

இந் நிலையில் எதிர்வரும் 13.03.2019 அன்று புதன்கிழமை

1. ஆசிரியர்கள், அதிபர்களின் சம்பளத்தை உயர்த்துதல்.

2. ஆசிரியர்கள் மீது செலுத்தப்படும் தேவையற்ற நெருக்கீடுகளை அகற்றுதல்.

3. மொத்த தேசிய உற்பத்தியில் கல்விக்காக 6% ஒதுக்குதல் ஆகிய மூன்று முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து அதிபர்கள், ஆசிரியர்கள் முன்னெடுக்கும் போராட்டங்களை மாணவர்களும் பெற்றோரும் புரிந்து கொள்ளும் விதத்தில் அதிபர்கள், ஆசிரியர்கள் அனைவரும் பாடசாலைக்குச் சென்று காலை 8 மணிமுதல் காலை 8.30 மணிவரை கைகளில் கறுப்புப்பட்டி அணிந்து பாடசாலை நுழைவாயில் அமைதியாக ஒன்றுகூடி தமது கவனயீர்ப்பை வெளிப்படுத்தி, அன்றைய நாள் முழுவதும் கறுப்புப் பட்டியுடன் கடமையில் ஈடுபடுவது என முடிவுசெய்யப்பட்டுள்ளது.

இக்கவனயீர்ப்புப் போராட்டத்திற்கு அனைத்துத் தொழிற்சங்கங்களையும் ஆதரவளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம் என அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# சீன மக்கள் குடியரசின் தூதுவர் கட்டளைத் தளபதியுடன் சந்திப்பு







(கொழும்பு)

சீன மக்கள் குடியரசின் தூதுவர் சேன்க் சுயுவான் (Cheng Xueyuan) உட்பட பிரதிநிதிகள்குழு நேற்று முன்தினம் வட மத்திய கடற்படைத்தளத்திற்கு விஜயமொன்று மேற்கொண்டுள்ளனர்.

அங்கு அவர்களை கடற்படை மரபுகளுக்கமைய மரியாதை செலுத்தி ரியர் அட்மிரல் முதித கமகே வரவேற்பளித்தார்.

அதன்பின் இவர்களுக்கிடையில் சிநேகபூர்வ கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெற்றதுடன் இந் நிகழ்வை நினைவுகூரும் வகையில் நினைவுச் சின்னமும் பரிமாறிக் கொள்ளப்பட்டன. (இ-7)

# அமெரிக்கத் தூதுவர்-மாநகர முதல்வர் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)



இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலெய்னா பி டெப்ளிட்ஸ் (ALAINA B. TEPLITZ) கடந்த ஆறாம் திகதி யாழ். மாநகர முதல்வர் இ.ஆனல்டைச் சந்தித்தார். இச் சந்திப்பில் பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.

தூதுவர் முதலில் தற்போது மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் மக்களின் நிலைப்பாடுகள் எவ்வாறு காணப்படுகின்றன என்பது பற்றி முதல்வரிடம் வினவினார்.

இதற்கு பதிலளித்த முதல்வர் மக்கள் பெரும் அச்சத்தோடு இருக்கின்றனர். நம்பிக்கையை இழந்து விட்டனர். காரணம் என்னவென்றால் இலங்கை மீதான ஐ.நாவின் 30.1 தீர்மானம் மற்றும் 34.1 தீரமானங்கள் ஊடாக மக்கள் எதிர்பார்த்திருந்த நீண்டகால அரசியல் அபிலாசைகளுக்கு தீர்வு கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பு கடந்த ஒக்டோபர் மாதம் நடைபெற்ற அரசியல் புரட்சியுடன் பாராளுமன்றில் 2/3 பெரும்பான்மை இல்லாது போனதுடன் நம்பிக்கை இழக்கப்பட்டு விட்டது.

பெரும்பான்மை கிடைத்தால் மாத்திரமே இது சாத்தியம். எனவே மக்கள் அந்த நம்பிக்கையை இழந்து விட்டனர்.

மேலும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் மேற்கொள்ளப்பட்டுவரும் நூற்றுக்கணக்கான நாட்களுக்கு மேற்பட்ட போராட்டங்களுக்கு இதுவரை விடை காண முடியாத பிரச்சினையாக இருக்கின்றது.

இதற்கு எவ்வாறாயினும் விடை கண்டாக வேண்டும். காணாமல் போனவர்களுக்கு என்ன நடந்தது? என்பதற்கான பதிலை உரிய தரப்பினர் முன்வைக்க வேண்டும். அதற்கான ஏற்பாடாக காணாமல் போனவர்களைக் கண்டறிவதற்கான ஆணைக்குழுவை உருவாக்கியிருந்தாலும் உரிய காலத்தில் ஆரம்பிக்காது காலம் தாழ்த்தியமையே பாரதூரமாக அமைந்தது. எனவே ஒவ்வொரு விடயங்களும் உரிய காலத்தில் செய்யப்படாது காலம் தாழ்த்தி மேற்கொள்ளப்படுவதே இந்த அவநம்பிக்கைக்குரிய காரணம்.

எனவே காணா மல் போனவர்களுக்கான பதிலை அரசாங்கம் சொல்ல வேண்டும். அரசிற்கு பொறுப்புள்ளது. அதற்கான பொறிமுறை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். மேலும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும் இவ் விடயத்தில் முழுமையாகப் பொறுப்புக்கூற வேண்டியவர்களாக இருக்கின்றார்கள். அதில் மாற்றுக் கருத்து இல்லை. ஏன் என்றால் மக்கள் 2009 ஆம் ஆண்டிற்குப் பிறகு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்குத்தான் ஏகோபித்த உரிமையைத் தந்தார்கள். எனவே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இப் பொறுப்பிலிருந்து விலகிச் செல்ல முடியாது என்ற கருத்தை முன்வைத்தார். முதல்வரின் கருத்தை தூதுவர் வரவேற்றார்.

இதேவேளை புதிய அரசியலமைப்பு முயற்சிகள் குறித்து பேசும் போது, அமெரிக்காவின் கண்காணிப்பு தொடர்ந்து கொண்டுதான் இருப்பதாகவும் அதற்கான ஒத்துழைப்புக்கள் தொடர்ந்தும் இருக்கும் என்ற கருத்தையும் தூதுவர் பதிவு செய்து கொண்டதுடன், ஜெனிவாவில் இம்முறை இலங்கைக்கு வழங்கப்படுகின்ற கால அவகாசத்தால் மாத்திரமே இலங்கையின் நிகழ்ச்சி நிரலை தொடர்ந்து கொண்டு இலங்கையின் நடவடிக்கைகள் தொடர்பில் கண்காணிக்க முடியும் என்றும் இல்லாவிட்டால் ஜெனிவா கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பான நிகழ்ச்சி நிரல் இல்லாது போய்விடும் என்ற கருத்தை தூதுவரே குறிப்பிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இக் கருத்தையே கூட்டமைப்பும் வலியுறுத்தி வருவதை தான் அறிந்துள்ளதாகவும், அது வரவேற்கதக்கது என்றும் குறிப்பிட்டிருந்தார்.

இறுதியாக ஆட்சி மாற்றம் குறித்து தூதுவர் வினவியதற்கு பதிலளிக்கையில், 2015 ஆம் ஆண்டிற்கு முன்னர் இருந்த நிலைமையை விட 2015 இற்குப் பின்னர் முழுமையாக இல்லா விடினும் ஓரளவேனும் சாத்தியமான சாதக நிலைமைகள் தோன்றியிருக்கின்றன. காணிகள் விடுவிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

ஆனாலும் முன்னேற்றம் போதுமான அளவு இல்லை. இன்னும் முன்னேற்றம் தேவைப்படுகின்றது. எனவே அரசியல் ரீதியான தீர்வுகளை நோக்கி பயணிக்கின்ற அதேநேரம் அபிவிருத்தி மற்றும் இதர தேவைகள் குறித்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற கருத்தை குறிப்பிட்டிருந்தார்.

இச் சந்திப்பில் தூதுவருடன் அமெரிக்கத் தூதுவராலயத்தின் பொது விவகார அலுவலர் டேவிட் ஜே மெக்குரி - (DAVID J MCGUIRE), அமெரிக்க தூதுவராலயத்தின் அரசியல் பிரிவு தலைவர் அந்தோனி எப்.ரென்சுலி (ANTHONY FRENZULLI), மற்றும் யாழ். மாநகர சபை ஆணையாளர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (இ-7)

# சர்வதேச பாடசாலை பணிப்பாளராக மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன

## பெற்றோர் கடும் அதிருப்தி

(கொழும்பு)



கொழும்பில் அமைந்துள்ள தனியார் சர்வதேச பாடசாலை ஒன்றில் நிர்வாகப் பணிப்பாளராகப் பணியாற்றும் இளைப்பாறிய மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன தொடர்பில் பெற்றோர் கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

இவர் குறித்த கல்லூரியின் நிர்வாகத்தில் முரண்பட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார் என்று ஆங்கில ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

போர்க்காலத்தில் விடுதலைப்புலிகள் மற்றும் ஜே.வி.பியின் கிளர்ச்சியின் போது மேற்கொண்ட எதிர்ப்பு நடவடிக்கைப் போன்று அவர் தமது செயற்பாடுகளை மேற்கொள்கிறார் என்று பெற்றோர் குற்றம் சாட்டியுள்ளார்.

இதன் ஒருகட்டமாக பாடசாலை தவணைக் கட்டணத்தை செலுத்தவில்லை என்ற குற்றச்சாட்டை முன்வைத்து நுகேகொட மற்றும் ஹெவ்லொக் ரோட் ஆகிய இடங்களில் அமைந்துள்ள கல்லூரிகளில் கற்ற இரண்டு மாணவர்கள் பாடசாலைகளில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

அதேநேரம் பாடசாலையின் தவணைக்கட்டணமும் ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டதைக் காட்டிலும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக பெற்றோர் சுட்டிக்காட்டியுள்ளனர். (இ-7)

# நாடு முழுவதும் சமுர்த்தி உணவகம்

(கொழும்பு)

நாடு முழுவதிலும் உள்ள சமுர்த்தி சமூக நிதி வங்கி சங்கங்கள் வளவில் நவீன வசதிகளைக் கொண்ட ஆரோக்கியமான உணவகங்களை ஆரம்பிப்பதற்கு ஆரம்ப கைத்தொழில் மற்றும் சமூக ஊக்குவிப்பு அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

அமைச்சர் தயாகமகேவின் ஆலோசனைக்கமைய அமைக்கப்பட்டுள்ள முதலாவது ஆரோக்கிய உணவகம் காலி பத்தேகம சமுர்த்தி சமூக நிதி சங்க வளவில் நேற்றுத் திறக்கப்பட்டது.

இந்த உணவகத்துக்காக 25 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

சமுர்த்தி பெண்களை ஊக்குவிப்பதற்காக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள இந்த வேலைத்திட்டம் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் தொழில் அபிவிருத்தி வேலைத்திட்டத்தினால் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

ஆரோக்கியமான உணவகத்தின் மூலம் நச்சுதம்மை அற்ற இயற்கை உரத்தை பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட அறுவடைகள் மூலம் தயாரிக்கப்பட்ட உணவு வகைகளை விற்பனை செய்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உணவுப்பொருட்களை தயாரிப்பது தொடர்ப்பில் சமுர்த்தி பயனாளிகளான பெண்களை பயிற்றுவித்து ஊக்குவிக்கப்பட்டுள்ளனர். (இ-7)

# ஐ.நா.தீர்மானம் தொடர்பில் நாம் ஏமாற்றப்பட்டுள்ளோமா?

## அமெ.தூதுவரிடம் ஆதங்கப்பட்ட சிறீதரன் எம்.பி.

(யாழ்ப்பாணம்)

**தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு ஐ.நா. தீர்மானத்தின் மூலம் நீதி கிடைக்குமா? அல்லது இப்படியே ஏமாற்றப்பட்டு எமது மக்களுக்கு நீதி கிடைக்காமல் போகுமா? எமது மக்களுக்கான முடிவுதான் என்ன என அமெரிக்க உயர்ஸ்தானிகரிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் ஆதங்கப்பட்டுள்ளார்.**

ஐக்கிய நாடுகள் சபையின் அமர்வில் இம்முறை இலங்கை தொடர்பான ஐ.நா. தீர்மானம் கொண்டுவரப்படவுள்ள நிலையில், இது தொடர்பில் பல தரப்பினராலும் பல்வேறுபட்ட சர்ச்சைகளடங்கிய கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ள வேளையில், அமெரிக்க உயர்ஸ்தானிகரான அலைனா ஸ்ரெபீஸை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சந்தித்துக் கலந்துரையாடிய போதே அவரிடம், பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் மேற்படி ஆதங்கத்தைத் வெளிப்படுத்தினர்.

நேற்றுமுன்தினம்மாலை 4.30 மணியளவில் திருநெல்வேலியிலுள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் அமெரிக்க உயர்ஸ்தானிகரான அலைனா ஸ்ரெபீஸ்க்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களான சி.சிறீதரன், ஈ.சரவணபவன் மற்றும் வடமாகாண அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் ஆகியோருக்கும் இடையிலான கலந்துரையாடல் இடம்பெற்றது.



இந்தச் சந்திப்பு குறித்து சிறீதரன் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை தொடர்பான ஐ.நா.சபையின் தீர்மானங்கள் நிறைவேற்றப்படவுள்ள நிலையில், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரது உறவினர்களும் இலங்கைக்குக் காலஅவகாசம் வழங்கக்கூடாது என்கிறார்கள். அதேபோல புலம்பெயர் தேசத்திலுள்ள அமைப்புக்களும் காலஅவகாசம் வழங்கக்கூடாது என்கிறார்கள். இதே நேரம் இலங்கையின் ஜனாதிபதியும் ஐ.நா. சபையால் இலங்கைக்குக் காலஅவகாசம் என்பது வழங்கப்படத் தேவையில்லை. இதனை இவ்வாறே விட்டு விடுங்கள் எனக் கூறுகின்றார். இந்நிலையில் இதன் தார்ப்பரியம் என்ன? இது என்னவாக நடக்கும்? நாம் ஏமாற்றப்பட்டு விட்டோமா? ஐ.நாவாலும் எமக்கு நீதி கிடைக்காதா? என அமெரிக்க உயர்ஸ்தானிகரிடம் நாம் எமது தரப்புக் கருத்துக்களை வெளிப்படுத்தியிருந்தோம். அதற்கு அவர், தாங்கள் இலங்கை தொடர்பில் எடுத்துள்ள தீர்மானங்களிலிருந்து விலகவில்லை எனவும் தாங்கள் அதனை கைவிட்டு விடாத வகையில் முன்னெடுத்துச் செல்வோம் எனவும் இலங்கை ஒரு இறைமையுள்ள நாடு என்ற வகையில் அதனை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பது தொடர்பில் நாம் செயற்பட்டு வருகின்றோம்.

இலங்கையுடன் சேர்ந்து சில விடயங்களைக் கையாள்வதா? அல்லது எதிர்த்து நின்று முன்னெடுப்பதா? அப்படி நாம் எதிர்த்தால் இலங்கையுடன் அவர்களுக்கு ஆதரவாக யார் யார் கூட்டுச் சேர்வார்கள் என்பது தொடர்பிலும் நாம் கவனம் செலுத்தியே எமது முன்னெடுப்புக்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது. ஆனாலும் நாம் இவ் விடயத்தைக் கைவிடவில்லை.

இம்மக்களுக்கு நீதி கிடைக்கும் வரை அமெரிக்கா அவர்களுக்காகச் செயற்படும் என சிறீதரன் மேலும் தெரிவித்தார். (இ-7)

## மாகாண சபைத் தேர்தல்கள் தொடர்பான மனு ஒத்திவைப்பு

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தல்களை உடனடியாக நடத்த தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உத்தரவிடுமாறு வலியுறுத்தி தாக்கல் செய்யப்பட்ட மனு, எதிர்வரும் 29 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளதாக உயர் நீதிமன்றம் நேற்று அறிவித்துள்ளது.

சிசிர டி ஆப்ரு, பிரசன்ன ஜயவர்தன மற்றும் ப்ரீதி பத்மன் சுரசேன ஆகிய நீதியரசர்களால் இந்த உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

சத்ய கவேஷகயோ என்ற அமைப்பினால் குறித்த மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

எல்லை நிர்ணயம் என்று கூறிக்கொண்டு தேர்தலை தற்போதைய அரசாங்கம் பிற்போடுவதாகவும் இதனால் 6 மாகாண சபைகளின் பதவிக்காலம் முடிவடைந்துள்ளதுடன், மக்களின் சர்வஜன வாக்குரிமை மீறப்பட்டுள்ளதாக குறித்த மனுவில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் வழக்கில் பிரதிவாதியாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ள தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய உட்பட ஆணைக்குழுவின் உறுப்பினர்களை நீதிமன்றில் முன்னிலையாக உத்தரவிடப்பட்டிருந்த போதிலும், அவர்கள் சார்பில் எவரும் மன்றில் முன்னிலையாகியிருக்கவில்லை.

அதன்படி மனுவை ஒத்திவைத்து உத்தரவிட்ட நீதிமன்றம், அன்றைய தினம் பிரதிவாதிகளை முன்னிலையாகுமாறு நோட்டீஸ் அனுப்புமாறும் உத்தரவிட்டுள்ளது. (இ-7)

## திகதி மாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் விசேட (காணி) மத்தியஸ்த சபையின் அமர்வுத் திகதி மாற்றப்பட்டுள்ளது. இன்று 9 ஆம் திகதி யா/அல்வாய் சின்னத்தம்பி மகாவித்தியாலயத்தில் நடைபெறவிருந்த அமர்வு எதிர்வரும் 16 ஆம் திகதிக்கு மாற்றப்பட்டுள்ளது. (5-105)

## கதிரானே 'உக்குவா' கைது

(கொழும்பு)

திட்டமிட்ட குற்றங்கள் மற்றும் பாரியளவிலான ஹெரோயின் போதைப் பொருள் வர்த்தகரான "வெல்வே சுரங்க" என்ற பாதாள உலகக் கோஷ்டித் தலைவரின் பிரதான சகாவான "கதிரான உக்குவா" என்றழைக்கப்படும் லஹிரு நயனஜித் என்பவர், பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு - மட்டக்குளி, கதிரானவத்த பிரதேசத்திலுள்ள அவரது வீட்டில் வைத்தே நேற்றுக் காலை கைதுசெய்யப்பட்டுள்ளார்(இ-7)


**தறித்த தேக்கு மரம் விற்பனைக்குண்டு**

நீளம் 25 அடி, சுற்று 5 அடி
நீளம் 13 அடி, சுற்று 4 அடி
நீளம் 7 அடி, சுற்று 4 அடி
விலை 4200/=
தொடர்பு: 077 526 3641
(7797)


## மரண அறிவித்தல்

### செல்வி வசந்தி பத்மநாதன்



சிவன் வீதி, உரும்பிராய் கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வசந்தி பத்மநாதன் 07.03.2019 வியாழக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் பத்மநாதன் (கிச்சி) புஸ்பலீலா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான தில்லைநடராஜன், புஸ்பநாதன் மற்றும் மாலதி (ஜேர்மனி), தவபாலன் (நோர்வே), தர்மபாலன் (லண்டன்), தயாளன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சரோஜினி தேவி, சித்திரா (விஜி-ஜேர்மனி), குணரட்ணம் (ஜேர்மனி), புஸ்பலதா (நோர்வே), குமுதினி (லண்டன்) ஜெயந்தி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (10.03.2019) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் மு.ப.10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இளங்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவன் வீதி,
உரும்பிராய் கிழக்கு. (7793)

தகவல்: ப. தயாளன்
(சகோதரன்: 077 990 7163)

## உறுப்பினர் தெரிவு

(யாழ்ப்பாணம்)

சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக்குழு உறுப்பினர் தெரிவு கடந்த முதலாம் மாதம் 27 ஆம் திகதிய விபரப்படி நடத்தப்பட்டது.

அன்றைய தினம் தெரிவு நடைபெறாத பதின்னான்கு (14) கிளைகளுக்கான கிளைக்குழு உறுப்பினர் தெரிவு இன்று 9 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும்.

குறிப்பிட்ட கிளைகளின் கூட்டங்களுக்கு சமுகமளித்து வாக்களிக்க உரிமையுள்ள உறுப்பினர்களுக்குத் தனித்தனி அறிவித்தல்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

எனினும் எவரேனும் மேற்குறிப்பிட்ட தகுதியுள்ள உறுப்பினர்களுக்கு அறிவித்தல் கிடைக்காதுவிடினும் குறித்த கூட்டத்தில் இந்த அறிவித்தலை அடிப்படையாகக் கொண்டு சமுகமளிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கொடிகாமம் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 90 | 70 | 70 | 100 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 90 | 80 | 100 |
| பச்சைமிளகாய் | 240 | 200 | 240 | 200 | 200 |
| தக்காளி | 50 | 40 | 40 | 40 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 100 | 100 | 80 | 60 |
| கோவா | 40 | 30 | 50 | 60 | 60 |
| கரட் | 100 | 80 | 90 | 80 | 120 |
| பூசணி | 40 | 30 | 40 | 40 | 40 |
| புடோல் | 60 | 60 | 60 | 70 | 80 |
| வாழைக்காய் | 50 | 70 | 80 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 100 | 60 | 70 | 80 | 100 |
| பெரிய வெங்காயம் | 100 | 75 | 85 | 60 | 80 |
| பாகற்காய் | 160 | 140 | 120 | 85 | 120 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 70 | 70 | 120 |
| கருணைக் கிழங்கு | 80 | 50 | – | 45 | 100 |
| பயற்றங்காய் | 140 | 120 | 100 | 70 | 80 |
| லீக்ஸ் | 100 | 100 | 80 | 70 | 120 |
| பீற்றூட் | 80 | 60 | 40 | 30 | 80 |
| கறிமிளகாய் | 100 | 120 | 100 | 60 | 100 |
| முருங்கைக்காய் | 400 | 500 | 400 | 300 | 400 |
| போஞ்சி | 100 | 80 | 80 | 70 | 100 |
| கத்தரிதம்புள்ள | 80 | 80 | – | 50 | 100 |
| கீரை-1பிடி | 30 | 40 | 30 | 20 | 30 |
| தேசிக்காய் | 80 | 80 | 80 | 60 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 35 | 35 | 35 | 30-50 |
| இராசவள்ளி | 120 | 140 | 120 | 100 | 120 |
| வெங்காயப்பூ | 80 | 70 | 60 | 70 | 120 |
| முள்ளங்கி | 50 | 50 | 50 | 30 | 80 |
| பொன்னாங்காணி | 40 | 35 | 20 | 20 | 40 |
| வல்லாரை | 15 | 60 | 30 | 15 | 30 |
| ஈரப்பலா | 60 | – | – | 110 | 80 |

# கடத்தப்பட்டதாக கூறப்பட்ட 8 வயது சிறுவன் மீட்பு;
# தாய் மற்றும் தாயின் சகோதரர் உட்பட மூவர் கைது

(குருமன்காடு)

வவுனியா, நெடுங்கேணி, பெரியமடுப் பகுதியில் கடத்தப்பட்டதாக கூறப்பட்ட 8 வயது சிறுவன் புளியங்குளம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளதுடன், குறித்த சம்பவம் தொடர்பில் சிறுவனின் தாயார், தாயாரின் சகோதரர் மற்றும் சித்தப்பா ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது,

வவுனியா, நெடுங்கேணி, பெரியமடுப் பகுதியில் வசித்து வந்த திரியரஞ்சன் தமிழவன் என்ற 8 வயது சிறுவன் கடந்த 6 ஆம் திகதி புதன்கிழமை 5 மணியளவில் தனது வீட்டில் இருந்து சுமார் 100 மீற்றர் தூரத்தில் உள்ள தனது அப்பப்பா வீட்டிற்கு தோட்டத்தினூடாக சென்றிருந்த நிலையில் காணாமல் போயிருந்ததாகவும், மறுநாள் வியாழக்கிழமை கனகராயன்குளம் பொலிஸில் சிறுவனின் தாயாரால் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

சிறுவனின் தந்தை வெளிநாடு செல்ல காரணமான ஏஜென்சி கடத்தி வைத்திருப்பதாகவும், 35 இலட்சம் தந்தால் சிறுவனை விடுவிப்பதாகவும் தாயின் தொலைபேசிக்கு காலை மற்றும் மாலை வேளைகளில் தொலைபேசி அழைப்பு வந்திருந்ததாகவும், கடத்தப்பட்ட சிறுவனும் தொலைபேசியில் பேசியதாகவும் தாயார் பொலிஸ் விசாரணையில் தெரிவித்திருந்தார்.

குறித்த தொலைபேசி இலக்கங்களை பெற்றுக்கொண்ட கனகராயன்குளம் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்தனர். அத்துடன் குறித்த சம்பவம் தொடர்பில் புளியங்குளம் பொலிஸாரும் கவனம் செலுத்தி வந்தனர்.

தாயின் நடவடிக்கையில் சந்தேகம் அடைந்த பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்த நிலையில் வவுனியா, ஓமந்தை பாடசாலை வீதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து குறித்த சிறுவனை நேற்று அதிகாலை புளியங்குளம் பொலிஸார் மீட்டுள்ளதுடன், குறித்த சிறுவனை கடத்தி வைத்திருந்ததாக சிறுவனின் தாயார், தாயின் சகோதரர் மற்றும் தாயின் சித்தப்பா ஆகியோரை பொலிஸார் கைது செய்தனர்.

இது தொடர்பான விசாரணைகளை கனகராயன்குளம் பொலிஸாரிடம் முன்னெடுத்துள்ளனர். அத்துடன் இக் கடத்தல் நாடகத்திற்கு பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இதேவேளை, விசாரணைகளின் பின்னர் மூவரையும் வவுனியா நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக கனகராயன்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (2-250)




## திருக்கேதீச்சர வளைவு அகற்றப்பட்டமையை எதிர்த்து செட்டிகுளத்தில் கண்டன ஆர்ப்பாட்டம்



(குருமன்காடு)

மன்னார் திருக்கேதீச்சர ஆலயத்தின் பிரதான பாதையில் வரவேற்பு வளைவு அகற்றப்பட்டமை மற்றும் நந்திக்கொடியை காலால் மிதித்து அவமதித்தமை உள்ளிட்ட சம்பவங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, வவுனியா செட்டிகுளம் பகுதியில் நேற்று கண்டன ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

செட்டிகுளம் விவேகானந்தர் முற்றத்திலிருந்து ஊர்வலமாகச் சென்ற ஆர்ப்பாட்டக்காரர்கள் வெங்கலச் செட்டிகுளம் பிரதேச செயலகம் சென்று பிரதேச செயலாளரிடம் மனுக் கையளித்தனர்.

பிரதேச சைவக்குருமார்கள், இந்து அமைப்புகளின் பிரதிநிதிகள், இளைஞர்கள், பொது அமைப்புக்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் எனப் பலரும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர். (2-250)

## நுண்நிதி நிறுவனங்களுக்கு எதிராக வவுனியாவில் நேற்று ஆர்ப்பாட்டம்






(குருமன்காடு)

வவுனியாவில் நுண்நிதி நிறுவனங்களுக்கு எதிராகவும், அரசாங்கம் குடும்பப் பெண்களின் கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்தும் நேற்று வவுனியா பிரதேச செயலகம் முன்பாக கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

உலக பெண்கள் தினமான நேற்று "துன்புறுத்தும் தனியார் நுண்கடன் கம்பனிகளை எதிர்த்து நில்" என்ற தொனிப்பொருளில் உழைக்கும் பெண்கள் விடுதலை முன்னணியினரால் முன்னெடுக்கப்பட்ட இவ் ஆர்ப்பாட்டத்தில் பெண்களுக்கு துன்பத்தை ஏற்படுத்தியுள்ள அனைத்து நுண்கடன்களையும் இரத்துச் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்து கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அத்துடன் பெண்களின் உடல், உள, சமூக, பொருளாதார கட்டமைப்புக்களைச் சீரழிக்கும் சாராய பார், கள்ளுக் கடைகள் என்பவற்றை இழுத்து மூடுமாறும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோசங்களை எழுப்பியிருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த பெண்கள், மத்திய வங்கியே இன்னும் உறக்கமா? நுண்நிதிக்கடன் திட்டமா அல்லது இன அழிப்பு திட்டமா? கடன் கொடுத்து குடும்பத்தை குலைக்காதே, கடனே குடும்ப வன்முறைக்கு காரணம், பெண்களின் உடல் வியாபாரப் பொருளா? யுத்தத்தில் துப்பாக்கி, நல்லாட்சியில் நுண் கடனா? போன்ற பதாகைகளை தாங்கியிருந்தனர்.

இவ் ஆர்ப்பாட்டத்தில் சமூக விழிப்புணர்வுக்கான மக்கள் ஒன்றியம், வவுனியா இளைஞர் முன்னணி, பசுமைத்தொழிலாளர் நலன் புரிச் சங்கம், வவுனியா நகர சிறுவியாபாரிகள் சங்கம் மற்றும் வவுனியா மாவட்டத்தில் பல கிராமங்களிலிருந்து வருகை தந்திருந்த பெண்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-250)

## 'பிள்ளை யாருடையது என்பதல்ல எவருடையதாயினும் பாசத்துடன் வளர்ப்போம்'
## வவுனியாவில் விழிப்புணர்வு ஊர்வலம்





(குருமன்காடு)

வவுனியா மாவட்ட செயலகமும் சிறுவர் நன்னடத்தை திணைக்களமும் இணைந்து நடத்தும் "பிள்ளை யாருடையது என்பதல்ல எவருடையதாயினும் அது பிள்ளை எனவே பாசத்துடன் பாதுகாப்போம்" எனும் தொனிப்பொருளிலான விழிப்புணர்வு ஊர்வலம் நேற்றுக் காலை வவுனியா மாவட்ட செயலகத்தில் ஆரம்பமாகி புதிய பேருந்து நிலையம் வரை சென்றடைந்து. ஏனைய நிகழ்வுகள் பேருந்து நிலைய வளாகத்தில் நடைபெற்றன.

மேலதிக அரச அதிபர் தி.திரேஸ்குமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக மாவட்ட அரச அதிபர் எம்.கனீபா கலந்துகொண்டிருந்தனர்.

பிரதம விருந்தினர்களாக மேலதிக அரச அதிபர் (காணி) திருமதி சு.குகன், வெங்கல செட்டிகுளம் பிரதேச செயலாளர் க.சிவகரன், அரச அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

நிகழ்வில் விசேடமாக வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மாணவர்களுக்கான பாடசாலை உபகரணங்கள் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய 97 ஆம் ஆண்டு பழைய மாணவர்களின் உதவியுடன் வழங்கப்பட்டதுடன், பேருந்துகளில் சிறுவர்களை பாதுகாப்போம் என்ற விழிப்புணர்வு ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டது. சிறுவர்கள் தொடர்பான சிறப்புரையை தமிழருவி சிவகுமாரன் நிகழ்த்தியிருந்தார். (2-250)

## புதுக்குடியிருப்பில் அதிகளவான சட்டவிரோத மணல் ஏற்றல்

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு பிரதேசத்திலேயே அதிகளவான சட்டவிரோத மணல் ஏற்றல் சம்பவங்கள் கடந்த 2018 ஆம் ஆண்டு பதிவாகியுள்ளதாக பொலிஸ் புள்ளிவிபரம் தெரிவிக்கின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் சட்டவிரோத மணல் ஏற்றல் சம்பவங்கள் கடந்த 2018 ஆம் ஆண்டு 847 சம்பவங்கள் பதிவாகியுள்ளன. இதன் ஊடாக 908 கியூப் மணல் மற்றும் கிரவல் மண் பறிமுதல் செய்யப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன.

முல்லைத்தீவில் 26, மாங்குளத்தில் 257, புதுக்குடியிருப்பில் 336, ஒட்டுசுட்டானில் 73, முள்ளியவளையில் 58, வெலி ஓயாவில் 13, மல்லாவியில் 84 என முல்லைத்தீவு மாவட்டத்தில் 847 சட்டவிரோத மணல் அகழ்வு சம்பவங்கள் இடம்பெற்று வழக்கு பதிவுசெய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (2-315)

## மன்னாரில் சர்வதேச மகளிர் தினமும் சாதனைப் பெண்களுக்கான விருது வழங்கலும்



(மன்னார்)

மன்னார் மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில் சர்வதேச மகளிர் தினம் மற்றும் "சாதனை பெண்களுக்கான விருது வழங்குகம் நிகழ்வு" நேற்று முற்பகல் 10 மணியளவில் மன்னார் நகர சபை மண்டபத்தில், மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.குணபாலன் தலைமையில் இடம் பெற்றது.

குறித்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் சி.ஏ.மோகன்றாஸ், மற்றும் விருந்தினர்களாக முசலி பிரதேசச் செயலாளர் கே.எஸ்.வசந்தகுமார், மன்னார் வலயக்கல்விப்பணிப்பாளர் கே.ஜே.பிரட்லி ஆகியோர் கலந்து கொண்டதோடு அழைக்கப்பட்ட திணைக்களப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது பல்வேறு துறை சார்பாகவும் தெரிவு செய்யப்பட்ட சாதனைப் பெண்களுக்கான விருது வழங்கும் நிகழ்வும் இடம் பெற்றது. இதன் போது கலந்து கொண்ட விருந்தினர்கள் விருது மற்றும் சான்றிதழ்களை வழங்கி கௌரவித்தனர். (2-285)

# இடம்பெயர்ந்த மக்களின் காணிகள் மீளவும் வழங்கப்பட்டு

# வீடுகள் அமைத்து வாழ்வதற்கு வழி ஏற்படுத்தப்படும்

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு



(குருமன்காடு)

**நல்லதொரு நாட்டை கட்டி எழுப்புவதற்கு தேசிய ஒருமைப்பாட்டிற்கும், நல்லிணக்கத்திற்குமான அலுவலகம் முக்கிய பணியாற்றும் என அதன் பணிப்பாளரும் முன்னாள் ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.**

வவுனியாவிற்கு விஜயம் செய்த அவர் நெடுங்கேணியில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் அவர் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி,பிரதமர் ஆகியோர் இந்தநாட்டிலே நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

தேசிய ஒருமைப்பாட்டிற்கும், நல்லிணக்கத்திற்குமான செயலகத்தின் மூலம் போரினால் இடம்பெயர்ந்த மக்களின் காணிகள் மீளவும் வழங்குவதுடன், அங்கு வீடுகளை அமைத்து அவர்கள் வாழ்வதற்கு வழியை ஏற்படுத்துவதற்கு பல நடவடிக்கைகள் மேற்கொள்ளபட்டு வருவதுடன் அழிவடைந்த வீதிகள், கிராமங்கள், பாடசாலைகளில் உட்கட்டமைப்புகளை வழங்குவதற்கும் நாம் திட்டங்களை வகுத்துள்ளோம்.

வருமானத்தை பெருக்கி சுயதொழில் வசதிகளை ஏற்படுத்துவதன் மூலம் நாட்டில் வாழும் அனைவரையும் ஒன்றாக்கிநல்லதொரு நாட்டை கட்டி எழுப்புவதற்கு தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகம் முக்கிய செயலாற்றும். குறிப்பாக வடமாகாணத்தில் 43 கிராமங்களை நாம் தேர்ந்தெடுத்துள்ளோம்.

அங்கு முழுமையான அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்ளவுள்ளோம். இங்கு நீர் பிரச்சினை அதிகமாக இருப்பதால் அதற்கு நாங்கள் முன்னுரிமை வழங்கியிருக்கிறோம்.

வடக்கில் போரின் பின்னர் பல தனியார் நிறுவனங்கள் சட்டவிரோதமான முறையிலே அதிகவட்டிவீதத்தில் கடன்களை வழங்கியிருக்கிறார்கள். இதனால் பல பெண்கள் மரணமடைந்திருக்கிறார்கள். எனவே குறைந்தவட்டி விகிதத்தில் நாங்கள் கடன் திட்டத்தை அறிமுகப்படுத்தியிருக்கிறோம். வருடவட்டி 6 வீதமாகவிருக்கிறது.

அதில் 25 வீதத்தை தேசிய நல்லிணக்க செயலகம் வழங்கும். கடன்களை வழங்குவதற்காக அரசாங்க உத்தியோகத்தர்களை வங்கிகள் பிணையாக கேட்கின்றன.

அவ்வாறு இல்லாமல் குறித்த கடன்தொகையை வழங்குவதற்கு விரைவில் நடவடிக்கைகள்" எடுக்கப்படும் என உறுதியளித்தார். (2-250)

## பிரசவத்துக்கான முன்னாயத்த பொருட்கள் வழங்கி வைப்பு



(கிளிநொச்சி)

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையினால் பிரதேசத்திலுள்ள கர்ப்பிணி பெண்களுக்கு பிரசவத்திற்கான முன் ஆயத்த பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

தவிசாளரது ஆலோசனைக்கு அமைவாக சபையின் பாதீட்டில் மிகவும் அதிகமான தொகை ஒதுக்கப்பட்டு ஒவ்வொரு மாதமும் பிரசவத்துக்கு தயாரான பெண்களுக்கு இப் பொருட்கள் வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன்,எமது இனத்தின் பிறப்புவீதத்தை அதிகரிக்க வேண்டிய தேவை மிகவும் அதிகமாகவுள்ளது.

எனவே எமது இந்த உதவி பிறப்பு வீதத்தை அதிகரிப்பதற்கான ஒரு சிறிய மறைமுகமான ஊக்கியாக இது அமையும் என நம்புகிறேன்.

குறித்த நிகழ்வு நேற்று முன்தினம் முற்பகல் பத்து மணியளவில் பச்சிலைப் பள்ளி பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெற்றது. (2)




## பாலமோட்டை குளம் திறப்பு



(குருமன்காடு)

புனர்நிர்மாணம் செய்யப்பட்ட வவுனியா பாலமோட்டை குளம் முன்னாள் ஜனாதிபதியும் தேசிய ஒருமைப் பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகத்தின்பணிப் பாளருமான சந்திரிகா பண்டாரநாயக்கவினால் திறந்து வைக்கப்பட்டது.

வவுனியா பாலமோட்டை கிராமத்திற்கு நேற்று முன்தினம் விஜயம் செய்த தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகத்தின் பணிப்பாளர் சந்திரிகா பண்டாரநாயக்க புனர்நிர்மாணம் செய்யப்பட்ட குளத்தை பார்வையிட்டதுடன் அதற்கான விபரப்பலகையைத் திரை நீக்கம் செய்து வைத்தார்.

தேசிய ஒருமைப்பாட்டிற்கும் நல்லிணக்கத்திற்குமான அலுவலகத்தின் நிதியுதவியுடன் 3.7 மில்லியன் ரூபா செலவில் பாலமோட்டை குளமானது மழை நீரை சேமிக்கும் நோக்கத்துடன் புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் எம்.ஐ.கனீபாவுடன் பாலமோட்டை கிராமத்திற்கு வருகை தந்திருந்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கவுக்கு பாண்ட் வாத்தியங்கள் முழங்க மாலை அணிவித்து கௌரவிக்கப்பட்டிருந்தார்.

மழை நீரை சேமிக்கும் நோக்கத்துடன் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட குளத்தை பற்றிய மேலதிக விபரங்களை சந்திரிகா பண்டாரநாயக்க, கமநல சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் எஸ்.விஜியகுமாரிடம் கேட்டறிந்து கொண்டார்.

அத்துடன் பாலமோட்டை கிராமத்து விவசாயிகளின் குறைகளை கேட்டறிந்ததுடன் அவைகளை எழுத்து மூலம் கடிதமாக பெற்றுக் கொண்டதுடன் விவசாயிகளின் கோரிக்கைகள் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்திருந்தார்.

பாலமோட்டை கிராமத்தின் சார்பாக உரையாற்றிய கமக்கார அமைப்பின் தலைவர் ரி. சுரேஸ், பல வருடங்களாக முயற்சி செய்தும் கிராமத்தின் விவசாயக் காணிகளுக்கு அரச உரிமங்கள் வழங்கப்படவில்லை. நஞ்சற்ற உணவுகளை தயாரிப்பதற்கும் சந்தை வாய்ப்புக்களையும் உருவாக்கி தருமாறும், விவசாயக் கிணறுகளை அமைத்து தருமாறும் இதன் போது கோரிக்கை விடுத்திருந்தார். (2-250)

## பெண் தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திப்பொருள் கண்காட்சியும் விற்பனையும்





(பூநகரி)

பூநகரி பிரதேசத்தைச் சேர்ந்த பெண் தொழில் முயற்சியாளர்களின் உற்பத்திப்பொருள் கண்காட்சியும் விற்பனையும் சர்வதேச மகளிர் தினத்தையொட்டி நேற்றுக்காலை 9 மணியளவில் பூநகரி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வு பிரதேச செயலர் சி.ச.கிருஷ்னேந்திரன் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது கிளிநொச்சி மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் ஆர்.சி. அமல்ராஜ். உதவிப் பிரதேச செயலர் யோ.கிரிசா ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

19 கிராம அலுவலர் பிரிவுகளில் இருந்து மகளிர் குழுக்களும் மாதர் கிராம முன்னேற்ற சங்க நிர்வாகிகளும் கலந்து சிறப்பித்தனர்.

மாலை நேர நிகழ்வாக கலைநிகழ்வுகளும் சிறுவர்களின் நடன நிகழ்வுகளும் இடம்பெற்றன. இதன் பின்னர் மகளிர் குழுக்களுக்கு ஊக்குவிப்பு பரிசில்கள் வழங்கப்பட்டன. (2-84)

## மனித எச்சங்களின் ஆய்வு அறிக்கை குறித்து இறுத்தித்தீர்மானம் எடுக்க முடியாது

### பொறுமையுடனும் அவதானத்துடனும் செயற்படுமாறு சட்டத்தரணிகள் கோரிக்கை

(மன்னார்)

நேற்று முன்தினம் சட்டப்பூர்வமாக வெளியிடப்பட்ட மன்னார் மனித புதைகுழி அகழ்வு பணிகளின் போது கண்டுபிடிக்கப்பட்ட மனித எச்சங்களின் ஆய்வு அறிக்கை தொடர்பாக தற்போது இறுதி தீர்மானம் எதுவும்எடுக்க முடியாது எனவும் குறித்த அறிக்கை தொடர்பாக மக்கள் பொறுமையுடனும் அவதானத்துடன் செயற்படுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள் சார்பாக வாதிடும் சட்டதரணிகள் சார்பாக நேற்றைய தினம் வெளியிடப்பட்ட அறிக்கையின் படி,

நேற்று முன்தினம் வெளியிடப்பட்ட அறிக்கையானது சாதாரணமாக புரிந்து கொள்ள, முடியாத ஒரு அறிக்கையாக இருப்பதனால் குறித்த அறிக்கையின் விடயங்கள் தொடர்பான நிபுணர்கள் மூலமாகவே ஒரு தற்காலிக முடிவுக்கு வர முடியும்.

தற்போது அனுப்பப்பட்ட அறிக்கையின் ஊடாக மனித புதைகுழியின் உறுதியான கால எல்லையை உறுதிப்படுத்த முடியாதுள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-285)

# பாரதம்

## பேருந்தில் குண்டுவெடிப்பு இரண்டு பேர் உயிரிழப்பு!



(ஜம்மு)

ஜம்மு-காஷ்மீரில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடந்த குண்டு வெடிப்பில் 2 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதுகுறித்து ஊடகங்கள் தரப்பில், "ஜம்முவில் பொது பேருந்து நிலையத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை கையெறி குண்டு வெடித்தது. இதில் பொது மக்கள் 18 பேர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்த நிலையில் அனத்நாக் மாவட்டத்தைச் சேர்ந்த முகமத் ரியாஸ் என்பவர் சிகிச்சை பலனின்றி மரணம் அடைந்தார். மேலும் 32 வயது மதிக்கத்தக்க இளைஞர் ஒருவரும் மரணம் அடைந்தார். இதனைத் தொடர்ந்து உயிரிழப்பு 2 ஆகியது என்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தத் குண்டுவெடிப்பை நடத்திய ஹிஸ்புல் முஜாகிதின் அமைப்பைச் சேர்ந்த ஒருவரைக் கைது செய்துள்ளதாக பொலிஸார் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் ஜெய்ஷ் அமைப்பு நடத்திய புல்வாமா தாக்குதலுக்குப் பதிலடியாக இந்திய இராணுவம் பாலகோட் தாக்குதலைத் நடத்தியது. இதனால் இந்தியா - பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் தொடர்ந்து பதற்றம் நீடித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(7)

## தங்கச் சுரங்கத்
## உயிரிழப்பு 30 அ



(ஜகார்த்தா)

இந்தோனேசியாவின் தங்கச் சுரங்கத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி பலியானோர் உடல்களைத் தேடும் படலம் முடிவுக்கு வந்ததாக தேசிய பேரழிவு மீட்புப் பணிகள் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

### ஜமால் படுகொலை விவகாரம்

## விசாரணைக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கவும்-ஐ.நா.

### அறிக்கையில் உலக நாடுகள் கையொப்பம்

(றியாத்)

ஐரோப்பிய ஒன்றியத்தின் 28 உறுப்பு நாடுகள் உட்பட 36 நாடுகள் சவுதி அரேபியாவின் மனித உரிமை மீறல்கள் தொடர்பான கண்டன அறிக்கையில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சபையில் வைத்து கையொப்பமிட்டுள்ளன.

ஊடகவியலாளர் ஜமால் கஷோக்கியின் படுகொலை தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையால் முன்னெடுக்கப்பட்டுள்ள விசாரணைக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குமாறு சவுதிக்கு இவ்வறிக்கையில் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் பாதுகாவலர்களும் பத்திரிகையாளர்களும் சுதந்திரமாக இயங்குவதற்கும் சுதந்திரமாக தமது கருத்துக்களை வெளியிடுவதற்கும் சவுதி அரேபியா இடமளிக்க வேண்டுமெனவும் இவ்வறிக்கையில் வலியுறுத்தப் பட்டுள்ளது.

மேலும் சவுதி அரேபிய சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள மனித உரிமை ஆர்வலர்களை விடுவிக்குமாறும் இந்த அறிக்கையில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (7)

## அயோத்தி நிலப்பிரச்சினையை மத்தியஸ்தர்கள் மூலம் தீர்க்கவும்

### உயர் நீதிமன்றம் உத்தரவு

(டில்லி)

அயோத்தி நிலப்பிரச்சினையை மத்தியஸ்தர்கள் மூலம் தீர்க்க வேண்டுமென உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த வழக்கு விசாரணை நேற்று வெள்ளிக்கிழமை நீதிபதியான ரஞ்சன் கோகாய் தலைமையிலான 5 நீதிபதிகளை கொண்ட அரசியல் சாசனம் முனபாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த வழக்கு விசாரணையின் போது ஓய்வு பெற்ற நீதிபதியான கலிபுல்லா தலைமையிலான மத்தியஸ்தர் குழுவொன்றினையும் உயர்நீதிமன்றம் நியமித்துள்ளது.

இக்குழு 1-8 வாரத் திற்குள் இவ்விடயம் குறித்து ஆராய்ந்து தீர்மானிக்க வேண்டுமென உத்தரவிட்டுள்ளது. (7)

## இஸ்ரேல்-பாலஸ்தீன
## இராணுவத்தினரின் த

(காஸா)

ஆர்ப்பாட்டத்தின் போது 15 வயதான பாலஸ்தீனத் சிறுவன் ஒருவனை இஸ்ரேல் இராணுவ வீரர்கள் சுட்டுக். கொன்றுள்ளதாக காஸா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இஸ்ரேல் எல்லையில் பலஸ்தீனர்கள் முற்றுகையிட்டிருந்த சமயத்தில் அபு செய்ட் என அடையாளம் காணப்பட்ட குறித்த சிறுவன் சுட்டுக்கொல்லப் பட்டுள்ளார். மேலும் 6 ஆர்ப்பாட்டக்காரர்கள் இஸ்ரேலிய படையினரின் தாக்குதலுக்கு உள்ளாகி உள்ளனர்.



அவர்கள் சிகிச்சைக்காக வைத்தியாசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என சுகாதார அமைச்சின்

### புல்வாமா தாக்குதல்

## என்னையே இருமுறை ஜெய்ஷ் அமைப்பு கொலை செய்ய முயற்சி



பாக்.முன்னாள் ஜனாதிபதி முஷாரப்

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தான் பத்திரிகையாளர் நதீம் மாலிக்கிற்கு ஹம் செய்திக்காக தொலைபேசி நேர்காணல் அளித்த பாக்.முன்னாள் ஜனாதிபதி பர்வேஸ் முஷாரப் இந்தியாவுக்கு எதிராக பாகிஸ்தான் உளவுத்துறை ஜெய்ஷ் அமைப்பைப் பயன்படுத்தியுள்ளது என்று குண்டைத் தூக்கிப் போட்டுள்ளார்.

மேலும் ஜெய்ஷ்-எ-முகமது அமைப்புக்கு எதிரான நடவடிக்கையும் அவர் வரவேற்றுள்ளார்.

பர்வேஸ் முஷாரப் தன்னையே இருமுறை ஜெய்ஷ் அமைப்பினர் கொலை முயற்சி செய்துள்ளனர் எனவும் தான் ஜனாதிபதியாக இருக்கும் போது இந்தியாவுக்கு எதிராக பாகிஸ்தான் உளவு அமைப்பு ஜெய்ஷ் அமைப்பைப் பயன்படுத்தியது என்கிறார் முஷாரப். டிசெம்பர் 2003 இல் தன்னை இருமுறை இதே ஜெய்ஷ் அமைப்பு கொலை செய்ய முயன்றதையும் இந்த நேர்காணலில் தெரிவித்தார். (7)

### புல்வாமா தாக்குதலின் எதிரொலி

## மத போதனைகளை முன்னெடுக்கும் முகாம்களை கையகப்படுத்திய பாகிஸ்தான்

(புல்வாமா)

புல்வாமா தாக்குதலை தொடர்ந்து, பயங்கரவாத செயற்படுகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு சர்வதேச நாடுகள் தொடர்ச்சியாக பாகிஸ்தானுக்கு அழுத்தம் கொடுத்து வருகின்ற நிலையில், அந்நாட்டில் இயங்கும் மத போதனைகளை முன்னெடுக்கும் முகாம்களை பாகிஸ்தான் அரசாங்கம் கையகப்படுத்தியுள்ளது.

இதன்படி சுமார் 182 மத புள்ளிகளை கையகப் படுத்தியுள்ளதாக அந்நாட்டு உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இந்தியாவின் ஜம்மு - காஷ்மீர் பகுதியில் இடம் பெற்ற புல்வாமா தாக்குதலில் 40இற்கும் மேற்பட்ட சி.ஆர்.பி.எஸ். வீரர்கள் கொல்லப்பட்டனர். இதனையடுத்து இந்த தாக்குதலுக்கு பதில் தாக்குதல் நடத்தும் முகமாக இந்தியா விமானத் தாக்குதலை மேற்கொண்டது.

இந்தத் தாக்குதலின் போது இந்திய விமானி அபிநந்தன் பாகிஸ்தானால் கைது செய்யப்பட்டு பின்னர் நல்லெண்ண அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டார்.

இந்நிலையில் பாகிஸ்தானில் செயற்படும் தீவிரவாத இயக்கங்களுக்கு எதிராக பல்வேறு நடவடிக்கைகளை அந்நாட்டு அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது. அதன் ஒரு கட்டமாக ஜெய்ஷி இ முகமது இயக்கத்தினை சேர்ந்த 44 தீவிரவாதிகள் கைதுசெய்யப்பட்டனர். இந்நிலையில் தற்பொழுது 182 மத போதனைகளை முன்னெடுக்கும் முகாம்களை அந்நாட்டு அரசாங்கம் கையகப் படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (7)

## ரொக்கெட்டுகளை
## ஒருவர் உயிரிழ



(காபூல்)

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவங்களில் ஒருவர் உயிரிழந்ததோடு 16 பேர் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# த்தில் நிலச்சரிவு

# ) ஆக அதிகரிப்பு

சுரங்கத்தில் சிக்கியவர்களை மீட்பதற்காக நடைபெற்ற தேடும் படலத்தில் இதுவரை 30 மீட்கப் பட்டுள்ளதாக தேடல் மற்றும் மீட்பு நிறுவனம் தெரிவித்துள்ளது. இதில் மேலும் பல உடல்கள் புதையுண்டு இருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

ஜகார்த்தாவிலிருந்து வெகு தொலைவில் உள்ள வடக்கு சுலாவெஸியில் பூலாங் மங் கொண்டா மாவட்டத்தில் இந்த தங்கச் சுரங்கம் அரசின் அனுமதியின்றி நடைபெற்று வருகிறது. தங்கச் சுரங்கத்தில் நிலச்சரிவு ஏற்பட்டபோது அதனுள்ளே 100 பேர் இருந்தனர்.


தேசிய தேடல் மற்றும் மீட்புப் பணிகளின் இயக்குநர் புடி புர்னாமா தெரிவித்ததாவது.

"கடைசி மூன்று மணி நேரம் பாறைகள் இடிந்து விழுந்து கொண்டிருந்ததைத் தொடர்ந்து தேடல் பணி நிறுத்தப்பட்டது. இந்தோனேசிய தங்கச் சுரங்கத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கியவர்ளை மீட்கும் பணி இன்றுடன் நிறைவடைகிறது. இதில் சிதையாத உடல்கள், பகுதி உடல் பாகங்கள் என இதுவரை 30 பேரின் உடல்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

200 இற்கும் அதிகமான மீட்புப் பணியாளர்கள் தேடல் பணியின் ஆரம்பக் கட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். உயிர் பிழைத்தவர்கள் கயிறுகளையும் மற்ற உபகரணங்களையும் கொண்டு மீட்கப் பட்டனர் எனத் தெரிவித்தார். (7)

# காஸாவில் எகிப்து இராணுவம் சுற்றிவளைப்பு!

## ஏழு தீவிரவாதிகள் சுட்டுப் படுகொலை



(காஸா)


காஸாவில் எகிப்திய இராணுவம் மேற்கொண்ட இரண்டு சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் ஏழு சந்தேகத்திற்கிடமான தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர் என உள்துறை அமைச்சு நேற்று முன்தினம் வியாழக்கிழமை உறுதிப்படுத்தியுள்ளது.


மூன்று போராளிகள் வெடிகுண்டுகளை தயாரிப்பதற்காக மின் தொழிலாளர்கள் என்று தங்களை மாற்றிக்கொண்டு ட்ரக் ரக வாகனத்தில் செல்ல முற்பட்டபோது, அவர்களை வழிமறித்து பரிசோதனை செய்த வேளை துப்பாக்கிச் சூட்டை நடத்தியுள்ளனர்.

இதன்போது மூன்று தீவிரவாதிகள் உயிரிழந்ததாக தெரிவித்த உள்துறை அமைச்சு, இதில் பொலிஸார் அதிகாரியொருவர் காயமடைந்ததாகவும் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை அவர்கள் பயன்படுத்தும் ஒரு குடியிருப்பு ஒன்றினை பாதுகாப்பு படையினர் சோதனை மேற்கொண்டபோது நான்கு பேர் கொல்லப்பட்டனர் எனவும் அமைச்சு தெரிவித்துள்ளது. (7)

# ஏவுதளத்தை சீரமைக்கும் வடகொரியா; அமெ.ஜனாதிபதி ட்ரம்ப் கடும் அதிருப்தி





(வோஷிங்டன்)

வடகொரிய அரசு ரொக்கெட் ஏவுதளத்தை சீரமைக்கும் பணியில் ஈடுபட்டிருப்பதாக வெளியான செய்தியால் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் கடும் அதிருப்தி அடைந்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பும், வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன்னும் கடந்த மாத இறுதியில் வியட்நாமில் சந்தித்துப் பேசினர்.

இந்த சந்திப்பின்போது அணு ஆயுதங்களை கைவிடுதல் பொருளாதார தடைகளை நீக்குதல் போன்ற முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டு, ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும் எனஎதிர்பார்க்கப்பட்டது ஆனால், எந்த உடன்பாடும் எட்டப்படாமல் பேச்சுவார்த்தை முடிவுக்கு வந்தது.

இந்நிலையில், ட்ரம்புடன் நடந்த பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்ததால், வடகொரியா தனது முக்கிய ரொக்கெட் ஏவுதளத்தில் புனரமைப்பு பணிகளை மேற்கொண்டு வருவதாக தகவல் வெளியாகி உள்ளது. தலைநகர் பியாங்யாங்கில் உள்ள டோங் சாங்-ரி ரொக்கெட் ஏவுதளத்தில் மறுகட்டமைப்பு பணிகள் நடைபெறுவதை வடகொரியாவின் செயற்கைக்கோள் படங்கள் காட்டுகின்றன.

இந்த தகவலால் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் கடும் அதிருப்தி அடைந்துள்ளார்.

வடகொரியா தனது ரொக்கெட் ஏவுதளத்தை புனரமைப்பது குறித்த செய்தி உண்மையாக இருந்தால், அது மிகவும் தனக்கு ஏமாற்றம் அளிப்பதாகக் கூறினார். மேலும் வடகொரியாவில் என்ன நடக்கிறது என்பதை கவனித்து வருவதாகவும் அவர் கூறினார். (7)

# தீனம் இடையே பதற்றம்;

# ் தாக்குதலில் சிறுவன் பலி



பேச்சாளர் அஷ்ரப் தெரிவித்துள்ளார்.


அண்மைய காலமாக இஸ்ரேலுக்கும் பாலஸ்தீனத்திற்கும் இடையே பதற்றம் அதிகரித்துள்ளது.

ஒவ்வொரு நாள் இரவும் நூற்றுக்கணக்கான ஆர்ப்பாட்டக்காரர்கள் பாலஸ்தீனத் எல்லையில் கூடி எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர் என கூறப்பட்டுள்ளது.

1948 இல் இன ரீதியாக பாலஸ்தீனர்கள் அப்புறப்படுத்தப்பட்ட நிலையில் தமது நிலங்களுக்குள் வர அனுமதி கோரி இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீன எல்லையில் பாலஸ்தீனர்களால் ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (7)

# அணுவாயுதத்தை கைவிடாவிட்டால் தடை நடவடிக்கை வலுப்படுத்தப்படும்

## அமெரிக்கா எச்சரிக்கை



(வோஷிங்டன்)

அணு ஆயுதங்களை வடகொரியா கைவிடாவிட்டால் அந்நாட்டின் மீதான தடை நடவடிக்கைகளை அமெரிக்கா வலுப்படுத்தும் என ஜோன் பொல்டன் தெரிவித்துள்ளார்.

வட கொரியா மீதான தடை நடவடிக்கை பற்றிய அமெரிக்காவின் நிலைப்பாடு தொடர்பாக ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே ஜோன் பொல்டன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வடகொரியா அதன்அணுவாயுதத் திட்டங்களைக் கட்டுப்படுத்தவில்லையெனில் தடையுத்தரவுகள் அதிகரிக்கக்கூடும் எனக் கூறப்பட்டது.

இந்நிலையில் கடந்த மாத இறுதியில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் வடகொரிய ஜனாதிபதி கிம் யாங் உன் ஆகியோர் வியட்நாமில் சந்தித்து கலந்துரையாடி இருந்தனர்.

இருப்பினும் இந்த சந்திப்பின்போது எந்த உடன்பாடுகளும் எட்டப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (7)

# ளை ஏவி வெடிப்புச் சம்பவம்

# ரிழப்பு ; 16 பேர் படுகாயம்!



1995 தலிபானால் சிறைபிடிக்கப்பட்டு உயிரிழந்த ஹசாரா தலைவர் அப்துல் அலி மசாரியின் நினைவு நாளுக்காக ஷியா முஸ்லிம்களான ஹசாரா சிறுபான்மை உறுப்பினர்கள் பெருந்திரளாகக் கூடியிருந்த இடத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை வெடிப்பு சம்பவம் இடம்பெற்றிருந்தது. தாக்குதலுக்கு எவரும் இதுவரையில் பொறுப்பேற்கவில்லை.

ரொக்கெட்டுகளை ஏவி இந்த வெடிப்பு சம்பவங்கள் அரங்கேற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வெடிப்பு சம்பவத்தில் குறைந்தது ஒருவர் உயிரிழந்துள்ளதோடு 16 பேர் காயமடைந்துள்ளனர் என ஆப்கான் பொது சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை வெடிப்பு சம்பவத்துடன் தொடர்புபட்ட சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். (7)

# பயங்கரவாதிகள் பட்டியலிலிருந்து ஹபீஸ் சயீத்தை நீக்க முடியாது

## ஐ.நா.நிராகரிப்பு



(ஜெனிவா)

தடை செய்யப்பட்ட பயங்கரவாதிகள் பட்டியலிலிருந்து நீக்க வேண்டும் என்று ஹபீஸ் சயீத் தரப்பில் விடுக்கப்பட்ட கோரிக் கையை ஐ.நா.நிராகரித்துள்ளது.

மும்பை தாக்குதலுக்கு பிரதான சூத்திரதாரியாக செயற்பட்டு வந்ததாக தெரிவித்து ஹபீஸ் ஷஹிட் மற்றும் அவரது ஜமாத் அது உடாவா இயக்கத்தை ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை தடை விதித்தது. ஹபீஸ் ஷஹிட் சர்வதேச பயங்கரவாதிகள்பட்டியலில் இணைக்கப்பட்டார்.

இந்நிலையில், ஹபீஸ் ஷஹிட்டை விசாரிக்க ஐ.நா. அதிகாரிகள் திட்டமிட்டனர். ஆனால் அதிகாரிகளுக்கு விசா வழங்க நியூயோர்க்கிலுள்ள பாகிஸ்தான் தூதரகம் மறுத்துள்ளது.

தற்போது ஹபீஸ் பாகிஸ்தான் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7)

# சர்வதேச அமைப்பால் தயாரிக்கப்பட்ட வரவு- செலவுத்திட்டமே முன்வைப்பு!

## நாமல் விமர்சனம்



(கொழும்பு)

சர்வதேச அமைப்புக்களால் தயாரிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தையே மங்கள சமரவீர சமர்ப்பித்துள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வரவு-செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நிதி அமைச்சர் மங்கள சமவீரவால் கடந்த 5 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட வரவு-செலவுத் திட்டமானது சர்வதேச அமைப்புக்களால் தயாரிக்கப்பட்டதொன்றாகும். வரவு-செலவுத் திட்டத்தின் துண்டுவிழும் தொகையை 3.5 ஆக ஏற்படுத்த வேண்டும் என்ற நிபந்தனை சர்வதேச நிதி நிறுவனாங்களின் கோரிக்கையாகும். அதனால்தான் அரசாங்கத்தின் வரிகள் அதிகரிக்கப்பட்டு நாட்டின் அபிவிருத்திகளை நிறுத்தி இருக்கின்றது.

மேலும் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தில் 9 வருடத்தில் 5 ட்ரில்லியன் கடன் பெற்றுக் கொண்டிருந்தது. அந்த கடன்களைக்கொண்டு மேற்கொண்ட வேலைத் திட்டங்கள் அபிவிருத்திகளை காட்ட முடியும். ஆனால் இந்த அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்து மூன்றரை வருடங்களில் 5 ட்ரில்லியன் கடன் பெற்றுக் கொண்டுள்ளது. ஆனால் அதற்கு மேற்கொண்ட வேலைத்திட்டங்கள் என்ன என்று தெரிவிக்க முடியுமா? எனவும் நாமல் கேள்வி எழுப்பினார். (இ-7)

## சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு

# இலங்கை விமான சேவையில் முதன் முறையாக மாற்றம்





(கொழும்பு)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு பெண் விமானிகளுடன் இலங்கை விமான சேவை சர்வதேச சேவையை ஆரம்பித்துள்ளது.

அந்த வகையில் நேற்று கொழும்பிலிருந்து சிங்கப்பூருக்கும் அங்கிருந்து மீண்டும் கொழும்பிற்கு இலங்கை விமான சேவை பெண்கள் குழுவுடன் விமானத்தை இயக்குகின்றது.

முதலாவதாக பெண்கள் குழுவுடன் சென்ற UL 306 என்ற விமானம் நேற்றுக் காலை சிங்கப்பூரில் தரை இறங்கியுள்ளது. (இ-7)



# விவசாயிகளை மேலும் கடனாளிகளாக்குவதே அரசாங்கத்தின் நோக்கம்

## பட்ஜெட்டிற்கு எஸ்.பி. எதிர்ப்பு

(கொழும்பு)

நாட்டில் அதிக நிலப்பரப்பில் விவசாய மக்கள் வாழ்கின்ற போதிலும், அவர்களுக்காக இம்முறை வரவு - செலவுத்திட்டத்தில் எந்தச் சலுகையும் வழங்கப்படவில்லை. விவசாயிகளுக்கான கடன் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாக தெரிவித்து, அவர்களை மேலும் கடனாளிகளாக்குவதே இந்த அரசாங்கத்தின் நோக்கமாகும் என பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபாலவின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

## சந்தேக நபரை கொலை செய்ய மறுத்த

# கொழும்பு குற்றப்பிரிவு பொறுப்பதிகாரி நெவில் சில்வா திடீர் இடமாற்றம்



(கொழும்பு)

கொழும்பு குற்றப்பிரிவு பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் நெவில் சில்வா உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பொலிஸ் தலைமையகத்துக்கு மாற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பொலிஸ் பரிசோதகர் நெவில் சில்வாவை இடமாற்றம் செய்வதற்கு தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அனுமதி பெறப்படவில்லை என ஆணைக்குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.எனினும்அவசிய தேவை நிமித்தம் காரணமாக குறித்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக இடமாற்ற அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட சந்தேக நபர் ஒருவரை கொலை செய்யுமாறு உயர் இடத்திலிருந்து வந்த சட்டவிரோத உத்தரவை செயற்படுத்தாமை காரணமாக பொலிஸ் பரிசோதகர் நெவில் சில்வாவுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தகவல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (இ-7)

# விசர்நாய்க்கடிக்கு 2025 இல் முழுமையான தீர்வு



(கொழும்பு)

விசர்நாய்க் கடியால் ஏற்படும் மரணங்களைக் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது. இந்நோயைக் கட்டுப்படுத்தும் வேலைத் திட்டத்தை மீண்டும் சுகாதார அமைச்சுக்குக் கீழ் கொண்டு வருவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

அத்துடன் 2025 ஆம் ஆண்டளவில் இலங்கையில் இந்த நோய் முற்றாக இல்லா தொழிக்கப்படுமெனவும் ராஜித தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவால் நிலையியல் கட்டளை 27/2 இன் கீழ் விசர்நாய்க்கடி நோய் தொடர்பாக எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# தலைமுறை இடைவெளி

“தாத்தா கூப்பிடுகின்றார்! என்ன என்று போய்க்கேள் ” அப்படி என்கின்றார் அம்மா.

“அவர் அப்படித்தான் கூப்பிட்டுக்கொண்டிருப்பார்! வேறு வேலை இல்லை!” வேண்டுமென்றால் நீ போய் கேள்!''என்றான் பையன். அந்த பையனை மெதுவாகக் கூப்பிட்டு,

“ ஏன்டா! பெரியவர்கள் கூப்பிட்டால் போய் என்னென்று கேட்க வேண்டும். அதுதான் மரியாதை” என்று அட்வைஸ் செய்தேன்.

அவன் உடனே எனக்கு அட்வைஸ் செய்ய ஆரம்பித்து விட்டான்.

“விபரம் தெரியாமல் பேசாதீர்கள் சேர்! எங்கள் தாத்தாவிடம் நீங்கள் போய் பேசிப் பார்த்தால் தெரியும்!” என்றான். ஏன்டா அப்படிச் சொல்லுகிறாய் என்றேன்.

“பின்ன என்ன சேர்! ” எப்ப பார்த்தாலும் நான் 1940 இல் மைசூரிலே வேலை பார்த்துக்கொண்டிருந்தபொழுது என்று ஆரம்பிக்கிறார். வரிக்கு வரி மாற்றாமல் அப்படியே ஒப்பிக்கின்றார். எத்தனை தடவைதான் சேர் அதை பொறுமையாக இருந்து கேட்கிறது? என்று சொல்லி மிகவும் அலுத்துக்கொண்டான் பையன்.

நான் உடனே “இப்ப அட்வைஸ் தேவைப்படுகின்றது பையன்களுக்கு இல்லை! தாத்தாக்களுக்கு! ” என்று புரிந்து கொண்டேன்.

அதனாலேதான் தாத்தாக்களுக்கு என்று இப்போது இந்தத் தகவலை சொல்ல ஆரம்பித்தேன்.

வேறு ஒன்றுமில்லை! இப்பொழுது காலம் மிகவும் வேகமாக மாறிக் கொண்டு வருகின்றது! அதனாலே உங்க காலத்திலே நடந்த விடயங்களையே திரும்பத் திரும்பப்பேசி பெருமையடித்துக் கொண்டிருக்காதீர்கள். அதை இந்தக் காலத்துப் பிள்ளைகளாலே அதிக நேரத்திற்கு சகித்துக்கொள்ள முடியாது.

எப்பவும் சதா நீங்களே பேசிக் கொண்டிருக்காதீர்கள். உங்கள் வீட்டிலே இருக்கின்ற மற்றவர்களைப் பேச விடுங்கள். அவர்கள் சொல்வதைக் கேட்டு அதுக்குத் தகுந்தபடி யோசனைகளை சொல்லிக் கொண்டிருங்கள். நீங்கள் ஒரு அட்வைஸரா இருக்க வேண்டுமே தவிர அறுவையா இருக்கக் கூடாது.

வீட்டிலே நடக்கின்ற எல்லாக் காரியங்களிலேயும் கலந்து கொள்ளுங்கள். ஆனால் எதிலேயும் தலையிடாதீர்கள். யாரையும் கண்டிக்காதீர்கள். கேலி செய்யாதீர்கள்! நீங்கள் வாலிப வயதிலே ஒரு பெரிய உத்தியோகத்திலே இருந்திருக்கலாம். பல பேர் உங்கள் உத்தரவுக்கு உடனடியாக கீழ்ப்படிந்திருக்கலாம்.

ஓய்வுபெற்ற பிறகும் வீட்டிலே உள்ளவர்களிடம் அதேமாதிரி உத்தரவு போட்டுக் கொண்டிருந்தால் பழைய மாதிரியே மரியாதையை நீங்கள் எதிர்பார்க்க முடியாது!

அதிகாரத் தோரணையெல்லாம் ஓய்வுபெற்ற கையோடை விட்டிடுங்கள்! அதற்குப் பிறகு எல்லாரிடம் மிகவும் பணிவாக பேசுவதற்குப் பழகிக் கொள்ளுங்கள். பின்பு பாருங்கள் உங்கள் மரியாதை தானாக உயரும். பணி ஓய்வு என்பது நீங்கள் பார்த்துக் கொண்டிருந்த பணியிலிருந்து ஓய்வு என்றுதான் அர்த்தம்.

அதற்காக அத்தோடு நீங்கள் ஓய்வுபெற்று விட்டீர்களென்று அர்த்தமில்லை. அதற்குப்பிறகுதான் உங்கள் வீட்டுக் காரியங்களிலே அதிகமாக அக்கறை செலுத்த வேண்டும். பிள்ளைகளுக்கும் பேரப்பிள்ளைகளுக்கும் கடைசி வரைக்கும் நாம் உபயோகமாக இருக்க வேண்டும் என்று நினைக்க வேண்டும்.

நான் ஓய்வுபெற்று விட்டேன் இனிமேல் எங்கள் பிள்ளைகள் எங்களை காப்பாற்றும் என்று அசட்டுத்தனமாக யாரும் நினைத்துக் கொள்ளக் கூடாது. அதுதான் நடைமுறை எப்படி இருக்கின்றது என்று நாளுக்கு நாள் பார்த்துக் கொண்டிருக்கின்றோமே! அப்புறமும் அப்படி ஒரு நினைப்பு வரலாமா?காய்கறி வாங்குவதற்கு பேரப்பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கின்றது இப்படி ஏதாவது செய்து கொண்டிருக்கலாம்.

இந்தக் காலத்துப் பிள்ளைகளுடைய விருப்பமே வேறு! உங்கள் பேர்த்தி பொப் வெடிக்கிறதுக்கு ஆசைப்படலாம். அவளிடம் போய் தலைமுடியை பின்னிக் கொள்ள வேண்டும் என்று வம்பு செய்து கொண்டிருக்கக் கூடாது. தலைமுடியை பின்னிப்பார்க்க வேண்டும் என்று உங்களுக்கு ஆசையிருந்தால் அதை பாட்டியிடம் சொல்லுங்களேன். யாரு வேண்டாம் என்றது?

இன்னொரு முக்கியமான விடயம்... உங்களுக்கு வயதாகிவிட்டது என்பதற்காக உங்கள் ஆடை விடயத்தில் கவனமில்லாமல் இருக்காதீர்கள். தாடியும் மீசையுமாக இருக்காதீர்கள்.

இளமையில் எப்படி இருந்தீர்களோ அதேமாதிரி நல்லா ஆடை அணிந்து கொள்ளுங்கள். சுத்தமாக இருங்கள். பாட்டியே பார்த்து அசந்து போகின்ற மாதிரி இருக்க வேண்டும். இப்பவும் கூட வயதான தம்பதிகள் எவ்வளவு சந்தோசமாக இருக்கின்றார்கள் தெரியுமா? நான் ஒரு நாள் ஒரு வயதான பெரியவரைப் பார்க்கப் போயிருந்தேன். அவருக்கு 86 வயது. இந்த வயதிலேயும் மிகவும் உற்சாகமாக இருந்தார்.

நான் சும்மா கிண்டலுக்காக அவரிடம் “ஏன் தாத்தா நீங்கள் இப்பகூட ஒரு கல்யாணம் செய்து கொண்டால் என்ன?” என்றேன்!

அவர் உடனே பதறிப் போய்விட்டார்.

நான் பயந்து போய் ஏன் தாத்தா நான் தப்பாக ஏதாச்சும் சொல்லிவிட்டேனா? என்றேன்!


“நீ ஒன்றும் தப்பாகச் சொல்லவில்லை! சரியாகத்தான் சொன்னாய்! நான் பயந்து போனதற்குக் காரணம் நீ சொன்னது எங்கே வீட்டுக்குள்ளே இருக்கின்ற பாட்டி காதிலே விழுந்திடப் போகின்றது என்பதற்காகத்தான்!” அப்படி என்றார் அந்தத் தாத்தா!

# குப்பைக் குவாரியின் அருகே ஓர் குடியேற்றம்



அடிப்படைச் சுகாதாரம் என்பது ஜனநாயக நாடொன்றின் பிரஜைகளுக்கு கிடைக்க வேண்டிய அடிப்படை உரிமை. ஆனாலும் இந்த உரிமை மீறப்பட்டு நச்சுக் காற்றை சுவாசிக்க தள்ளப்பட்டுள்ளனர் நல்லிணக்கபுர மக்கள்.

மல்லாகம் கோணப்புலம் நலன்புரி நிலையத்தில் இடம் பெயர்ந்து வாழ்ந்துவந்த மக்கள் கடந்த 2016 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் நல்லிணக்கபுரம் வீட்டுத்திட்டத்தின் கீழ் காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலைக்குரிய அரச காணிகளில் அமைக்கப்பட்ட வீடுகள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் கையளிக்கப்பட்டதிலிருந்து நல்லிணக்கபுரம் கிராமம் உரு



வானது.

காங்கேசன்துறை மேற்கு ஜே/233 கிராம சேவகர் பிரிவிற்குட்பட்ட நல்லிணக்கபுரம் கிராமத்தில் தற்போது 61 குடும்பங்கள் வரையில் வாழ்ந்துவருகின்றன. 1990ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் வாழ்ந்த இம் மக்கள் மீள்குடியமர்வின் பின்னரும் துன்பகரமான வாழ்க்கையை வாழ்ந்து வருகின்றனர்.

நல்லிணக்கபுர மக்களின் குடியிருப்புக்களுக்கு அருகே வலி. வடக்கு பிரதேச சபைக்குட்பட்ட கழிவுகள் கொட்டப்படும் குப்பைக் குவாரி காணப்படுகின்றது. அதிலிருந்து வெளியேறும் துர்நாற்றத்திற்கும் காற்றில் பரவும் பொலித்தீன்களுக்கும் கட்டாக்காலி நாய்களால் இழுத்துவரப்படும் குப்பைகளுக்கும் மத்தியிலேயே இம் மக்களினுடைய தினசரி வாழ்க்கை நகருகின்றது.

குவாரியைக் காட்டுவதற்கு அழைத்துச் சென்ற 12 வயது மதிக்கத்தக்க சிறுவன் ஒருவன் மலசலகூடக் கழிவுகள் கொட்டப்படும் போது வெளியேறும் நாற்றத்தின் காரணமாக தங்கள் வீட்டில் சமைப்பதில்லை. கடைகளுக்கே சென்று சாப்பிடுகின்றோம் என்ற போது இதுவா மீள் குடியேற்றம் என்ற கேள்வியே எழும்பியது.

'இந்த பிளாஸ்ரிக் எரிக்கிறது, டொய்லெட்டுகள் கொண்டுவந்து கொட்டுறது இதால எங்கட பிள்ளைகளுக்குத் தானே வருத்தம் வருகிறது. இந்தப் பிள்ளைக்கு ஒரு மாசம் ஆயிட்டு தடிமனும் இருமலும் நிக்குதேயில்ல. சொல்லச் சொல்ல கொண்டுவந்து குப்பையை பறிக்குறாங்க. நாங்க என்ன செய்யிறது? சொல்லவும் கேட்குறாங்க இல்லை' என்று கையில் இருமியபடியிருந்த குழந்தையைக் காட்டி கூறுகின்றார் குவாரியிலிருந்து 500 மீற்றர் தூரத்திற்குள் வசிக்கும் பெண்.

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை இயங்கிய காலத்தில் சுண்ணாம்புக்கல் அகழ்வில் ஏற்பட்ட பாரிய கிடங்குகள் இன்றும் நிரப்பப்படாமல் இருந்த நிலையில் நல்லிணக்கபுரம் கிராமத்திற்குள் ஒரு பகுதி குப்பை கொட்டும் இடமாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. குவாரிக்கும் குடியிருப்புக்களுக்குமான இடைவெளி 500 மீற்றர் கூட இல்லாத நிலையில் வலி.வடக்கு பிரதேச சபையின் கழிவுகள், தெல்லிப்பழை வைத்தியசாலைக்கழிவுகள், மலசலகூடக் கழிவுகள் என அனைத்தும் குறித்த இடத்திலேயே கொட்டப்பட்டு எரிக்கப்படுகின்றன.

மக்கள் அவ்விடத்தில் குடியேறுவதற்கு முன்னரே குறித்த இடத்தில் குப்பை கொட்டப்படுவதாகவும் ஆனாலும் அதன் அளவு மிகக் குறைவாகவே இருந்ததாகவும் குடியேற்றத்தின் பின்னரே அங்கு பாரியளவில் குப்பை கொட்டப்படுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர். மீள்குடியேற்றத்தின் பின் குறித்த பிரச்சினைக்குரிய தீர்வு வழங்கப்படும் என்றே தங்களை மீள்குடியமர்த்தினார்கள். ஆனாலும் இற்றைவரை இதுக்குரிய தீர்வின்றி தவிப்பதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

பல நேரங்களில் குப்பை கொட்ட வரும் வாகனங்கள்



குவாரிக்குள் செல்லாமல் இடை வழியி லேயே குப்பைகளை கொட்டிச் செல்வதால் குவாரிக்குச் செல்லும் வழி முழுவதுமே குப்பைகளால் நிரம்பி நிற்கின்றன.


காற்றினாலும், கட்டாக்காலி நாய்களினாலும் இழுத்துவரப்படும் கழிவுகள், நப்கின்கள், பொலித்தீன்கள் மக்களுடைய குடியிருப்புக்களிலும் பரவிக் காணப்படுகினறன. குப்பைகள் எரிக்கப்படுவதால் எழும் புகையால் அப்பகுதியெங்கும்புகையால் சூழப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

குப்பைகள் பரவுவதை தடுப்பதற்குரிய குறைந்தபட்ச பாதுகாப்பு நடவடிக்கைகள் ஏதுமின்றி வைத்தியசாலைக் கழிவுகள் கொட்டப்படுவதாலும் அவற்றை எரிப்பதால் எழும் புகையை மக்கள் சுவாசிப்பதாலும் தொற்றுநோய் நிலைமைகள் ஏற்படும் வாய்ப்புள்ளன.

இவை தொடர்பில் மக்கள் பல தடவைகள் சம்பந்தப்பட்ட தரப்புக்களுக்கு தெரிவித்தும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. குறைந்தபட்சம் குப்பைகள் காற்றினாலும் கட்டாக்காலி நாய்களினாலும் பரவுவதை தடுப்பதற்குரிய நடவடிக்கைகள் கூட எடுக்கப்படவில்லை.

இதுகுறித்து பொறுப்புக் கூற வேண்டிய வலி.வடக்கு பிரதேச சபைத் தவிசாளர் சோமசுந்தரம் சுகிர்தன் நல்லிணக்கபுர குடியேற்றம் பிரதேச சபையின் அனுமதியின்றி அரசாங்கத்தால் தன்னிச்சையாக கொண்டுவரப்பட்டது என்றும் முகாமிலுள்ள மக்களை குறைப்பதற்காகவே குறித்த இடத்தில் மக்கள் மீள்குடியேற்றப்பட்டனர் என்றும் மக்களை அவர்களது சொந்தக்காணிகளில் குடியமர்த்தியிருந்தால் இவ்வாறான பிரச்சினைகள் ஏற்பட்டிருக்காது என்றும் தெரிவித்தார்.

காங்கேசன்துறை சீமெந்து ஆலைக்கான சுண்ணாம்புக்கல் அகழ்வினால் ஏற்பட்டுள்ள பாரிய குழிகளை நிரப்புவதற்காக அரசாங்கத்தால் கொரியாவின் நிதியுதவியில் குப்பைகளைக் கொண்டு கிடங்குகளை நிரப்பும் **(Sanitary Landfill)** செயற்றிட்டம் கொண்டுவரப்படவுள்ளதாகவும் வலி.வடக்கு பிரதேச சபைக்குட்பட்ட திண்மக் கழிவுகள் முகாமைத்துவத்திற்காக 3 ஏக்கர் காணி தரப்பட்டுள்ளதாகவும் இதற்கான திட்டத்திற்கு மத்திய சுற்றாடல் அதிகார சபையிடம் விண்ணப்பித்துள்ளதாகவும் அதற்குரிய நிதி கிடைக்கும் போது குறித்த இடத்திலிருந்து மாற்று இடத்திற்கு கொண்டு செல்லப்படும் என்றும் தெரிவித்தார்.



எது எவ்வாறாயினும் மக்களை ஓர் இடத்தில் குடியேற்ற முன்னர் அம் மக்களுக்குரிய அடிப்படை வசதிகளுக்கு அரசாங்கமும் அரசாங்க அதிகாரிகளுமே பொறுப்புடையவர்கள்.

ஆனாலும் நல்லிணக்கபுரத்தில் மக்களை குடியேற்ற முன்னர் அரசாங்கம் குப்பை குவாரி பற்றியோ மக்களுடைய அடிப்படைச் சுகாதாரம் பற்றியோ சிந்திக்காமையால் மீள்குடியமர்வின் பின்னரும் அவலமான வாழ்க்கைக்கு இம்மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

தாரணி பரமசிவம்,
ஊடக கற்கைகள்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.-

## பெண்களுக்கான தனிப்பெட்டி புகையிரத சேவை ஆரம்பம்



(கொழும்பு)

சர்வதேச மகளிர் தினத்தையிட்டு அலுவலகங்களில் பணிபுரியும் பெண்களுக்காக தனிப்பெட்டிகள் ஒதுக்கப்பட்ட புகையிரத சேவை நேற்றுப் போக்குவரத்து மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன் ஆரம்ப நிகழ்வில் போக்குவரத்து மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் அர்ஜுன ரணதுங்க, நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிக்கா பிரேமச்சந்திர உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (இ-7)

## கற்கைநெறிகளுக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.தொழில்நுட்பவியல் கல் லூரியில் **(NVQ Level 5)** கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தொலைத்தொடர்பாடல் தொழில் நுட்ப டிப்ளோமா **(Diploma in Tele communication Technology) NVQ Level 5**, கணிய அளவையியல் தொழில்நுட்ப டிப்ளோமா **(Diploma in Quantity surveying Technology) NVQ Level 5**, தகைமை: க.பொ.த. உயர்தரத்தில் கணிதம், விஞ்ஞானம் மற்றும் பொறியியல் தொழில் நுட்பம் போன்ற துறைகளில் 3 பாடங்கள் சித்தி பெற்றவர்கள், உரிய துறையில் NVQ தர சான்றிதழ் தகைமையுடையவர்கள் (மட்டம் 3 அல்லது மட்டம் 4) மாணவர்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதால் தகைமை உடையவர்கள் உடனடியாக விண் ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றீர்கள்.

மேலதிக விபரங்களை தொழில் நுட்பக் கல்லூரியின் தொழில்வழி காட்டல் நிலையத்தில் பெற்றுக் கொள்ளலாம். (தொலை பேசி இலக்கம்-021 221 2403)

அத் துடன் இலத்திரனியல் **(Electronic)** சான்றிதழ் தரக் கற்கை நெறியிலும் **(NVQ Level 4)** குறிப்பிட்டளவானமாணவர்கள் இணைந்து கொள்ள முடியும் எனப் பணிப் பாளர் எஸ்.முகுந்தன் அறிவித்துள்ளார். (இ)

# வடக்கு - கிழக்கில் இந்த ஆண்டுக்குள் வீட்டுப்பிரச்சினைக்குத் தீர்வு வேண்டும்

## இராஜாங்க அமைச்சர் விஜயகலா வலியுறுத்து

(கொழும்பு)

**வடக்கு-கிழக்கில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான வீடுகளைத் துரிதகதியில் அரசாங்கம் அமைத்துக்கொடுக்க வேண்டும். நீண்டகாலமாக இழுத்தடிப்பிலுள்ள வீட்டுப்பிரச்சினைக்கு இந்த ஆண்டுக்குள் தீர்வு காணப்பட வேண்டும் என கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி. விஜயகலா மகேஸ்வரன் வலியுறுத்தியுள்ளார்.**



தோட்டத்தொழிலாளர் நாளாந்த கொடுப்பனவு குறித்து வரவு-செலவுத் திட்டத்தில் ஏமாற்றமே. எனினும் உடனடியாக அவர்களுக்கான கொடுப்பனவுகளை அரசாங்கம் பெற்றுக்கொடுக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில்நேற்று முன்தினம் வியாழக்கிழமை வரவு-செலவுத் திட்டம் மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் பலவற்றுக்கு தீர்வு காணும் வகையில் அரசாங்கத்தின் வரவு-செலவுத் திட்டம் அமைந்துள்ளது. யுத்த பாதிப்புக்களுக்குள்ளான வடக்கு-கிழக்கு மக்கள் தமது வாழ்வாதாரத்தை கட்டியெழுப்ப தொடர்ந்தும் போராடி வருகின்றனர். இந்நிலையில் பிரதமர ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் இதனை நன்றாக உணர்ந்து வரவு-செலவுத் திட்டத்தில் பல்வேறு வேலைத்திட்டங்களை உள்வாங்கியுள்ளமை வரவேற்கத்தக்கது. யுத்தத்தில் உயிர்களையும், உடைமைகளையும் இழந்த வடக்கு-கிழக்கு மக்கள் பல்வேறு துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். ஆகவே பாதிக்கப்பட்ட எமது பிரதேசங்களை அபிவிருத்தி செய்ய வேண்டும். இதனை அரசாங்கம் உணர்ந்த காரணத்தினால் தான் கடந்த நான்கு ஆண்டுகளாக அப்பிரதேசங்களை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகளை கையாண்டு வருகின்றது.

யுத்தத்தில் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு பகுதிகளில் வீடுகள் முற்றாக நாசமான நிலையில் இன்றும் ஒரு இலட்சத்து 60 ஆயிரம் வீடுகள் அமைக்கப்பட வேண்டியுள்ளது. நல்லாட்சி அரசாங்கத்தில் வீட்டுத் திட்டங்கள் பல முன்னெடுக்கப்பட்ட போதிலும் கூட இதனைப் பூர்த்திசெய்ய முடியவில்லை. இம்முறையும் வடக்கு - கிழக்கில் 15 ஆயிரம் செங்கல் வீடுகளை அமைக்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. நல்லாட்சி அரசங்கத்தின் ஆட்சியில் ஏற்கனவே 50 ஆயிரம் வீடுகளை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதில் பொருத்து வீடுகளை அமைப்பதற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. பின்னர் கல் வீடுகளை அமைக்கத் தீர்மானம் எடுக்கப்பட்டது. இது குறித்து அமைச்சரவைப் பத்திரங்கள் நிறைவேற்றப்பட்டும் இந்த முயற்சிகள் கைகூடவில்லை. இப்போதாவது துரிதகதியில் வீடுகளை அமைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களில் 50 ஆயிரம் பேர் மாற்றுத்திறனாளிகளாகவுள்ளனர். இவர்கள் தமது வாழ்வாதாரத்தை முன்னெடுப்பது பாரிய சவாலான விடயமாக உள்ளது. எனினும் இவர்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு இவர்களுக்கு நிதி உதவிகளை அரசாங்கம் செய்கின்றமை வரவேற்கத்தக்க விடயமாகும். அதேபோல் யுத்தத்தின் பின்னர் கைத்தொழில் பாரிய வீழ்ச்சியை கண்டுள்ள நிலையால் மீண்டும் கைத்தொழில் பேட்டைகளை ஆரம்பிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. எனினும் இந்த ஆண்டு இறுதிக்குள் அவற்றை கையாள வேண்டும். யுத்த பாதிப்புக்கான இந்த பிரதேசங்களில் நகர மயமாக்கல் வேலைத்திட்டம் துரிதமாக முன்னெடுக்கப்பட வேண்டும். அதே போல் யுத்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்கப்பெற வேண்டும். அதுவே நல்லிணக்கத்திற்கு அடையாளமாகும்.

பொறுப்புக்கூறல் விடயத்தில் அரசாங்கம் அக்கறை செலுத்த வேண்டும். இதற்கான நடவடிக்கையை அரசாங்கம் எடுத்துள்ளது. குறிப்பாக காணாமல்போனோர் தொடர்பான அலுவலகத்தை பலப்படுத்தும் நடவடிக்கை எடுக்கவும் காணாமல் போனரின் குடும்பங்களுக்கு நட்டஈடு வழங்கவும் அரசாங்கம் எடுக்கும் முயற்சிகளை வரவேற்கின்றேன்.

எனினும் இதனைத் துரிதப்படுத்தி விரைவாக தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். வடக்கு-கிழக்கு அபிவிருத்திக்காக புலம்பெயர் தமிழர்களின் உதவிகளைப் பெற அரசாங்கம் தயாராகவே உள்ளது. எனினும் இதில் புலம்பெயர் தமிழர்களின் நம்பிக்கையைப் பெற்றுக்கொள்ள வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும். அதேபோல் வடக்கு-கிழக்கில் விவசாயத்தைப் பாதுகாக்கும் வகையில் நிதி ஒதுக்கீடுகளை கையாண்டுள்ளமை நல்லதொரு திட்டமாகும்.

அத்துடன் அரச ஊழியர்களுக்கான கொடுப்பனவு. ஓய்வூதியத்திட்டம் என்பன சிறந்த திட்டமாகவும். ஜூலை மாதத்தில் இருந்து இந்தக் கொடுப்பனவுகள் நடைமுறைக்கு வரும் எனக் கூறப்பட்டுள்ளது.

எனினும் ஜனவரி மாதம் தொடக்கம் இது நடைமுறைக்கு வந்திருந்தால் மக்களுக்குப் பயனானதாக இருந்திருக்கும். அதேபோல் தனியார் துறையினரும் சம்பள அதிகரிப்பு குறித்து வரவு-செலவுத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்தால் சிறப்பான ஒன்றாக இருந்திருக்கும்.

அதேபோல் தோட்டத் தொழிலாளர் சம்பளக் கொடுப்பனவு நாளொன்றுக்கு 50 ரூபாய் வரவு-செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்படும் எனக் கூறப்பட்டது. ஆனால் இம்முறை வரவு-செலவுத் திட்டத்தில் அந்த அறிவிப்பு விடுக்கப்படவில்லை. ஆகவே இந்த விடயம் தொடர்பில் அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். எதிர்காலத்திலாவது அவர்களுக்கான உரிய கொடுப்பனவு கிடைக்கப்பெற வேண்டும். எவ்வாறு இருப்பினும் 52 நாட்கள் அரசியல் நெருக்கடி நிலவியிருக்காவிட்டால் இதனை விடவும் சிறந்த வரவு-செலவுத் திட்டத்தை அரசாங்கம் முன்வைத்திருக்க முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# பொலிஸார் இருவர் சுட்டுக்கொலை முன்னாள் எம்.பியிடம் விசாரணை

(வவுணதீவு)

மட்டக்களப்பு வவுணதீவு பிரதேசத்தில் பொலிஸார் இருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக கைது செய்து 90 நாட்கள் பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள ஒருவருக்கு மேலும் ஒரு மாதம் தடுப்புக் காவல் நீடிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஒருவர் விடுதலை செய்யப்பட்டுள்ளதுடன் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் உட்பட 120 பேரிடம் விசாரணை இடம்பெற்றுள்ளதாகவும் தொடர்ந்து விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வவுணதீவு வலையிறவு பாலம் அருகில் பொலிஸ் வீதி சோதனைச் சாவடியில் கடந்த வருடம் நவம்பர் மாதம் 19 ஆம் திகதி நள்ளிரவு கடமையில் இருந்த பொலிஸார் இருவர் இனந்தெரியாதோரால் துப்பாக்கியால் சுட்டும் கத்தியால் குத்தியும் கொலை செய்யப்பட்டு அவர்களிடம் இருந்த இரு கைத்துப்பாக்கிகளும் எடுத்துச் செல்லப்பட்டன.

இச் சம்பவம் தொடர்பாக பொலிஸ்மா அதிபரால் நியமிக்கப்பட்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெயசிங்க தலைமையிலான குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை மேற்கொண்டுவரும் நிலையில், கரையக்கந்தீவைச் சேர்ந்த கண்ணன் என அழைக்கப்படும் கதிர்காம தம்பிராசா குமரன் எனப்படும் முன்னாள் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புலனாய்வுத்துறை உத்தியோகத்தர் கைது செய்யப்பட்டார்.

அவரிடமிருந்து வெளிப்படுத்தப்பட்ட தகவலுக்கமைய புலிகளின் சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவில் கடமையாற்றிய கிளிநொச்சியைச் சேர்ந்த 48 வயது இமையன் எனப்படும் வாசலிங்கம் சர்வானந்தன் கைது செய்யப்பட்டதுடன், இருவரும் 90 நாட்கள் பொலிஸ் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டனர்.

இந்த நிலையில் பொலிஸ் தடுப்பு காவலில் வைக்கப்பட்டிருந்த கரையக்கந்தீவைச் சேர்ந்த கண்ணன் என அழைக்கப்படும் கதிர்காம தம்பிராசா குமரன் என்பவருடைய 90 நாட்கள் தடுப்பு காவல் நேற்று 8 ஆம் திகதி முடிவடையும் நிலையில் அவரை மீண்டும் ஒரு மாதகாலம் தடுப்புக்காவலில் வைத்து விசாரிப்பதற்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதியளித்ததையடுத்து அவரின் தடுப்புக்காவல் ஒரு மாத காலத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# உலகில் முதல் பெண் பிரதமரை உருவாக்கிய நாடு இலங்கை

## ஜனாதிபதி பெருமிதம்

(கொழும்பு)



உலக அரசியலில் முதலாவது பெண் பிரதமரை உருவாக்கிய நாடென்பது மட்டுமல்லாமல், பெண்ணால் சிகரத்தையே எட்ட முடியுமென்பதை நாம் உலகிற்கு நிரூபித்துக் காட்டியிருக்கின்றோம் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

உலக அரசியலில் முதல் பெண் பிரதமரை உருவாக்கிய நாடு என்ற பெயரைப் பெற்றிருக்கும் இலங்கை, அநேக ஆசிய நாடுகள் வாக்குரிமையை வென்றெடுப்பதற்கு நிறைவேற்றதிகாரம் கொண்ட முதல் பெண் ஜனாதிபதியையும் உருவாக்கிய பெருமையைப் பெற்றிருக்கின்றது.

இலங்கைப் பெண்களை உயர் நிலைக்குக் கொண்டு செல்லும் இலக்குடன் இலங்கையில் கொண்டாடப்படும் மகளிர் தின கொண்டாட்டத்திற்கு தனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன் எனவும் ஜனாதிபதி தனது வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# லால்காந்த பிணையில் விடுவிப்பு

(அநுராதபுரம்)



மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல் குழு உறுப்பினர் கே.டி.லால் காந்தவுக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது.

மது போதையில் வாகனம் செலுத்தி விபத்து ஏற்படுத்தியமை தொடர்பில் அவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் அநுராதபுர நீதவான் நீதிமன்றத்தில் அவர் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து அவருக்குப் பிணை வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இராணுவத்தை காட்டி அரசியல் செய்தவர்கள் இராணுவத்துக்கு சலுகை வழங்கவில்லையாம்

## அமைச்சர் தலதா கவலை



(கொழும்பு)

போதைப்பொருளுக்கு அடிமையாகி சிறைச்சாலைகளில் இருப்பவர்களுக்கு புனர்வாழ்வளித்து விடுவிக்க வரவு-செலவுத் திட்டம் ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்காக அம்பேபுஸ், வீரவில மற்றும் தொம்பே பகுதிகளில் இடம் ஒதுக்கப்பட்டுள்ளதாக நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் தலதா அத்துகோரள தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இந்த வருடத்துக்கான வரவு-செலவுத்திட்டம் மீதான விவாதத்தில் நேற்று முன்தினம் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த காலத்தில் யுத்தத்தை வெற்றிகொண்ட இராணுவத்தை காட்டி அரசியல் செய்தவர்கள் இராணுவத்துக்கு எந்தச் சலுகையையும் வழங்கவில்லை. ஆனால் நாங்கள் இராணுவத்தினருக்கு பல நிவாரணங்களை இந்த வரவு-செலவுத் திட்டம் ஊடாக வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாகத்தெரிவித்தார். (இ-7)

# இலங்கையில் தமிழர்

## ஒரு முழுமையான வரலாறு (கி.மு.300- கி.பி.2000)

கலாநிதி மு.குணசிங்கம்

190

இந்நிகழ்வுகளின் காரணமாக வடபுல வரலாற்றில் தீபகற்பத்துத் தமிழர் முதற் தடவையாகப் பெருநிலத்துத் தமிழருடனும் மலைநாட்டு இந்தியத் தமிழருடனும் மட்டுமல்லாது தென்னிலங்கையிலுள்ள சிங்களவருடனும் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டனர்.

1899 ஒகஸ்ட் 10 ஆம் திகதி இந்து சாதனத்தில் உள்ளதொரு செய்தி தீபகற்பத்தின் சனநெரிசலையும் அதன் காரணமாகத் தவிர்க்க முடியாத வகையில் தமிழர் இலங்கையின் ஏனைய பாகங்களுக்கும் வெளிநாடுகளுக்கும் இடம்பெயர நேர்ந்ததைத் தெளிவாகச் சித்திரிக்கின்றது.

யாழ்ப்பாணத் தீபகற்பம் மிகச் சிறியதாகவிருப்பதாலும் அதன் சனத்தொகை அதிகரிப்பினாலும் அங்கு மழை வீழ்ச்சி போதாமையாலும் நதிகளின்மையாலும் நிலம் மிக வறண்டதாய் வளமற்று இருப்பதனாலும் ஏனைய இயற்கை வளங்கள் இல்லாமையாலும் அங்கு வாழும் மக்கள் தமது பிரதேசத்திற்கு வெளியே தொழில் தேடவேண்டியுள்ளனர்.

முன்னொரு காலம் இலங்கையின் மத்திய, தெற்குப் பாகங்களிலுள்ள கண்டி, கொழும்பு போன்ற இடங்கள் யாழ்ப்பாணத் தமிழருக்கு வேலைவாய்ப்பை வழங்கின.

ஆனால் அண்மைக்காலமாக கடந்த சில வருடங்களில் யாழ்ப்பாணத் தமிழர் வெளிநாடுகளில் மலேயா தீபகற்பத்திலுள்ள சிங்கப்பூர், பினாங், பிறாக், சிலாங்கூர், மலாக்கா போன்ற இடங்களில் தொழில் தேடியுள்ளனர்.

குடிசன மதிப்பானது அரசாங்கத்தால் அதன் நிர்வாகத் தேவைகளுக்காக மட்டுமே மேற்கொள்ளப்பட்டபோதும் அதன் உப விளைவாகப் பல்வேறு இனங்களை உள்ளடக்கிய இலங்கை மக்கள் மத்தியில் இன ரீதியான உணர்வை உருவாக்கியது.

1871 குடிசனமதிப்பைத் தொடர்ந்து ஒப்சேவர் (Observer- சிங்கள இனத்துக்குச் சார்பான தெற்கத்தேய ஆங்கில நாளிதழ்) பத்திரிகையில் இன ரீதியான அமைப்பு சம்பந்தமான வெளிவந்த செய்தி பற்றி மோணிங் ஸ்ராரில் வெளியான கருத்து கவனத்திற்குரியதாகும்.



“ யாழ்ப்பாணத் தீபகற்பம் மிகச் சிறியதாகவிருப்பதாலும் அதன் சனத்தொகை அதிகரிப்பினாலும் அங்கு மழை வீழ்ச்சி போதாமையாலும் நதிகளின்மையாலும் நிலம் மிக வறண்டதாய் வளமற்று இருப்பதனாலும் ஏனைய இயற்கை வளங்கள் இல்லாமையாலும் அங்கு வாழும் மக்கள் தமது பிரதேசத்திற்கு வெளியே தொழில் தேடவேண்டியுள்ளனர். முன்னொரு காலம் இலங்கையின் மத்திய, தெற்குப் பாகங்களிலுள்ள கண்டி, கொழும்பு போன்ற இடங்கள் யாழ்ப்பாணத் தமிழருக்கு வேலைவாய்ப்பை வழங்கின ”

## தமிழரின் விழிப்புணர்வும் எழுச்சியும் சமயம், பண்பாடு, மொழி சமூகம், பொருளாதாரம் (கி.பி. 1850-கி.பி. 1900)

தெற்கிலே வெளியிடப்படும் ஒப்சேவர் பத்திரிகை இலங்கை சிங்கள நாடு எனப்பெயர் பெற்றுள்ளபோதும் இங்கு தமிழரே பெரும்பான்மையாகவுள்ளனர் எனச் செய்தி வெளியிட்டுள்ளது.

ஆனால் உண்மை நிலையோ அவ்வாறில்லை. ஏனெனில் 1871 குடிசன மதிப்பீட்டுக்கு இணங்க இங்கு சிங்களவரே பெரும்பான்மையினராக உள்ளனர்.

எனவே இலங்கை ஒரு சிங்கள நாடு எனச் சொல்வது சரியானதே. ஆனால் யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை அது நிச்சயமாக ஒரு தமிழ்நாடு அல்லது ஒரு தமிழ்த்தேசம்.

சிங்களவரும் தமிழரும் தம்மைத் தேசத்துடன் அல்லாது தத்தம் இனக்குழுக்களுடன் அடையாளப்படுத்திக்கொள்ள ஆரம்பித்தனர் என இச்செய்திக் குறிப்புணர்த்துகின்றது.

மேலும் ஒருவேளை அர்த்தமிக்க வகையில் தமிழ்த் தேசம் என்ற பதத்தைப் பயன்படுத்துகின்றது. நிச்சயமாக இந்தப் பதம் தமது அரசியல் தேர்வுகளையிட்டுத் தமிழர்களை மேலும் ஆழமாகச் சிந்திக்கத் தூண்டியிருக்கும் என்பதில் சந்தேகமேயில்லை.

### போக்குவரத்து அபிவிருத்தி

இலங்கையின் துரித சனத்தொகைப்பெருக்கம், விவசாய விரிவாக்கம், வர்த்தகம், கல்வி ரீதியான வெற்றி, சிவில் நீதி நிர்வாக முறைமை நிறுவப்பட்டமை என்பன யாவும் ஒரு சிவில் கட்டுமாணத்தின் தேவையை உருவாக்கின.

இலங்கை முழுவதற்குமான செயற்பாடுகளை இணைத்துப் பலப்படுத்துவதற்கு வீதிகள், பாலங்கள், நெடுஞ்சாலைகள், புகையிரதப் பாதைகள் என்பவற்றை அமைத்தல் மிக அவசியமாயிற்று.

இருப்பினும் பத்தொன்பதாவது நூற்றாண்டின் ஆரம்பத்தில் எந்த வீதிகள் எங்கு அமைக்கப்படல் வேண்டும் என்பதைத் தீர்மானிப்பதில் வேறெந்தக் காரணிகளைவிட இராணுவ நோக்கங்களும் வர்த்தக நோக்கங்களுமே முக்கியத்துவம் பெற்றிருந்தன.

உதாரணமாக பிரித்தானிய ஆட்சியின் ஆரம்ப காலத்தில் கொழும்பிலிருந்து கண்டிக்கு வீதிகள் அமைப்பதே அதிமுக்கியத்துவம் பெற்றிருந்தது. இவ்வேலைகள் 1820 இல் பூர்த்தியடைந்தன.

அண்மையில் ஆட்சிக்குட்படுத்தப்பட்ட கண்டிப் பிரதேசங்களில் தமது பிடியைப் பலப்படுத்துவதற்கு பிரித்தானியர் கொண்டிருந்த திடமான நோக்கத்தின் காரணமாக அப்பிரதேசங்களிலேயே அவர்கள் அக்கறை கொண்டிருந்தனர் என்பதை விளங்கிக் கொள்ளலாம்.

இருப்பினும் படிப்படியாகக் கோப்பி, தேயிலைப் பயிர்ச் செய்கையின் வெற்றி காரணமாகப் போக்குவரத்து 'அபிவிருத்தியில் இராணுவ நோக்கங்களைவிட வர்த்தக நோக்கங்களே முக்கியத்துவம் பெற்றன.

பெருமளவு எண்ணிக்கையில் கோப்பி, தேயிலைப் பெருந்தோட்டங்கள் உருவானபோது இலங்கையின் உபயோகத்திலிருந்த வீதிகளின் சீரற்ற நிலை தீவிர கவனத்திற்குக் கொள்ளப்பட்டது.

(தொடரும்)

# வரவு-செலவுத்திட்டம் - 2019

## “என்டர்ப்பிறைஸ் ஸ்ரீலங்கா – மக்களை வலுவூட்டலும் வறியோரைப் பராமரித்தலும்”

03

❖ தொழில் முன்னெடுப்புக்களுக்கு ஆதரவளிக்கும் முகமாக கடந்த வரவு-செலவுத் திட்டத்தில் பொறுப்பு வரையறுக்கப்பட்ட பங்குடைமை கட்டமைப்பினை அறிமுகம் செய்வதற்கு முன்மொழியப்பட்டது. இது தொடர்பான ஆரம்ப வரைவு பூரணப்படுத்தப்பட்டுள்ளதுடன், இவ்வருடத்தில் இது சட்டவாக்கமாக அபிவிருத்தி செய்யப்படும்.

❖ இலங்கையானது மூலதனச் சந்தையை வங்கி நிதியீட்டத்திற்கு மேலாக அபிவிருத்தி செய்ய வேண்டியுள்ளது. ஆழமான மற்றும் திரவக் கடன் மூலதனச் சந்தையின் முதுகெலும்பானது சிறப்பான அரச பிணையங்கள் சந்தையாகும். நாங்கள் பிரதிகளற்ற ஸ்ரீலங்கா அபிவிருத்தி முறிகள் மற்றும் கூப்பன்களற்ற திறைசேரி முறிகள் இயலுமாக்கலை அறிமுகஞ்செய்வோம். இது தொடர்பான அவசியமான உட்கட்டமைப்பு வசதிகளுடன் முதலீடுகளை மேற்கொள்வதற்கு இலங்கை மத்திய வங்கியுடன் இணைந்து செயற்படுவோம்.

❖ 2017 மற்றும் 2018 இல் இலங்கையானது வெளிநாட்டு நேரடி முதலீட்டில் என்றுமில்லாதளவிலான அடைவினை காட்டியதுடன், நாட்டில் நிலையான முதலீடுகளை மேலும்விரிவுபடுத்துவது அவசியமாகின்றது. ஆகவே மிகப்பெறுமதியான முதலீடுகளை கவர்ந்து கொள்வதற்கு ஊக்குவிப்பு பொதியொன்று முன்மொழியப்படுகின்றது. இது ஐ.அ.டொ. 50 மில்லியன், ஐ.அ.டொ. 100 மில்லியன் மற்றும் ஐ.அ.டொ. 1000 மில்லியனுக்கு மேலதிகமான முதலீடுகளுக்கு முதலீட்டுப் பெறுமதியில் 150 வீதம் வரையிலான மூலதனக் கொடுப்பனவு மற்றும் முத லீடுகள் மீதான முற்பண வரிகள் நீக்கப்படுதல் என்பனவற்றை உள்ளடக்கியதாகும். (விளக்கக்குறிப்பு III (இ)

❖ தனியார் துறையினருடனான கலந்துரையாடலைத் தொடர்ந்து, தனியார் துறையின்சில பொருத்தமான வேண்டுகோள்களை சீர்செய்வதற்கும், அமுல்படுத்துவதற்கும் வசதியளிக்கக் கூடிய வகையில் உள்நாட்டு இறை வரிச் சட்டத்தில் சில திருத்தங்களை மேற்கொள்வதற்கு முன்மொழிகின்றேன். இவைகள் தொழில்நுட்பக் குறிப்பில் விளக்கப்பட்டுள்ளது.

❖ ஏற்றுமதி ஊக்குவிப்பிற்கு வசதியளிக்கக் கூடிய வகையில் பிங்கிரிய மற்றும் வகவத்த கைத்தொழில் வலயங்களில் வேலைகளுக்கு ஆதரவளிக்கப்படும்.

❖ கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் கீழ் காங்கேசன்துறை, மாந்தைக் கிழக்கு, பரந்தன், கொண்டச்சி, கின்னியா, சம்மாந்துறை மற்றும் திருகோணமலையில் கைத்தொழில் பேட்டைகள் உருவாக்கப்படும்.

# புதிய சுங்க சட்டத்தை இயற்றுகிறது அரசு

❖ “தகவல் தொழில் நுட்ப முனைவானது” கலையிலிருந்து விஞ்ஞானத்திற்கான உள்ளகப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்திற்கு வசதியளிக்கக் கூடிய வகையில் விரிவுபடுத்தப்படும். இதன் கீழ் 1000 வேலையற்ற கலைத்துறைப் பட்டதாரிகளை தகவல் தொழில் நுட்ப வியாபார செயலாற்றுகைப் பொறிமுறை மற்றும் வெளிவாரி அறிவுச் செயலாற்றுகை நிறுவனங்களில் ஒரு வருட உள்ளகப் பயிற்சி பெற்றுக் கொடுப்பதுடன் பயிற்சியின் 12 மாதங்களுக்கான மாதாந்த சம்பளத்தின் 50 வீதத்தினை அல்லது உயர்ந்தபட்சமாக 25,000 ரூபாவை அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்படும். இதற்காக ஏற்கனவே ரூபா 300 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



❖ நாம் முக்கியமாக தகவல்தொழில்நுட்ப சேவைகள் துறையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் தமது வேதன செலவீனத்தில் 35 சதவீதத்தினை மேலதிக செலவாக கழிப்பதற்கு பெற்றுள்ள தகைமையினை நீக்குவோம்.

❖ நாம் கடற்படை, சுங்கம், குடிவரவு, தனியான மற்றும் கைத்தொழில் பயிற்சி நிறுவகம், இலங்கை தர நிர்ணய நிறுவகம் மற்றும் தேசிய நீரியல் வள மூலங்கள் முகவர் போன்ற ஏனைய தேசிய தர உத்தரவாத நிறுவனங்கள் என்பனவற்றை உள்ளடக்கியதான ஒருங்கிணைந்த எல்லைக் கட்டுப்பாட்டுப் பிரிவினை அறிமுகப்படுத்துவோம். சுங்கத் திணைக்களத்தின் கடல் பிரிவினை மீளமைப்பதன் மூலம் சட்டவிரோத கடத்தல் மற்றும் போதைப்பொருள் வர்த்தகம் இல்லாதொழிக்கப்படும்

❖ அரசாங்கம் புதிய சுங்க சட்ட நகலினை இயற்றும் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளது. இருந்த போதிலும் இந்த இடைப்பட்ட காலத்தில் சில பிரதான மாற்றங்களான வர்த்தக வசதிகளை மேம்படுத்தல் மூலம் வெளிப்படைத் தன்மையை அதிகரித்தல், முறையீட்டு செயற்பாடுகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் இடர் முகாமைத்துவம் என்பன தொடர்பான விடயங்களில் திருத்தங்களை ஏற்படுத்துவதற்கு பிரேரிக்கின்றேன். ஆலோசனை தொடர்பான விடயத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னர் இவ்வாறான திருத்தங்களிற்கு பங்குபற்றுநர்களின் ஆலோசனை பெறப்பட்டு அதனடிப்படையில் உள்ள ஆதரவினை பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

❖ நிதி அமைச்சின் கீழ் ஓர் வருமான உளவுப் பிரிவு அமைக்கப்படவுள்ளது. எமது பிரதான வருமானம் சேகரிக்கும் திணைக்களங்களான சுங்கம், உள்நாட்டு வருமான வரித்திணைக்களம் மற்றும் மதுவரித் திணைக்களம் என்பவற்றில் வருமான சேகரிப்பினை விரிவுபடுத்தல், சேகரிக்கப்படும் மொத்த வருமானத்தை அதிகரித்தல் பணக்கசிவு மற்றும் வரி ஏய்ப்பினை குறைத்தல் போன்ற வசதிகள்ள ஏற்படுத்தும் நோக்கில் அமைக்கப்படவுள்ளது.

❖ சுங்கவரித் திணைக்களத்தில் அங்கீகரிக்கப்பட்ட பொருளாதார பொறிமுறை செயற்றிட்டம் 2019ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட உள்ளது. இதுஇணங்காணப்பட்ட இடர் குறைந்த வியாபாரிகள் மற்றும் அனுமதி முகவர்கள் ஆகியோருக்கு விரைவுபடுத்தப்பட்ட அனுமதியினை பெற்றுக்கொள்ள வழிவகுக்கும்.

❖ அரசாங்கம் நுகர்வோர் பாதுகாப்பு தொடர்பாக சில பொருட்களுக்கு கட்டுப்பாட்டு விலைகளை விதித்துள்ளது. இருந்த போதிலும் நியாயமான விலை சீரமைப்பு மூலம் தடையின்றிய விநியோகம் உறுதிப்படுத்தப்படல் அவசியமானது. இவ்விளைவினை நோக்கி அரசாங்கம் ஒரு பொறிமுறையை அறிமுகப்படுத்தி அதன் மூலம் கட்டுப்பாட்டு விலை தொடர்பான மீளாய்வினை மாறி நாணயமாற்று வீதம் மற்றும் ஏனையமாறிகளைக்கவனத்திற்கொண்டு காலாண்டிற்கொருமுறை நடைமுறைப்படுத்தும்.

❖ இரத்தினம் மற்றும் ஆபரண கைத்தொழிலினை மேம்படுத்தும் நோக்கில் பட்டை தீட்டப்படாத இரத்தின இறக்குமதியில் பயன்படுத்தப்பட்ட துறைமுகம் மற்றும் விமான நிலைய அறவீடு, கற்களைப் பதிப்பதற்கான உபகரணம் என்பவற்றுக்கு விதிக்கப்பட்ட சுங்க வரி 7.5 சதவீதத்திலிருந்து 2.5 சதவீதமாக குறைக்கப்படுகிறது.

❖ குறைந்த காலப் பகுதியில் அபிவிருத்திக்கு அதிகளவில் பங்களிப்புச் செய்யும் துறையாக சுற்றுலாத் துறை விளங்குகிறது. இத்துறையில் பங்களிக்கப்படும் நிதியினைக் கருத்திற்கொண்டு வெளிநாட்டு நாணய பெறுகைகளை பெற்றுக் கொள்ளும் சுற்றுலா விடுதிகளினை இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையினால் பதிவு செய்யப்படும் போது அறவிடப்படும் தேசக் கட்டுமான வரி நீக்கப்படவுள்ளது.

❖ ஹோட்டல்களில் கட்டணச் சிட்டைகள் ஐ.அ. டொலர்களில் வழங்கப்படும் போது பிரயாண முகவர்கள் அதற்கான கட்டணத்தினை ஐ.அ. டொலர்களில் செலுத்துவதனைக் கட்டாயமாக்குவதற்கு நான் முன்மொழிகின்றேன். இது தொடர்பான அறிவுறுத்தல்களை மத்திய வங்கி வெளியிடும்.

❖ கௌரவ சபாநாயகர் அவர்களே, முக்கியமாக ஹோட்டல்பதிவுகளை மேற்கொள்வதில் இணையத்தள தொழில்நுட்பப்பயன்பாடு காரணமாக பாரம்பரிய விருந்தோம்பல் தொழிற்றுறை முறைசாரா துறையின் வளர்ச்சியுடன் பல்வேறு மாற்றங்களைக் கண்டுள்ளதுடன் தொடர்ந்தும் ஒழுங்குபடுத்தப்படாமலும் காணப்படுகின்றது.

❖ இதன் காரணமாக, நாம் இணையத் தள மூலமான ஒதுக்கீடுகளினால் பெறப்படும் நன்மைகளை ஏற்றுக்கொள்ளும் அதே வேளையில் படிப்படியாக சிறிய மற்றும் நடுத்தர தொழிற்றுறையினை முறைசார்ந்த சுற்றுலாத் துறையுடன் இணைத்துக் கொள்ளக்கூடிய தேவையினை கருத்திற்கொள்ளல் அவசியம். அதன்படி 2020 ஏப்ரல் 01 ஆம் திகதியிலிருந்து 5 அறைகளுக்கு மேலதிகமானதாக மேற்கொள்ளப்படும்இணையத்தள பதிவுகள் / வலைத்தள ஒதுக்கீடுகள் ஹோட்டல் அல்லது வேறு நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படுமானால் அவை இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும். இதனை இலகுபடுத்தும் வகையில் இப் பதிவுச் செயன்முறை மேலும் எளிதாக்கப்படும்.

❖ அதேவேளையில், கைத்தொழிற்றுறையினை விளையாட்டுச் சுற்றுலா போன்ற புதிய முன்னெடுப்புகளுக்கு பன்முகப்படுத்துகின்ற எமது கொள்கையினைக் கருத்திற் கொண்டு இலங்கையினை சர்வதேச கோ-கார்ட் (Kart) விளையாட்டுக்குச்சிறந்த இடமாக முன்னேற்றுவதற்கு இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையுடன் இணைந்து தனியார் துறையினை ஊக்குவிப்பதற்கு நான் முன்மொழிகின்றேன். எனவே, இந்தவகையில் கார்ட் பந்தைய வாகனங்கள் மற்றும் கார்ட் வாகனங்களுக்குப் பயன்படுத்தப்படும் ரயர்கள் மீதான செஸ் வரி மற்றும் சுங்கத் தீர்வையினை நீக்குவதற்கு நான் முன்மொழிகின்றேன்.

❖ நிறுவன வருமான வரியான 14 சதவீதத்தினை செலுத்துகின்ற ஏற்றுமதித் துறைகளின் மீது விதிக்கப்பட்டிருந்த பொருளாதார சேவைக் கட்டணம் 0.5 சதவீதத்திலிருந்து 0.25 சதவீதமாக குறைக்கப்படவுள்ளது. இது ஏற்றுமதிகள், தகவல் தொழில் நுட்பம் மற்றும் சுற்றுலா போன்றவற்றிற்கு சிறந்த உந்துதலாக அமையும்.

❖ ஹோட்டல்களை புனர்நிர்மாணம் செய்வதற்கு வசதியேற்படுத்திக் கொடுக்கும் முகமாக சில தேர்வு செய்யப்பட்ட பொருட்கள் தொடர்பான செஸ் வரி வீதம் குறைக்கப்படும்.

❖ மோசமான நிலையில் காணப்படும் மத்திய கலாசார நிதியம் சுற்றுலாப் பயணிகளைக்கவரும்விதத்தில் ஓய்வு அறைகள், அறிவித்தல் பலகைகள், பாதுகாப்புச் சாவடிகள், தகவல் மையங்கள் போன்ற பொது வசதிகளை உருவாக்குவதற்குத் தேவையான நிதியுதவிகளை வழங்குவதன் மூலம் அபிவிருத்தி செய்யப்படும்.

❖ 18 வயதிற்குக் கீழ்ப்பட்ட மாணவராகத் தமது அடையாளத்தினை உறுதிப்படுத்தும் சர்வதேச சுற்றுலாப் பயணிகளுக்குரிய தேசியப் பூங்காக்கள் மற்றும் கலாசாரத் தளங்கள் என்பவற்றிற்கான நுழைவுக் கட்டணங்கள் எதிர்வரும் 2019 ஜூன் முதலாம் திகதியிலிருந்து 50 சதவீதத்தினால் குறைக்கப்படும்.

❖ உள்ளூர் கட்டுமான நிறுவனங்களுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் முகமாக முழுமையான வெளிநாட்டு நிதி முதலீடுகள் தவிர்ந்த ஏனைய அரசாங்கக் கருத்திட்டங்கள் உள்நாட்டுக் கட்டுமான நிறுவனங்களுடனோ உள்ளூர் ஆலோசனை வழங்கும் நிறுவனங்களுடனோ கூட்டு ஒப்பந்தங்கள் செய்து கொள்ளாத சர்வதேச நிறுவனங்களுக்கு அரசாங்க கருத்திட்ட ஒப்பந்தங்கள் வழங்கப்படமாட்டாது. இது உள்ளூர் நிறுவனங்கள் புதிய தொழில்நுட்பத்தினை பெற்றுக் கொள்வதற்கு வசதி யேற்படுத்திக் கொடுக்கும்.

❖ நிர்மாணத்துறை கிரயங்களானது முன்மொழியப்பட்டுள்ள உப தீர்வை திருத்தங்கள் மற்றும் பிர

(19 ஆம் பக்கம் பார்க்க)

# மாணவர்கள் உயர் கல்வியைத் தொடர அரசு கடனுதவி

(18 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தான நிர்மாணத்துறை ஒப்பந்தக்காரர் மீதான தேசக் கட்டுமான வரியினை நீக்குதல் என்பவற்றின் மூலம் குறைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

❖ ஆதன அபிவிருத்தித் துறையினை மேலும் அபிவிருத்தி செய்யும் முகமாக நான் பின்வரும் விடயங்களை முன்மொழிகின்றேன்.

அ. இலங்கையில் 400,000 ஐக்கிய அமெரிக்கா டொலர்கள் அல்லது அதற்கு மேல் கூட்டு ஆதனங்களில் முதலீடு செய்துள்ள வெளிநாட்டினர்க்கு மூன்று வருடங்களுக்கு குடியிருப்பு விசா வழங்கப்படும். இச்செயன்முறை இவ் வருடத்தில் நடைமுறைப்படுத்தப்படும். இக்குடியிருப்பு விசா குறித்த வெளிநாட்டினர் தம் முதலீட்டிலிருந்து வெளியேறும் பட்சத்தில் செல்லுபடியற்றதாக மாறும்.

ஆ. கட்டுமானப் பொருட்களுக்கான இறக்குமதி செஸ் வரி 30 சதவீதத்தினால் குறைக்கப்படவுள்ளது.

❖ நிலைபேறான சக்தி வள அதிகார சபையானது 2019 ஆம் ஆண்டில் அனைத்து வர்த்தக கட்டடங்கள் மீதான மின்சக்தி தொடர்பான குறைந்த பட்ச நியமங்களை உருவாக்கும். தற்போதுள்ள அனைத்து வர்த்தகக் கட்டடங்களுக்கும் குறைந்த பட்ச நியமங்களை உள்வாங்கிக் கொள்வதற்கு 2019 இல் இருந்து ஐந்து வருட கால அவகாசத்தைப் பெற்றுக் கொடுக்கும்.

❖ அதே வேளை திரு. சபாநாயகர் அவர்களே, நிர்மாணத்துறையில் பயன்படுத்தப்படும் பல கட்டட மூலப் பொருட்களுக்கு குறைந்த பட்ச நியமங்கள் காணப்படாதுள்ளது. இதனால் கட்டடங்கள் மற்றும் ஏனைய நிர்மாணங்களின் உறுதித் தன்மை மற்றும் நிலைபேற்றுத் தன்மை என்பவற்றில் விட்டுக்கொடுப்பு மற்றும் பல எதிர்மறையான விளைவுகளுக்கும் முகங்கொடுக்க வேண்டியுள்ளது. அதனடிப்படையில் இலங்கை தர நிர்ணய நிறுவகமானது குளியலறை உபகரணங்கள், குழாய்கள், மழைக்குளியல் உபகரணம் போன்றவற்றிற்கான குறைந்த பட்ச தர நியமங்கள் இற்றைப்படுத்தப்பட்டு 2020 ஏப்ரலில் இருந்து அமுல்படுத்தும். இதன் மூலம் நீர்ப் பற்றாக்குறைக்கான பிரதான மூலமானது சீர் செய்யப்படும்.

### அறிவினால் வழி நடத்தப்படும் திறன்வாய்ந்த சங்கம்

❖ கௌரவ சபநாயகர் அவர்களே, கல்வித் துறை மீதான முதலீட்டு உபாயமானது இரண்டு நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக வழிநடத்தப்படுகின்றது. அதாவது உட்கட்டமைப்பு வசதிகளின் கிடைப்பனவினை உறுதிப்படுத்துவதோடு பாடவிதான மற்றும் ஆசிரியர் பயிற்சி மேம்படுத்தல்கள் மூலம் மாணவர்களுக்கு சந்தர்ப்பங்களை உருவாக்குவதுமாகும்.

❖ எமது அரசாங்கத்தின் பிரதான நிகழ்ச்சித் திட்டமான அனைத்துச் சிறார்களுக்கும் "13 வருட கல்வி" இவ் வருடத்தில் மேலும் ஆதரவளிக்கப்படும். இதனடிப்படையில் விஞ்ஞான ஆய்வு கூடங்கள், வகுப்பறைகள், துப்புரவு ஏற்பாடுகள் மற்றும் நீர் வசதிகள் ஆசிரியர் விடுதிகள் என்பவற்றினை மேம்படுத்துவதற்காக நாங்கள் ஏற்கனவே ரூபா 32,000 மில்லியன்களை ஒதுக்கியுள்ளோம்.

❖ அதேவேளை ஆசிரியர்களின் தொடர்ச்சியான தொழில்வாண்மை அபிவிருத்தியானது தொழில்நுட்ப உட்செலுத்தல் மூலம் வசதியளிக்கப்பட்டு அமுல்படுத்தப்படும். இக்கற்கை நெறிகளானது தற்போது காணப்படும் வசதிகளைப் பயன்படுத்தி பாடசாலை விடுமுறை காலங்களில் நடைமுறைப்படுத்தப்படும்.

❖ கௌரவ சபாநாயகர் அவர்களே, எமது பாடவிதானங்களானது தர்க்க ரீதியான மற்றும் பகுப்பாய்வுத்திறன், ஆக்கத்திறனான கற்கை முறைமைகள் மீது கவனஞ் செலுத்தப்படும் வண்ணம் நவீனமயப்படுத்தப்படும். எமது எதிர்கால முதலீடுகளானது தற்போது தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் கலையினூடாக விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதக் கல்வித்திட்டத்தினூடாக வழி நடத்தப்படும். இது மாணவர்கள் சங்கீதத்துடன் கணிதம் அல்லது ஆங்கிலத்துடன் உயிரியல் பாடங்கள் போன்ற பாடங்களின் சேர்க்கையினைத் தெரிவு செய்ய வழிவகுக்கின்றது.

❖ கௌரவ சபாநாயகர் அவர்களே, கல்விச் சிறப்புத் தேர்ச்சிக்கான புலமைப் பரிசில் ஒன்றினை ஆரம்பிப்பது தொடர்பான அறிவிப்பினை மேற்கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன். இதன் மூலம் க.பொ.த. (உ.த) பரீட்சையில் பௌதீக விஞ்ஞானம், உயிரியல் விஞ்



ஞானம், தொழில் நுட்பம், வர்த்தகம் மற்றும் கலைப் பிரிவுகளில் உயர் செயலாற்றுகையினைக் காட்டும் மாணவர்கள் தமது பல்கலைக்கழகக் கல்வியினை ஹாவட், எம்.ஐ.ரி., ஒக்ஸ்போட், கேம்பிரிட்ஜ் போன்ற பல்கலைக்கழங்களில் தொடர்வதற்கு இந்நிதியானது வசதியளிக்கும். இதற்கான முதலாவது தகைமை பெறும் மாணவர் தொகுதியானது 2019 ஆம் ஆண்டு ஓகஸ்ட்டில் இடம்பெறவுள்ள உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளில் இருந்து தெரிவு செய்யப்படுவர். இவ்வருடத்தில் தமது துறைகளில் உயர்ந்த பட்ச செயலாற்றுகையினைக் காட்டும் 14 பேருக்கு புலமைப் பரிசில்கள் பெற்றுக் கொடுக்கப்படும். இதன் கீழ் தெரிவு செய்யப்படுகின்றவர்கள் உயர்கல்வியின் பின்னர் நாடு திரும்பி 15 வருடங்கள் நாட்டிற்காக சேவையாற்ற வேண்டும். இப்புலமைப் பரிசிலானது ஏனைய வருடங்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

❖ முன்பள்ளிக் கல்வி அபிவிருத்திக்கான முதலீடுகளானது புறக்கனிக்கப்பட்டுள்ளது. குறைந்தபட்ச தர நியமங்களுடன் இணங்கிச் செயற்படுவதை உறுதி செய்யும் வகையில் அரசாங்கமானது ஒழுங்குபடுத்தல் வகிபாகத்தினை ஏற்று இத்துறையில் தனியார் துறையின் முதலீட்டினை நாம் ஊக்குவிக்கின்றோம்.

❖ இவ்வினாவினை அடைந்து கொள்வதற்கு அரசாங்கமானது இலங்கையில் முன்பள்ளிக் கல்வி நிர்வாகம் மற்றும் ஒழுங்குபடுத்தலுக்கான சட்ட வேலைச் சட்டகத்தினை அறிமுகம் செய்யும். முன்பள்ளிக் கல்வி தொடர்பான தேசிய பாடவிதான வேலைச் சட்டகமொன்று ஆசிரியர் பயிற்சி மற்றும் வேலைச் சூழ்ல்கள் மேம்பாட்டுடன் செயற்படுத்தப்படும்.

❖ உரிய தகைமைகளைக் கொண்டுள்ளவர்கள் முன்பள்ளி கல்வி நிலையங்களை உருவாக்குவதற்கும் அரசாங்கத்தின் பதிவு செய்யப்பட்ட முன்பள்ளி நிலையங்களை திருத்தி புதுப்பிப்பதற்கும் வசதிகள் செய்து கொடுக்கப்படும். இதன் பொருட்டு "என்டபிறைஸ் ஸ்ரீலங்கா" நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் "சிங்கித்தி பாஸல" சலுகைக் கடன் திட்டமொன்றினை நாம் அறிமுகம் செய்யவுள்ளோம். இக் கடனுக்கான வட்டியில் 50 சதவீதத்தினை அரசாங்கம் மானியமாகப் பெற்றுக் கொடுக்கும். (விளக்கக் குறிப்பு III (ஆ) 1.16)

❖ பல்கலைக்கழகங்களின் உட்கட்டமைப்பு வசதிகளில் காணப்படும் இடைவெளியினை பூரணப்படுத்துவதற்காக ஏற்கனவே ரூபா. 25,000 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. இம் முதலீடுகளினூடாக கேட்போர் கூடங்கள், பேராசிரியர் அலகு, திணைக்களக் கட்டடத் தொகுதிகள், நூலகங்கள் மற்றும் உணவகங்கள் மேம்படுத்தப்படும். வயம்ப மற்றும் சப்ரகமுவ பல்கலைக்கழகங்களின் மருத்துவ பீடங்களுக்கு இணைந்ததாக குளியாப்பிட்டிய மற்றும் இரத்தினபுரி வைத்தியசாலைகளில் பேராசிரியர் பிரிவுகள் உருவாக்கப்படும். அதேவேளை ருஹுனுப் பல்கலைக்கழகத்தில் இணைந்த சுகாதார விஞ்ஞான பீடமானது உருவாக்கப்படும். இவை எமது நாட்டில் உடனடித் தேவையாகக் காணப்படுவதுடன், மாணவர்கள் மருத்துவத்துடன் தொடர்புபட்ட துறைகளில் தொழிலைத் தொடர முடியும். ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் மருத்துவப்பீடத்தில் புற்று நோய், நீரழிவு மற்றும் தொற்று நோய்கள் போன்றவை தொடர்பான ஆராய்ச்சிகளை மேற்கொள்வ தற்காக நவீனத் தொழில் நுட்பத்துடன் கூடிய ஆய்வு கூடமொன்று உருவாக்கப்படும்.

❖ கௌரவ சபாநாயகர் அவர்களே, வருடாந்தம் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் 300,000 இற்கு மேற்பட்ட மாணவர்களிலிருந்து 30,000 பேரே பல்கலைக்கழகம் நுழைகின்றனர். அரச பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு செய்யப்படாத மாணவர்கள் தமது உயர் கல்வியினை அரசதுறையல்லாத பல்கலைக்கழகங்களில் தொடர்வதற்கு நாங்கள் கடன் திட்டமொன்றினை அறிமுகம்செய்கின்றோம். "என்டபிறைஸ் ஸ்ரீலங்கா" நிகழ்ச்சித் திட்டத்தின் "எனது எதிர்காலம்" கடன் திட்டத்தின் கீழ் ஒரு மாணவன் ரூபா 1.1 மில் லியன் வரை கடனைப் பெற்றுக் கொள்ளலாம். இது 0 சதவீத வட்டியில் பெற்றுக் கொடுக்கப்படுவதுடன், பட்டப்படிப்பினை முடித்து இரண்டு வருடங்களின் பின்பே கடன் மீள் செலுத் தப்பட வேண்டியதுடன், அது 12 வருடங்களில் திரும்பிச் செலுத்தலாம். (விளக்கக் குறிப்பு III (ஆ)-1.11) வட்டி மானியத்திற்காக ஏற்கனவே ரூபா 200 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

### வேலைக்கான ஆற்றல்

❖ கௌரவ சபாநாயகர் அவர்களே, அரசாங்கமானது தொழிற்கல்வித் துறையில் பெருமளவு முதலீடுகளை மேற்கொண்டுள்ளது. எவ்வாறாயினும், கைத்தொழில் துறையின் தேவைகளானது இரண்டு முனைவுகளில் பூர்த்தி செய்யப்படாதுள்ளது. அதாவது, போதுமானளவில் திறன்வாய்ந்த மற்றும் தன்னம்பிக்கையான கைவினைஞர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள். தொழில் நுட்பவியலாளர்கள் மற்றும் தேவையான திறன்கள் காணப்படாமை. கைத்தொழிற்றுறையின் வழிகாட்டுதலுடன் ஒருங்கிணைந்த தீர்வு மிகவும் திறனானதாகக் காணப்படும். அதனடிப்படையில் பின்வரும் முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்படுகின்றன.

❖ தம்மிடம் காணப்படும் மூலவளங்களை முழுமையாகப் பயன்படுததாத தெரிவு செய்யப்பட்ட தொழிற்பயிற்சி நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்ட கைத்தொழில் சம்மேளனங்களுடன் இணைந்து கைத்தொழில்களுக்கு அவசியமான தகவல் தொழில்நுட்பம், நிர்மாணத் தொழில் மற்றும் சுற்றுலாத் துறைகளில் பயிற்சிகள் பெற்றுக் கொடுக்கப்படும்.

❖ முன்னுரிமை விடயமாக தமிழ்மொழி மூல ஆசிரியர் பயிற்சியானது ஊக்குவிக்கப்பட வேண்டிய தேவை காணப்படுகின்றது. இதன்பொருட்டு தேசிய ஒருமைப்பாடு அரச கரும மொழிகள் சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சிற்கு ரூபா. 400 மில்லியனை ஒதுக்கீடு செய்வதற்கு முன்மொழிகின்றேன்.


❖ நிர்மாணத் தொழில் துறைக்கு அவசியமான திறனுள்ள மற்றும் அரைத்திறன் கொண்ட தொழிலாளர்களுக்குப் பயிற்சியளிப்பதற்காக நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி முகவராண்மைக்கு (CIDA) ஆதரவளிக்கப்படும். இதன் பொருட்டு ரூபா. 300 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது.

❖ சுகாதார நலனோம்புகைத் துறைக்கு அவசியமான திறன்களை அபிவிருத்தி செய்வதற்கான உடனடித் தேவை காணப்படுகின்றது. தாதிகளுக்கு சர்வதேச மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நெறிகளை பெற்றுக் கொடுப்பதற்கு தனியார் துறையினர் ஊக்குவிக்கப்படுவதுடன், அரசாங்கமானது ஒவ்வொரு தனி பயிற்சியாளருக்கும் மாதாந்தம் ரூபா. 10,000 உதவித் தொகையை இரண்டு வருட காலத்திற்கு பெற்றுக் கொடுக்கும். இதையொத்த தொழிற்பயிற்சித் திட்டமானது மருந்தகவியல் தொழில் வல்லுநர்களுக்கும் ஊக்குவிக்கப்படும். மருந்து உற்பத்திக் கம்பனிகள் ஒருவருட கால தொழிற்பயிற்சிக்காக விஞ்ஞானப் பட்டதாரிகளை உள்வாங்கி அப்பயிற்சி நெறியானது உரிய தொழிற்பயிற்சி ஒழுங்குபடுத்துநரால் ஏற்றுக்கொள்ளப்படும். அரசாங்கமானது ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் அவ்வருட காலப்பகுதிக்கு மாதாந்தம் 15,000 ரூபாவினை உதவித் தொகையாகப் பெற்றுக் கொடுக்கப்படும். இவ்வாறான தொழிற்பயிற்சி நெறிகளின் வெற்றியானது அவற்றை ஏனைய துறைகளிலும் அமுல்படுத்துவதற்கு வாய்ப்பளிக்கும்.

❖ இலங்கை இராணுவமானது அரசாங்கத்தின் முன்னெடுப்பான குறைந்த வருமான சூழ்நிலையிலிருந்து இளைஞர்களை வினைத்திறனான முறையில் விவசாயம், கால்நடை வளர்ப்பு, அலங்கார மீன் வளர்ப்பு மற்றும் பெக்கோ, மோட்டர் கிரேடர்ஸ், டோஸர்ஸ் போன்ற கனரக இயந்திரங்களை இயக்குதல் தொடர்பான பயிற்சிகளை மின் இணைப்பாளர்கள், ஒட்டுநர், காற்றுச் சீரமைப்புத் தொழில்நுட்பவியலாளர், உணவுப் பராமரிப்பு, தச்சன், மேசன் மற்றும் குழாய் பொருத்துநர் போன்ற துறைகளிலும் பயிற்சிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு முன்வந்துள்ளனர்.

(தொடரும்)

# அர்ஜுன் மகேந்திரனுக்கு இரண்டு சிவப்பு எச்சரிக்கை



(கொழும்பு)
இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனை இலங்கைக்கு வரவழைப்பது தொடர்பில் வெளிவிவகார அமைச்சு இலங்கை பொலிஸாருக்குத் தேவையான தகவல்களை வழங்கியுள்ளதுடன் இரண்டு சிவப்பு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது என வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்தார்.

அத்துடன் இதற்காக "இன்டர்போல்" சர்வதேச பொலிஸ் உதவியையும் நாம் நாடியுள்ளோம் எனவும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில்நேற்று முன்தினம் வாய்மூல விடைக்கான வினா நேரத்தில் மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் நளிந்த ஜெயதிஸ்ஸ எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.(இ-7)

# வீதியில் உறங்கும் யாசகர் ஒருவர் ரூ.3 இலட்சத்து 64,684 கடனாளி

## கம்மன்பில கணக்கு



(கொழும்பு)
இலங்கையின் தற்போதைய நிலையில் வீதியில் உறங்கும் யாசகர் ஒருவர் 3 இலட்சத்து 64 ஆயிரத்து 684 ரூபாய் கடனாளி என பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில்நேற்று முன்தினம் வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு சுட்டிக்காட்டினார்.

வருமானத்தை அதிகரிக்காது கடன்களைப் பெற்று இந்த நாட்டின் கடன் சுமையை அதிகரிக்கவே அரசாங்கம் முயற்சிக்கின்றது.

இப்போது நாட்டின் மொத்தக்கடன் 12 ட்ரில்லியனாக உள்ள நிலையில் இந்த ஆண்டு இறுதிக்குள் 15.1 ட்ரில்லியனாக்கவே இவர்கள் முயற்சிக்கின்றனர் எனவும் தெரிவித்தார். (இ-7)

# அரசாங்கம் உள்ளூர் உற்பத்திகளுக்கு முக்கியத்துவம் வழங்க வேண்டும்

## மகிந்தவிடம் வைத்திய சங்கத்தினர் கோரிக்கை

(கொழும்பு)
இறக்குமதி செய்யப்படுகின்ற பால்மா, கோதுமைமா மற்றும் பழங்கள் ஆகியவற்றால் சுகாதாரப் பிரச்சினைகளே ஏற்படுகின்றன.

எனவே அரசாங்கம் உள்ளூர் உற்பத்திகளுக்கு முக்கியத்துவம் வழங்க வேண்டும் என அரச வைத்திய சங்கத்தினர் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அரச வைத்திய சங்கத்தினரது கோரிக்கைகள் தொடர்பில் உரிய கவனம் செலுத்துவதாக எதிர்க்கட்சித் தலைவர் வாக்குறுதியளித்துள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

அரச வைத்திய சங்கத்தினருக்கும் எதிர்க் கட்சித் தலைவருக்குமிடையிலான சந்திப்பு பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றது. இதன்போதே மேற்கண்ட கோரிக்கையை வலியுறுத்தினர் என அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-7)

# நெல் விலை அதிகரிப்பு

(கொழும்பு)
சிறுபோகத்திலிருந்து நெல் விலையை அதிகரிக்க தீர்மானித்துள்ளதாக, விவசாய, கிராமிய பொருளாதார அமைச்சர் பி. ஹரிசன் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, நாடு நெல் கிலோ ஒன்றின் விலை 40 ரூபாயாகவும், சம்பா நெல் கிலோ ஒன்றின் விலை 43 ரூபாயாகவும் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஏப்ரல் மாதம் முதல், அரிசி விலையை அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, அமைச்சர் தெரிவித்தார். (இ-7)

# ஹக்கல பூங்காவுக்கு அருகில் பதற்றம்





(ஹக்கல)
நுவரெலியா, ஹக்கல தாவரவியல் பூங்காவுக்கு அருகில் நேற்று முன்தினம் முற்பகல் 10.30 மணி முதல் பதற்றமான சூழல் நிலவி வருகிறது.

ஹக்கல பூங்காவுக்கு அருகில் வியாபாரத்தில் ஈடுபட்டு வரும் 42 கடைகளின் உரிமையாளர்கள், தாவரவியல் பூங்காவின் நடத்துநர்களுக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருவதால் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

இதனால் பூங்காவைப் பார்வையிட வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் அசௌகரியங்களுக்குள்ளாகியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

சுற்றுலாப் பயணிகளை பூங்காவுக்குள்நுழைய விடாது பூங்காவின் நுழைவாயிலை மூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

தமது வியாபார நடவடிக்கைகளைப் பாதிக்கும் வகையில், பூங்கா நிர்வாகம் தான்தோன்றித்தனமாகச் செயற்பட்டு வருவதாகக் கூறியே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1665

### தக்சன்

முதலில் வேலைக்காரனாயிருக்கக் கற்றுக்கொண்டால் எஜமானாகும் தகுதி பின்னர் தானாகவே வரும்



### லக்ஸ்மி

மதவெறி வளர்த்தால் பல கல்லறைகள் உருவாகும், மரம் செடி வளர்த்தால் நம் சந்ததிகள் நலமாகும்



### நீரஜா

பணத்தின் மதிப்பு உன்னிடம் இல்லாத போது தெரியும்... உன்னுடைய மதிப்பு பணம் இல்லாத போது தெரியும்



### கண்மணி

காதல் என்பது ஒட்டிக்கொள்வதும் உரசிக் கொள்வதும் இல்லை... இதயத்திலிருந்து தூய அன்பை கொடுப்பதே உண்மையான காதல்...!



### குபேரன்

விதைவிதைத்தால் பணம் முளைக்கும் என்றால் இந்த உலகில் அனைவரும் விவசாயிகளாகியிருப்பர்



### தயாளன்

பெப்ரவரி மாசம் ஒரே ஒரு சந்தோசம் என்னனா 28 நாளுக்கு 31 நாள் சம்பளம் கிடைக்கும்



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

அறியாமையின் துயரத்தின் தாய்.

~ இங்கர்சால்

வலம்புரி

T.P : 021 567 1530

website : www:valampurii.lk

# திருக்கேதீச்சரத்து சிவனும் கைது செய்யப்படலாமோ!

மன்னார் புதைகுழியில் தோண்டித் தோண்டி எடுத்த எலும்புக்கூடுகள் யாருடையவை என்ற கேள்விகள் எழுந்திருந்தவேளை,

எடுக்கப்பட்ட எலும்புக்கூடுகளின் மாதிரிகள் காபன் பரிசோதனையின் பொருட்டு அமெரிக்காவுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

குறித்த காபன் பரிசோதனை அறிக்கை வெளிவந்தபோது பரிசோதனை முடிவு பேரதிர்ச்சியைத் தந்தது.

அதாவது மன்னார்ப் புதைகுழியில் எடுக்கப்பட்ட எலும்புக்கூடுகளின் மாதிரிகளைப் பரிசோதித்தபோது அவை 1499ஆம் ஆண்டுக்கும் 1719ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்து எலும்புக்கூடுகள் என பரிசோதனை முடிவு தெரிவிக்கின்றது.

பெரும் போரும் அதனால் ஏற்பட்ட பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களின் உயிரிழப்பும் காணாமல்போனவர்களின் விவகாரமும் தமிழ் மக்களை வாட்டி வதைத்து நிற்கும் வேளையில்,

மன்னார் புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள் சுமார் முன்னூறு தொடக்கம் ஐந்நூறு ஆண்டுகளுக்கு முற்பட்டவை எனும் போது இஃதென்ன கதை என்ற கேள்வி அனைவரிடமும் ஏற்படவே செய்யும்.

மன்னார் புதைகுழி தோண்டப்படும்போது அதிலிருந்து எடுக்கப்பட்ட எலும்புக்கூடுகளில் சில எலும்புக்கூடுகள் கை, கால் கட்டப்பட்ட நிலையில் மீட்கப்பட்டதான செய்திகள் ஊடகங்களில் புகைப்படத்துடன் வெளிவந்திருந்தன.

கம்பிகளால் கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டிருந்தபோதும் குறித்த எலும்புக்கூடுகள் 300 – 500 ஆண்டுகளுக்கு முற்பட்டவை என்றால்,

இஃது முழுப்பூசணிக்காயை சோற்றுக்குள் புதைக்கின்ற செயல் என்பது தெட்டத் தெளிவாகிறது.

ஆக, மன்னார்ப் புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள் தொடர்பான காபன் பரிசோதனை அறிக்கை நம்பகத்தன்மையற்றவையாக இருப்பதை எவரும் ஏற்றுக் கொள்வர்.

சில வேளைகளில் காபன் பரிசோதனை அறிக்கை சரியாக இருக்க, ஆய்வுக்குட்படுத்தப்பட்ட எலும்புக்கூடுகள் பொலநறுவையில் தோண்டி எடுக்கப்பட்ட பழங்காலத்து எலும்புக்கூடுகளாக இருந்தாலும்கூட ஆச்சரியப்படுவதற்கில்லை.

எதுஎவ்வாறாயினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர், மன்னார்ப் புதைகுழி எலும்புக்கூடுகளின் பரிசோதனை முடிவு தமிழ் மக்களுக்கு அதிர்ச்சியைக் கூடத் தரலாம் எனக் கூறியிருந்தார்.

அவர் கூறிய அதிர்ச்சி என்பது; குறித்த எலும்புக்கூடுகள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் மன்னார் இருந்த காலப்பகுதிக்குரியவை என்பதாக அறிக்கை வரலாம் என்ற கருத்துப்பட அமைந்திருந்தது.

ஆனால் வந்த அறிக்கை 300 – 500 ஆண்டுகளுக்கு முற்பட்டவை என்பதாக உள்ளது.

இஃது தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல, சிங்கள மக்களுக்கும் அதிர்ச்சியாகவே இருக்கும்.

எதுவாயினும் அமெரிக்காவில் செய்யப்பட்ட காபன் பரிசோதனை அறிக்கையை வைத்துக் கொண்டு; குறித்த எலும்புக்கூடுகள் திருக்கேதீச்சரத்து சிவன் அணிந்த எலும்புகள் என்றும் எனவே கேதீச்சரத்துச் சிவனைக் கைது செய்ய வேண்டும் என்பதாக முடிவுகள் அமைந்தால் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை.

# வெப்ப தாக்கப்பாதிப்புக்கள், தவிர்க்கும் வழிமுறைகள் குறித்து வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் தற்பொழுது காணப்படும் அதிக வெப்ப காலநிலை காரணமாக உடல் நலனில் பல பாதிப்புக்கள் ஏற்படலாம். இவ் வெப்பத்தாக்கம் காரணமாக ஏற்படக்கூடிய பாதிப்புக்கள், உடலில் ஏற்படும் அறிகுறிகள், அவற்றுக்கான முதலுதவிகள், வெப்பத் தாக்கத்தை தவிர்க்கும் முறைகள் குறித்து வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அறிவுறுத்தியுள்ளார்.

❖ வெப்பத்தால் ஏற்படும் பிடிப்புகள்- பயிற்சியின்போது வெப்பத்தால் ஏற்படும் தசைகளில் வலி, தசை இறுக்கம்.

**அறிகுறிகள்:** இவை கை, கால், வயிற்றுப் பகுதிகளில் ஏற்படலாம்.

**முதலுதவி:** உடல் இயக்கங்களில் ஈடுபடுவதை விடுத்து குளிர்ச்சியான இடத்தில் போதுமான ஓய்வு எடுக்க வேண்டும். போதுமான நீரைப பருக வேண்டும்.

❖ வெப்பத்தால் ஏற்படும் அதிக சோர்வு - அதிக வெப்பம் காரணமாக ஏற்படும் அதிக சோர்வு

**அறிகுறிகள்:** அதிக வியர்வை, அதிக உடற் சோர்வு காரணமாக மயக்கம் ஏற்படலாம்.

**முதலுதவி:** உடல் இயக்கங்களில் ஈடுபடுவதை விடுத்து குளிர்ச்சியான இடத்தில் போதுமான ஓய்வு எடுக்க வேண்டும். போதுமான நீரை (15 நிமிடத்திற்கு ஒரு தடவை 1/2 கிளாஸ் நீர்) பருக வேண்டும். உடலை குளிர் நீரால் துடைக்க வேண்டும்.

❖ அதிக வெப்பத்தால் ஏற்படும் உடல் அதிர்ச்சி- அதிக வெப்பத்தாக்கம் காரணமாக உடல் வெப்ப நிலையை சீராகப் பேண முடியாத அதிர்ச்சி- அவசர மருத்துவ நிலை.

**அறிகுறிகள்:** உடல் வெப்பநிலை அதிகரித்தல், இதய துடிப்பு விகிதம், சுவாச விகிதம் அதிகரித்தல், மனக் குழப்பம், தலைவலி, வலிப்பு, மயக்க நிலை.

**முதலுதவி:** பாதிப்படைந்தவரை குளிர்ச்சியான இடத்திற்கு மாற்றுதல், இறுக்கமான ஆடைகளைத் தளர்த்தல், உடலை குளிர் நீரால் துடைக்க வேண்டும். தேவையெனின்1990 எனும்தொலைபேசி இலக்கத்தை அழைத்து நோயாளர் காவு வண்டியை அழைத்து அவசர மருத்துவ உதவி வழங்க ஏற்பாடு செய்தல்.

இப்பாதிப்புக்கள் ஏற்படுவதை தவிர்ப்பதற்கான, கட்டுப்படுத்துவதற்காக கீழ்க் குறிப்பிடப்பட்ட விசேட நடவடிக்கைகளை பின்பற்ற வேண்டும்.

**பாடசாலைகளில் பின்பற்ற வேண்டிய நடவடிக்கைகள்**

1.பாடசாலைகளில் மாணவர்கள் வெளியிடங்களில்/ விளையாட்டு மைதானங்களில் விளையாடுவதைத் தவிர்த்தல்.

2. இடைவேளையின் போது மாணவர்கள் வெளியிடங்களில், விளையாட்டு மைதானங்களில் வெயிலில் நேரத்தைச் செலவு செய்வதைத் தவிர்த்தல்.

3.மாணவர்கள் நீர் பருகுவதற்கும் ஓய்வு எடுப்பதற்கும் வசதியாக 2 மேலதிகமான இடைவேளையை ஏற்பாடு செய்தல்.

4.வெயில் காணப்படும் போது அதிக வெப்ப தாக்கத்தை தவிர்ப்பதற்காக பாடசாலையிலும் வீட்டிலும் மாணவர்களை தேவையின்றி வெளியே அழைத்துச் செல்வதைத் தவிர்த்தல்.

5.அதிக வெப்பமான காலத்தில் பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டிகளையும் விளையாட்டுப் பயிற்சிகளையும் தவிர்த்தல்.

**தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்**

1.போதுமான குடிநீரை வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்வதுடன் வழமையை விட அதிகளவான நீரைப் பருகுவதற்கு ஊக்கப்படுத்த வேண்டும்.

2.பாடசாலைகளில் போதுமான நீர் வசதி இல்லாத விடத்து தேவையான குடிநீரை வழங்க மாற்று ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். மாவட்ட செயலாளரின் உதவியுடன் மாவட்ட இடர் முகாமைத்துவ இணைப்பாளரின் உதவியைப் பெற்றுக் கொள்ளலாம்.

3.போதுமான காற்றோட்ட வசதியை வகுப்பறைகளில் ஏற்படுத்துவதற்காக கதவுகள், ஜன்னல்களைத் திறந்து விட வேண்டும், மின் விசிறிகளை பாவிக்க வேண்டியிருப்பின் போதுமான காற்றோட்டத்தை உறுதிப்படுத்த கதவுகள், ஜன்னல்களை முற்றாகத் திறக்க வேண்டும்.

4.அடுக்கு மாடிகள், தகரத் தகடுகளால் உருவாக்கப்பட்ட வகுப்பறைகளை போதுமான நிழலுள்ள, காற்றோட்டமுள்ள வகுப்பறைகளுக்கு தற்காலிகமாக இடமாற்ற வேண்டும்.

**மாணவர்களுக்கான பிரத்தியேக ஆயத்தங்கள்**

1.கழுத்துப்பட்டி அணிவதைத் தவிர்த்தல்.

2.இயலுமானவரை இடுப்புப்பட்டி அணிவதைத் தவிர்த்தல்.

3.வெளியிடங்களுக்கு வெயிலில் செல்ல வேண்டியிருப்பின் தொப்பியை அணிந்து அல்லது குடை பிடித்துச் செல்லல் வேண்டும்.

4.கறுப்பு நிற ஆடைகளை அணிந்து செல்வதைத் தவிர்க்க வேண்டும்.

5.வழமையை விட அதிகளவு நீரைப் பருக வேண்டும். நீருக்குப் பதிலாக இளநீரைப் பருகலாம். அதிக சீனியை உள்ளடக்கிய காற்றடைத்த பானங்களை பருகுவதைத் தவிர்க்க வேண்டும்.

6.மாணவர் ஒருவரில் உடல் நலம் பாதிக்கப்பட்ட அறிகுறியை அவதானிக்குமிடத்து உடனடியாக ஆசிரியருக்கோ அல்லது வயது வந்த நபர் ஒருவருக்கோ தெரியப்படுத்துவதுடன் உடனடியாக மருத்துவ சேவை வழங்குவதற்கான ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

அதிக வெப்பமான காலநிலையின்போது தேவையான ஆயத்தங்களை செய்வதுடன் மேற்குறித்த அறிவுறுத்தல்களை பின்பற்றுவதன் மூலம் வெப்பத்தாக்கம் காரணமாக பொதுமக்களிடையேயும் மாணவர்களிடையேயும் ஏற்படக்கூடிய பாதிப்புக்களைத் தவிர்க்க, கட்டுப்படுத்த முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

# சுழிபுரம் இராஜராஜேஸ்வரி அம்பாள் அலங்கார உற்சவம்

சுழிபுரம் கம்பனை ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று 09.03.2019 சனிக்கிழமை தொடக்கம் 20-03-2019 புதன்கிழமை வரை தொடர்ந்து 12 நாட்கள் நடைபெறவுள்ளது.

தினமும் மாலை 5.30 மணிக்கு விசேட அபிஷேகம் பூஜை நடைபெற்று வசந்த மண்டபப் பூஜையைத் தொடர்ந்து அம்பாள் திருவீதி உலா வருவார். (ம-3)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநி யோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் புராமரிபுவேலைகளுக காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணிவரை **யாழ்.பிரதேசத்தில்** சுன்னாகம் ஒரு பகுதி, சுப்பிரமணியம் வீதி, ஐயனார் கோவிலடி, மயிலணி, மல்லாகம், ஏழாலை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான், தெல்லிப்பழை, நீதிமன்ற கட்டடத் தொகுதி மல்லாகம், சுன்னாகம் மக்கள் வங்கி, சுன்னாகம் கார்கில்ஸ் பூட்சிற்றி, மருதனார்மடம், ரொட்டியாலடி, அம்பலவாணர் வீதி, பெரிய மதவடி, இலங்கை வங்கி முன் ஒழுங்கை, மருதனார் மடம் - யாழ் நுண்கலைப் பீடம், கட்டுவன் ஒரு பகுதி, கோண்டாவில் புகையிரத நிலைய பிரதேசம், துணவி, சங்கானை, தொட்டிலடி, பண்டத்தரிப்பு, விழிசிட்டி, தொல்புரம், சுழிபுரம், கள்ள வேம்படி, வடலியடைப்பு, சில்லாலை, சாந்தை, விளான், பெரியவிளான், இளவாலை, மாரீசன்கூடல், சேந்தாங்குளம், மாதகல், காஞ்சிபுரம், ஜம்புகோளப்பட்டிணம், குசுமாந்துறை, காட்டுபுலம், வட்டுக்கோட்டை, அராலி, மூளாய், சண்டிலிப்பாய், சீரணி, தொல்புரம், மாசியப்பிட்டி, பெருமாள்கடவை, ஆலங்குழாய் சண்டிலிப்பாய், கந்தரோடை, உடுவில் ஆர்க் வீதி ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில** சிறுநாவற்குளத்திலிருந்து தலைமன்னார் வரை, தள்ளாடி இராணுவ முகாம், டயலொக் தொலைத்தொடர்பு நிலையம், மன்னார் வைத்தியசாலை, மன்னார் நீர்ப்பாசனத் திணைக்களம், தலைமன்னார் கடற்படை முகாம், Timex ஆடைத் தொழிற்சாலை, Youth Crop பயிற்சி நிலையம், Palmyrah house, வங் காலைப்பாடு ஐஸ் தொழிற்சாலை, பேசாலை ஐஸ் தொழிற்சாலை, அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, கூல் மென் ஐஸ் தொழிற்சாலை, தலைமன்னார் Palmyrah house, தலைமன்னார் வைத்தியசாலை ஆகிய பிரதேசங்களிலும், மின் தடைப்படும். (9)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



- ❖ நியாயத்தை எடுத்துச் சொல்வதில் கோழையாக இராதீர்கள். உலக நன்மைக்காக சண்டை செய்வதில் வீரராக இருங்கள்.
- ❖ உங்களை ஏழை என்று நினைக்காதீர்கள். பணம் ஒரு சக்தியல்ல. நன்மையும் தெய்வபக்தியுமே சக்தி.
- ❖ இந்த உலகில் தோன்றிய நீங்கள் அதற்கு அடையாளமாக ஏதேனும் விட்டுச் செல்லுங்கள். இல்லையேல் உங்களுக்கும் கற்களுக்கும் வேறுபாடு இல்லாமல் போய்விடும்.
- ❖ தனியாக இருந்து கொண்டு பலருடைய பகையை தேடிக் கொள்பவன் அறிவற்ற மூடனைப் போன்றவன்.
- ❖ செல்வம் பெருகிய காலத்தில் ஒருவனுக்கு பணிவு வேண்டும். அதே சமயம், செல்வம் குறைந்து வறுமை வரும் காலத்தில் பணியாத துணிவு வேண்டும்.
- ❖ கடின உழைப்பு இல்லாமல், பெரிய காரியங்களைச் சாதிக்க முடியாது.

# நவாலி தென்றலின் தாச்சிச் சுற்றுப் போட்டி சித்திவிநாயகர்- வசந்தஸ்ரீ அணிகள் மோதல்



யாழ். மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுசரணையுடன் நவாலி தென்றல் விளையாட்டுக் கழகம் நடத்தும் தாச்சிச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணிக்கு தென்றல் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இறுதிப் போட்டியில் ஆனைக்கோட்டை சித்திவிநாயகர் அணியும் சண்டிலிப்பாய் வசந்த ஸ்ரீ அணியும் பலப்பரீட்சை நடத்தவுள்ளது. தென்றல் விளையாட்டுக் கழகத்தின் தலைவர் ஆ.ஜெகஸ்கரன் தலைமையில் நடைபெறும். இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக ஈழமக்கள் ஜனநாயக கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் ஜெகன், கௌரவ விருந்தினராக யாழ்.ஜோன்சன் கலந்து கொள்வதுடன் சிறப்பு விருந்தினர்களாக யாழ். இந்துக் கல்லூரியின் அதிபர் சதா நிமலன், மானிப்பாய் பிரதேச சபை உறுப்பினர் வை. மைதிலி ஆகியோர் கலந்து கொள்வர். (கு)

# பெண்களுக்கான தேசிய பி பிரிவு மேஜர் சதுரங்கப் போட்டிகள்

பெண்களுக்கான தேசிய பி பிரிவு மற்றும் மேஜர் சதுரங்க போட்டிகள் நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி இன்று சனிக்கிழமை நாளை ஞாயிற்றுக்கிழமை ஆகிய தினங்களில் யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையில் நடைபெறும்.

வெள்ளி பிற்பகல் 2.30 மணி தொடக்கம் 3.30 மணிவரை பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு 4 மணிக்கு போட்டிகள் ஆரம்பமாகும். மேஜர்ஸ் போட்டியில் ஏற்கனவே நொவின் பிரிவில் தெரிவு செய்யப்பட்டவர்களும் தரப்படுத்தல் புள்ளிகள் பெற்றோரும் கலந்து கொள்ள லாம்.

பெண்களுக்கான தேசிய பி பிரிவு போட்டியில் அனைவரும் கலந்து கொள்ள முடியும். (கு)

# புதிய மைல்கல்லை எட்டிய தென்னாபிரிக்கத் தலைவர்



இலங்கைக்கு எதிரான 2 ஆவது போட்டியில் தென்னாபிரிக்க கிரிக்கெட் அணித்தலைவர் பாப் டூ பிளீசிஸ் ஒருநாள் போட்டிகளில் 5 ஆயிரம் ஓட்டங்கள் என்ற மைல் கல்லை எட்டினார்.

இலங்கை-தென்னாபிரிக்க அணிகள் மோதிய 2 ஆவது ஒரு நாள் போட்டி செஞ்சூரியனில் நடந்தது. இதில் முதலில் ஆடிய தென்னாபிரிக்க அணி 252 ஓட்டங்களை வெற்றி இலக்காக இலங்கைக்கு நிர்ணயித்தது.

அதனைத் தொடர்ந்து ஆடிய இலங்கை அணி 138 ஓட்டங்களுக்கு சுருண்டு 113 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இந்தப் போட்டியில் தென்னாபிரிக்க கிரிக்கெட் அணித்தலைவர் பாப் டூ பிளீசிஸ் 66 பந்துகளில் 57 ஓட்டங்கள் எடுத்தார்.

இதன் மூலம் ஒருநாள் போட்டிகளில் 5 ஓட்டங்கள் என்ற மைல்கல்லை எட்டிய 10 ஆவது வீரர் என்ற பெருமையை பெற்றார். 131 போட்டிகளில் விளையாடியிருக்கும் டூ பிளீசிஸ் 5017 ஓட்டங்கள் குவித்துள்ளார். இதில் 11 சதம், 32 அரைசதங்கள் அடங்கும். (க)

# இந்திய அணியினருக்கு விருந்தளித்த டோனி



இந்திய அணியின் விக்கெட் கீப்பரான எம்.எஸ்.டோனி, ராஞ்சியில் உள்ள தனது ரெஸ்டோரண்டில் சக வீரர்களுக்கு விருந்து கொடுத்தார்.

இந்தியா-அவுஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான ஒரு நாள் கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது. முதல் இரண்டு போட்டிகளிலும் வெற்றி பெற்று இந்திய அணி 2-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.

இரு அணிகளுக்கும் இடையிலான 3 ஆவது ஒருநாள் போட்டி ராஞ்சியில் நேற்று நடைபெற்றது. இது விக்கெட் கீப்பர் டோனியின் சொந்த ஊராகும். மேலும் இங்கு அவருக்கு சொந்தமாக ரெஸ்டோரண்ட் உள்ளது.

இந்நிலையில், இந்திய வீரர்களுக்கு 3 ஆவது ஒருநாள் போட்டியில் பங்கேற்க ராஞ்சிக்கு சென்றுள்ளனர். அங்கு தனது ரெஸ்டோரண்டிற்கு சக அணி வீரர்களை வரவேற்ற டோனி, அவர்களுக்கு இரவு விருந்து அளித்தார்.

இந்த விருந்தில் கலந்து கொண்ட அணித்தலைவர் விராட் ஹோலி மற்றும் சுழற்பந்து வீச்சாளர் சாஹல், விருந்து தொடர்பான புகைப்படத்தை டுவிட்டரில் வெளியிட்டுள்ளனர். (க)









தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் வருடாந்தம் நடத்தப்படுகின்ற விளையாட்டு விழாவில் 31 ஆவது தேசிய இளைஞர் விளையாட்டு விழா இவ்வருடம் இடம்பெறவுள்ளது அந்த வகையில் பிரதேச ரீதியாக இடம்பெறும் இளைஞர் கழகங்களுக்கிடையிலான பிரதேச மட்ட விளையாட்டு விழாக்கள் முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் இடம்பெற்று வருகின்றது.

ஒட்டுசுட்டான் பிரதேசத்திற்குட்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான குழு போட்டிகள் அண்மையில் இடம்பெற்றன.

ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற ஆண்களுக்கான கபடி போட்டியில் கற்சிலைமடு பரந்தாமன் இளைஞர் கழகம் முதலாம் இடத்தையும் முத்துவிநாயகபுரம் கலைமகள் இளைஞர் கழகம் இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டுள்ளது. பெண்களுக்கான கபடி போட்டியில் கற்சிலைமடு பரந்தாமன் இளைஞர் கழகம் முதலாம் இடத்தையும் சின்னசாளம்பன் விநாயகர் இளைஞர் கழகம் இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டுள்ளது. (க-281)

# சர்வதேச கிரிக்கெட்டில் விளையாடுவது பெரியவரம் அதை எமது வீரர்கள் புரிந்து கொள்ள வேண்டும்

## தோல்வியின்பின் மலிங்க

இலங்கை - தென்னாபிரிக்க அணிகள் இடையிலான இரண்டாவது ஒருநாள் போட்டியில் இலங்கை படுதோல்வியடைந்த நிலையில் அது குறித்து அணித்தலைவர் லசித் மலிங்கா வேதனை தெரிவித்துள்ளார்.

இலங்கை - தென்னாபிரிக்கா அணிகள் இடையிலான இரண்டாவது ஒருநாள் போட்டி செஞ்சூரியனில் நடைபெற்றது.

இப் போட்டியில் தென்னாபிரிக்கா 113 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று 5 போட்டிகள் கொண்ட தொடரில் 2-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது.

தோல்விக்கு பின்னர் பேசிய இலங்கை அணித்தலைவர் லசித் மலிங்க, முதல் 10 - 15 ஓவர்கள் வரை நாங்கள் சரியாக பந்துவீசவில்லை.

ஆனால் பின்னர் சிறப்பாக பந்துவீசி 251 ஓட்டங்களில் தென்னாபிரிக்காவை ஓல் அவுட் ஆக்கினோம். பந்துவீச்சாளர்கள் சிறப்பாக செயற்பட்டாலும் அதை எங்களது துடுப்பாட்ட வீரர்கள் புரிந்து கொள்ளவில்லை.

சர்வதேச கிரிக்கெட்டில் விளையாடும் மதிப்பு எவ்வளவு பெரியது என்பதை நமது வீரர்கள் உணர வேண்டும்.

அவர்களுக்கு வழங்கப்படும் வாய்ப்பை உணர்ந்து அதற்கேற்றார் போல செயற்பட வேண்டும் எனக்கூறியுள்ளார். (க)

## இன்னும் 6 மாதத்...

தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறியுள்ளார். கூட்டு எதிர்க் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சித் தலைவர்கள் கட்சி உறுப்பினர்கள் இக்கூட்டத்தில் கலந்துகொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இருப்பினும், இந்தக் கூட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் எவரும் கலந்து கொள்ளவில்லை எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.(ம-3)

## இலங்கைக்கு எதி...

ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் வரும் 20ஆம் திகதி சமர்ப்பிக்கவுள்ள, ஐ.நா மனித உரிமை ஆணையாளர் மிச்சேல் பசெலெட் அம்மையாரின், இலங்கை தொடர்பான அறிக்கை நேற்று பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளது.

ஒரு பிரகாசமான எதிர்காலத்தை உருவாக்க, பொறுப்புக்கூறலின் அடிப்படையில், மனித உரிமைகள் மற்றும் சட்டத்தின் ஆட்சி ஆகியவற்றை உறுதி செய்வதாக, 2015ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட ஐ.நா மனித உரிமைகள் பேரவைத் தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கி ஏற்றுக் கொண்டிருந்தது. எனினும், அதற்கான தீர்க்கமான நடவடிக்கைகள் மற்றும் பொருத்தமான தொடர்பாடல் இல்லாததால் பரந்தளவிலான விரக்தியை ஏற்படுத்தியுள்ளது என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

போதிய முன்னேற்றங்கள் இன்மையானது, இலங்கையின் மனித உரிமைகள் நிலைமையை தொடர்ந்தும் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின், உறுதியான நிகழ்ச்சி நிரலில் வைத்திருக்க வேண்டும் என்பதைக் காட்டுவதாக்வும் அந்த அறிக்கையில் ஐ.நா மனித உரிமை ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, ஐ.நா மனித உரிமைகள் பேரவை இலங்கை அரசாங்கத்துடன் தொடர்ந்தும் நெருக்கமான தொடர்புகளைப் பேண வேண்டும் என்பதுடன் இலங்கையின் நிலைமைகளை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும் என்று ஐ.நா மனித உரிமை ஆணையாளர் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஐ.நா மனித உரிமைகள் பேரவையை தொடர்ந்தும், இலங்கை அரசாங்கத்துடன் நெருங்கிச் செயற்படுமாறும், உறுப்பு நாடுகளுக்குப் பரிந்துரை செய்துள்ள ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர், நாட்டின் முன்னேற்றங்களைக் கண்காணிப்பதுடன், சித்திரவதை, காணாமல் ஆக்கப்படுதல், போர்க் குற்றங்கள், அல்லது மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பான குற்றச்சாட்டுகளுக்கு பொறுப்பானவர்களுக்கு எதிராக உலகளாவிய அதிகாரவரம்புகளுக்கு அமைய சாத்தியமான விசாரணை மற்றும் சட்ட நடவடிக்கை எடுத்தல் மற்றும் நம்பகமான உள்நாட்டு செயல்முறைகள் இல்லாவிடின் மேலதிக பொறுப்புக்கூறலுக்கான ஏனைய வாய்ப்புகளை கண்டறிய வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

பொறுப்புக்கூறல், நீதி மற்றும் நல்லிணக்கத்துக்குப் பொருத்தமான அமைப்புகளை உருவாக்க ஆதரவளித்து கடந்தகால மனித உரிமை மீறல்களுக்கு தீர்வு காணும் இலங்கை மக்களின் முயற்சிகளுடன் தொடர்ந்து இணைந்து செயற்படுமாறும் ஐ.நா மனித உரிமைகள் பேரவையை அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இலங்கையின் மனித உரிமைகள் நிலைமைகளைக் கண்காணிக்கவும் ஐ.நா மனித உரிமை ஆணையாள்ர், ஐ.நா மனித உரிமைகள் பேரவை மற்றும் மனித உரிமைகள் பொறிமுறைகளின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கான ஆலோசனைகளை வழங்கவும் தொழில்நுட்ப உதவிகளை அளிப்பதற்குமான முழு அளவிலான பணியகம் ஒன்றை இலங்கையில் அமைக்க ஐ.நா மனித உரிமை ஆணையாளர் பணியகத்துக்கு, இலங்கை அரசாங்கம் அழைப்பு விடுக்க வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார். (ம-3)

## நாட்டை மீட்க ஒன்...

முனவினர் நேற்று வெள்ளிக்கிழமை பொருத்தது போதும் என்ற தொனிப்பொருளில் கண்டியில் முன்னெடுத்த மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார இவ்வாறு அழைப்பு விடுத்துள்ளார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர், வரலாற்று காலங்களில் அரசர்கள் அந்நியர்களுக்கு எதிராக போராடியே தாய் நாட்டை பாதுகாத்தார்கள்.

இக்காலகட்டத்தில் மன்னர்கள் எவரும் அந்நியர்களுக்கு விலைபோகவில்லை. ஆனால் தற்போது ஐக்கிய தேசியக் கட்சி மேற்குலகத்தவர்களுக்கு முழுமையாக விலை போயுள்ளனர்.

எனவே ஐக்கிய தேசியக் கட்சியிடம் இருந்து மீண்டும் நாட்டை மீட்க வேண்டுமாயின் அனைத்து தரப்பினரும் ஒன்றுபட வேண்டும் என தெரிவித்துள்ளார். (ம-3)

## கிரியெல்ல - தயா...

மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அரசாங்கம் புதிய பிரேரணை எதனையும் உள்ளடக்க தயாராகின்றதா? கடந்த 2015 ஆம் ஆண்டு அப்போதைய நிதி அமைச்சர் மங்கள சமரவீர இணை அனுசரணையை ஏற்றுக்கொண்டதைப்போல இம்முறையும் அரசாங்கமாக ஏதேனும் பிரேரணையை ஏற்றுக்கொள்ள தீர்மானம் எடுத்துள்ளீர்களா? இது குறித்து அமைச்சரவையில் ஏதும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதா, பாராளுமன்றத்தில் இதுகுறித்து ஏதும் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதா? ஏற்கெனவே அரசாங்கம் பிரேரணைக்கு இணை அனுசரணை வழங்கி இறுதியில் இலங்கைக்குள் சர்வதேச நீதிபதிகளை வரவழைத்து குற்ற விசாரணைகளை நடத்தும் நிலைமையே உருவாகியது. ஆகவே மீண்டும் அவ்வாறான இணை அனுசரணை ஒன்றினை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளப்போகின்றதா என கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த லக்ஷ்மன் கிரியெல்ல, இராணுவத்தையோ அல்லது வேறு எவரையுமோ தண்டிப்பதற்கு சர்வதேச நீதிபதிகளுக்கு இடமளிக்கப்போவதில்லை. அதேபோல் தற்போதைய பிரேரணையை திருத்தி இலங்கைக்கு சாதகமான வகையில் ஒரு பிரேரணையை கொண்டுவருவது குறித்து நாம் சர்வதேச தரப்புடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றோம் என்றார். (ம-3)

## கட்டுப்பாட்டை இழ...

சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டுள்ளார். இச்சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை முழங்காவில் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது முழங்காவில் பகுதியில் நேற்று முன்தினம் வியாபார நடவடிக்கைக்காக பட்டா ரக வாகனத்தில் இருவர் பயணித்துள்ளணர்.

வாகனம் சென்று கொண்டிருந்தவேளை ரயர் திடீரென காற்று போனதால் அருகில் இருந்த மரத்துடன் மோதுண்ட வாகனம் விபத்துக்குள்ளானது.

இதில் சுன்னாகத்தைச் சேர்ந்த 22 வயதுடைய செல்வநாயகம் பீற்றர் ஜஸ்மின் என்பவர் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளதுடன் வாகனத்தில் பயணித்த மற்றொருவர் படுகாயமடைந்த நிலையில் முழங்காவில் ஆதார வைத்திய சாலைக்கு கொண்டு சென்று பின்பு மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசா லைக்கு மாற்றப்பட்டுள்ளார். இது தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக தெரிய வருகிறது. (ம-3)

# துவிச்சக்கரவண்டியுடன் மோ.சைக்கிள் விபத்து

## இருவர் படுகாயம்

(சாவகச்சேரி)

கொடிகாமம் -கச்சாய் வீதியில் நேற்று வெள்ளிக்கிழமை மதியம் 1.20 மணியளவில் இடம்பெற்ற துவிச்சக்கரவண்டி-மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கச்சாய் வீதி வாகையடிப் பகுதியில் வீதியால் சென்ற துவிச்சக்கரவண்டியினை வேகக் கட்டுப்பாட்டினை இழந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் இவ் விபத்து சம்பவித்துள்ளது.

இதில் துவிச்சக்கரவண்டியில் சென்ற பெருங்குளம் சாவகச்சேரியைச் சேர்ந்த 32வயதான ம.சதீஸ்வரன், மோட்டார் சைக்கிளில் சென்ற கச்சாய் தெற்கு கொடிகாமத்தைச் சேர்ந்த 19வயதான கு.பிரியந்தன் ஆகிய இருவரும் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளை கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-10-30)


## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA VACANCIES

University of Jaffna will entertain applications to reach us on or before 03.05.2019 from qualified Sri Lankan Nationals for the undermentioned **Temporary** posts.

### FACULTY OF SCIENCE

**Temporary Assistant Lecturer / Temporary Demonstrator** in Botany / Chemistry / Physics / Zoology / Fisheries
**Temporary Assistant Lecturer /Temporary Instructor** in Mathematics / Statistics / Computer Science
**Temporary Instructor** in Computing
**Temporary Research Assistant** in Chemistry / Zoology

**Note: Candidates who are awaiting the results of the final degree examinations may also apply for the post of Temporary Demonstrator/ Temporary Instructor.**

**Minimum Requirements/Qualifications:**

01. A Degree with specialization in the relevant subject with First Class or Second Class (Upper Division) Honours;
**OR**
02. A Degree with specialization in the relevant subject with Second Class (Lower Division) Honours;
**OR**
03. (a) A Degree with specialization in the relevant subject without Honours or any other degree with at least Second Class Honours, and (b) a recognized postgraduate degree in the relevant subject

### SALARY AND OTHER BENEFITS

| Post | Salary scale |
|---|---|
| **Temp.Demonstrator/ Temp.Instructor** | **Rs. 37,010/-p.m (Fixed)** |
| **Temporary Lecturer** | **Rs. 45,092/ p.m. (Fixed)** |
| **Temporary Research Assistant** | **Rs. 45,092/ p.m. (Fixed)** |

In addition to the above salary, the allowances approved by University Grants Commission applicable to the posts will also be paid.

Application form, Payment Voucher and other details either can be obtained from the office of the Dean, Faculty of Science, University of Jaffna, Sri-Lanka or can be downloaded from the Faculty of Science website www.sci.jfn.ac.lk

Duly filled Applications along with the Payment Voucher (Rs. 100/- for each application) shall be sent to the Assistant Registrar/ Faculty of Science, University of Jaffna, Sri Lanka.

Those who wish to apply for **more than one** post should submit **separate application for each.**

Applicants from the University System/Government Departments/Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions. Illegible, incomplete and late applications will be rejected without intimation. Only short-listed applicants will be called for an interview.

**Registrar,**
University of Jaffna,
Sri Lanka.

(C-5725)

07/03/2019


### தன நிதானய

திகதி 2019-03-08
சீட்டிழுப்பு இலக்கம் 124
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்
A 05 38 54 82

### மெகா பவர்

திகதி 08/03/2019
சீட்டிழுப்பு இலக்கம் 354
வெற்றி எழுத்து / சுப்பர் இலக்க / வெற்றி இலக்கங்கள்
G 19 03 13 40 57

### கொவிசெத

திகதி 2019.03.08
சீட்டிழுப்பு இலக்கம் 2057
ஆங்கில எழுத்து / வெல்லப்பட்ட இலக்கங்கள்
Z 03 23 37 64

தேசிய லொத்தர் சபை

## மன்னார் புதைகுழி...

ளுக்கு மேலாக குறித்த மன்னார் மனிதப் புதைகுழி அகழ்வுகள் இடம்பெற்ற நிலையில், அதிலிருந்து சுமார் 323க்கும் மேற்பட்ட முழு மனித எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இந்நிலையில் நேற்று முன்தினம் மன்னார் மனித புதைகுழியில் மீட்கப்பட்ட மனித எச்சங்கள் 1499 முதல் 1719 ஆண்டிற்குட்பட்டவையாகயிருக்கலாம் என மனித புதைகுழியிலிருந்து மீட்கப்பட்ட மனித எச்சங்களை ஆய்வு செய்த அமெரிக்காவின் புளோரிடா ஆய்வுகூடம் தெரிவித்திருந்தது.

இந்நிலையில் குறித்த மன்னார் மனித புதைகுழி அகழ்வை தற்காலிகமாக நிறுத்துமாறு மன்னார் நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3)

## அடி காயங்களுட...

மீட்கப்பட்டுள்ளது.

நேற்று மாலை 6 மணியளவில் வவுனியா பொலிஸாரால் குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது. இச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, உக்கிளாங்குளம், 4ஆம் ஒழுங்கைப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து நெற்றி மற்றும் கை என்பவற்றில் காயங்களுடன் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த வீட்டில் சம்பவ நேரம் தந்தையும் மகளும் இருந்துள்ளார்கள். மகள் உணவருந்தி விட்டு உறங்கியுள்ளார். தந்தையாரும் உணவருந்தி விட்டு வீட்டில் நின்றுள்ளார். நித்திரை விட்டு எழுந்த மகள் தந்தையை தேடிய போது வீட்டின் முன் வாயில் பகுதியில் உள்ள தண்ணீர் பம்பி அருகில் தந்தையார் விழுந்து கிடந்ததை அவதானித்துள்ளார்.

இதனையடுத்து அயலவர்கள் மற்றும் உறவினர்களின் உதவியுடன் தந்தையை எழுப்ப முயன்ற போது அவரது நெற்றி மற்றும் கை என்பவற்றில் காயங்கள் காணப்பட்டமையும், மரணித்து இருந்தமையும் அவதானிக்கப்பட்டுள்ளது.

இத்தனையடுத்து பொலிஸாருக்கு வழங்கிய முறைப்பாட்டையடுத்து சம்பவ இடத்திற்கு வருகை தந்த பண்டாரிக்குளம் பொலிஸார் குறித்த குடும்பஸ்தரின் சடலத்தை பார்வையிட்டதுடன், சடலத்தில் காயங்கள் காணப்பட்டமையால் உடனடியாக வவுனியா தடவியல் பொலிஸாருக்கு தெரியப்படுத்தினர்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு வருகை தந்த தடவியல் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இவ்வாறு மரணமடைந்தவர் அப்பகுதியைச் சேர்ந்த செ.சிவராஜா (வயது 64) என்பவராவார். மரணித்தவரின் சடலம் மீட்கப்பட்டு வவுனியா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ம-250)

## நீதியை நிலைநாட்...

இலங்கை அடைந்துள்ள முன்னேற்றம் தொடர்பில் மீளாய்வு செய்யும் அறிக்கை நேற்று வெளியாகியுள்ளது.

நல்லிணக்க செயற்பாட்டிற்கான இணைப்பு செயலகம் ஸ்தாபிக்கப்பட்டமை, காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான அலுவலகம், தேசிய நல்லிணக்க செயலகம் ஆகிய நிறுவனங்கள் ஸ்தாபிக்கப்பட்டமை தொடர்பில் நேற்று வெளியாகியுள்ள அறிக்கையில் நன்றி தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், பொறுப்புக்கூறல் தொடர்பான செயற்பாடுகள் மந்தகதியில் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அதில் குறைந்தளவு முன்னேற்றமே ஏற்பட்டுள்ளதாகவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் ஆராய்வதற்காக விசேட நீதிமன்றமொன்றை ஸ்தாபிப்பதாக முதலாவது தீர்மானத்திற்கு இணை அனுசரணை வழங்குவதில் குறிப்பிடப்பட்ட முக்கிய விடயமாக இருந்தாலும், அதற்கான நடவடிக்கை இதுவரையில் எடுக்கப்படவில்லை என அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

நாட்டில் இடம்பெற்ற பல்வேறு சம்பவங்களை உதாரணமாக சுட்டிக்காட்டி இலங்கையில் இடம்பெற்ற பாரதூரமான குற்றங்கள் தொடர்பில் நீதியை நிலைநிறுத்துவதற்கான இயலுமை இலங்கையின் உள்ளகக் கட்டமைப்பிற்கு உள்ளதா? எனவும் இந்த அறிக்கையில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

2008, 2009 ஆம் ஆண்டுகளில் 11 இளைஞர்கள் காணாமலாக்கப்பட்ட சம்பவம் இதில் முக்கியமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனைத் தவிர, வெலிக்கடை சிறைச்சாலை மோதலில் 27 பேர் உயிரிழந்தமை, ரத்துபஸ்வல ஆர்ப்பாட்டத்தின் போது ஏற்பட்ட மரணம், நடராஜா ரவிராஜ் கொலை, பிரகீத் எக்னெலிகொட காணாமலாக்கப்பட்டமை, லசந்த விக்ரமதுங்க படுகொலை ஆகிய சம்பவங்களும் இந்த அறிக்கையில் நினைவு கூரப்பட்டுள்ளன.

பொறுப்புக்கூறல் செயற்பாட்டில் இலங்கை குறைந்தளவிலான முன்னேற்றத்தை அடைந்துள்ளதால், தொடர்ந்தும் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையின் நிகழ்ச்சி நிரலில் இலங்கை உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும் என நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் எதிர்வரும் 20 ஆம் திகதி இந்த அறிக்கையை மனித உரிமைகள் பேரவையில் சமர்ப்பிக்கவுள்ளார். (ம-3)

## அரச வேலைவாய்...

கும் தனித்தனியே நடந்து சென்று ஒவ்வொரு வீட்டு உரிமையாளர்களிடமும் வீட்டு உரிமப்பத்திரங்களை கையளித்ததுடன் நேரடியாக அவர்களுடைய பிரச்சினைகளை கேட்டறிந்ததுடன், அதற்கு அமைச்சரால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை உடனடியாக அழைத்து தீர்வுகளையும் பெற்றுக்கொடுத்துள்ளார்.

இதன்போது பொன்னொளி கிராமத்திலே நலிவுற்ற கலைஞர்கள் ஏழு பேருக்கு தலா 10 ஆயிரம் ரூபாயும் அமைச்சரால் வழங்கப்பட்டதுடன், அக்கிராமத்திலே கல்வி கற்று தகுதியிருந்தும் வேலையில்லாது இருந்த வறுமைக்கோட்டுக்குட்பட்ட ஐந்து பேருக்கு உடனடியாக நடைமுறைக்கு வரும்வகையில் அரச தொழிலுக்கான உறுதிப்பத்திரம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கொழும்பிலுள்ள ஒரு அமைச்சர் 65 வீட்டுக்கும் ஒவ்வொரு வீடாகச் சென்று உறுதிப்பத்திரங்களை கையளித்து அவர்களுடைய பிரச்சினைக்கு தீர்வினை பெற்றுக் கொடுத்தமை அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது. (ம-3-10)

## அமைச்சர் சஜித்...

கேள்வி எழுப்பியதுடன் கலாசார உத்தியோகத்தரை உடனடியாக அழைக்குமாறும் கூறினார். அங்குமிங்கும் ஓடிய அதிகாரிகள் ஒருவிதமாக கலாசார உத்தியோகத்தரை அழைத்து வந்தனர். குறித்த உத்தியோகத்தரிடம் ஆலயத்தை பெரிதாக அமைப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு பணிப்புரையை வழங்கினார்.

பொன்னொளி நகர் வீடுகளுக்கான நீர் விநியோக நடவடிக்கைகளை ஏன் செய்யவில்லை என கேள்வி எழுப்பிய போது அதிகாரிகள் ஒருவரின் முகத்தை ஒருவர் பார்த்தபடி நின்றார்கள். பிரதேச சபைத் தலைவரை கூப்பிடுங்கள் எனக்கேட்ட போது சம்பவ இடத்துக்கு வந்த யாழ் அரச அதிபர் மிக விரைவாக நடவடிக்கை எடுப்பதாக அமைச்சரிடம் தெரிவித்தார்.

ஒவ்வொரு வீடாகச் சென்று வீடுகளைக் கையளிக்கும் போது அவ்வீட்டு மக்களிடம் சந்தோசமா? பிரச்சினைகள் இருந்தால் தன்னிடம் கூறுங்கள் என தமிழில் கேட்டிருந்தார். (ம-10)

## வடம...



படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

பிரான்சின் பொன்டி நகரில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் ஒரு பிள்ளையின் தந்தையான பொன்னுச்சாமி விமல்காந் (வயது-35) என்ற இளம் குடும்பஸ்தரே படுகொலை செய்யப்பட்டவராவார். தொழில் பிரச்சினை சம்பந்தமாகவே இக்கொலை நடந்துள்ளதாக கூறப்படுகிறது.

இச்சம்பவம்தொடர்பில் பிரான்ஸ் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-60)


### சைக்கிள் வேலைக்கு ஆள் தேவை

சைக்கிள் விற்பனை நிலையம் ஒன்றுக்கு சைக்கிள் திருத்த வேலைகளில் அனுபவமுள்ள ஒருவர் தேவை.

077 416 3146 (7747)

### டுபாய் வேலைவாய்ப்பு

விற்பனை பிரதிநிதிகள் (ஆண்/பெண்)

இம்மாதமே பயண ஏற்பாடு...

வடக்கின் 1வது & ஒரேயொரு அரச அங்கீகாரமுள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்

Emerald Isle Manpower & Travel Services

The Sri Lankan Recruitment Specialists

License No. 2268

077 00 38 215
021 221 9 221 (C-5717)

221-1/1, மின்சார நிலைய வீதி, (2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம்

www.emeraldisle.lk email: jaffna@emeraldisle.lk

### புதிய பிரிவுகள் ஆரம்பம்

வங்கியியல் கற்கைநெறிகள்

**Banking courses**
**IABF&DABF**

(Tamil & English Medium)

Qualification : G.C.E. O/L 6 Passes with 5 credits including Maths

கணக்காளர் கற்கைநெறிகள்

**Chartered Accounting Courses**

Executive Level

(Tamil&English Medium)

Qualification :- G.C.E A/L 3 Passes

**Certificate Course in English**

18 Batches have Successfully Completed the course.Register Your names.

Further Details:

Jaffna College
Undergraduate Dept.
464,Hospital Road, Jaffna.
0212223382/0212229149 (C-5710)

### காண்டம் பார்த்தல்

உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும் துல்லியமாக கணித்துத் தருகின்றோம்.

தொடர்பு: 076 835 1932,
021 223 2222 (உரும்பிராய்) (7692)

### வீடு விற்பனைக்கு

வண்ணார்பண்ணை பகுதியில் அமைதியான வாழிடச் சூழலில் இரண்டு பரப்புக் காணியுடன் கூடிய வீடு உடனடியாக விற்பனைக்கு உண்டு. தரகர்கள் தேவையில்லை. நேரடித் தொடர்பு:

077 666 8909 (7747)

### பணியாளர் தேவை

01. வரவேற்பாளர் - பெண்
02. சாரதிகள் - 6வீல், 10வீல் டிப்பர்

தொடர்புகளுக்கு:
077 037 6150 (7742)

### கட்டார் வேலைவாய்ப்பு

கார்ப்பென்றர், காபென்றர் ஹெல்ப்பர், ஜிப்சம் கார்ப்பென்றர், பெயின்றர்

வடக்கின் 1வது & ஒரேயொரு அரச அங்கீகாரமுள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனம்

Emerald Isle Manpower & Travel Services

The Sri Lankan Recruitment Specialists

License No. 2268

077 00 38 215
021 221 9 221

இம்மாதமே பயண ஏற்பாடு... (C-5717)

221-1/1, மின்சார நிலைய வீதி, (2ம் ஒழுங்கை), யாழ்ப்பாணம்

www.emeraldisle.lk email: jaffna@emeraldisle.lk

### விரைவு பொதிகள் சேவை

விசேட விலை குறைப்பு



UK- 550 /=Kg
கனடா-900 /=Kg
ஜேர்மனி- 700 /=Kg
நெதர்லாந்து-700 /=Kg

DELIVERY IN 3-5 DAYS (C-5632)

0768226240 V2 TRAVELS

● மானிப்பாய் ● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● சாவகச்சேரி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

### ஆடம்பர வீடு வாடகைக்கு

யாழ்.நகரில் அமைதியான சூழலில் புதிய வீடு நாள், கிழமை, மாத அடிப்படையில் வாடகைக்கு உண்டு. திருமண நிகழ்வுகள், வெளிநாட்டிலிருந்து வருபவர்கள், வெளிமாவட்டத்திலிருந்து வருபவர்கள் மற்றும் ஏனைய சுபநிகழ்வுகளுக்கு வருபவர்கள் தங்குவதற்குரிய சகல வசதிகளுடன் உண்டு. A/C, NON A/C, தளபாட வசதிகள், சமையல் பாத்திரங்கள், எலற்றோனிக் உபகரணங்கள் என அனைத்து வசதிகளும் உண்டு.

தொடர்புகளுக்கு: 077 110 4770 (C-5728)

### கணினி திருத்தம்

உங்கள் வீடுகள் அலுவலகங்களுக்கே வந்து கணினிகள் லப்டொப்கள் திருத்தி தருகிறோம்.

யாழ்ப்பாணம் கிளிநொச்சி முல்லைத்தீவு வவுனியா மன்னார்

சிசிரிவி கமரா 35000/-

4 சிசிரிவி கமரா + இணைப்புபொருட்கள் + கட்டணம் = 35000/-

GUNA BEST PC 0779086737

கணினிகள் சிசிரிவி கமரா விற்பனை திருத்தம் பொருத்துதல்

522 மானிப்பாய் வீதி ஓட்டுமடம் சந்தி யாழ்ப்பாணம்

43 பாங்சால் வீதி சந்தை மேல்மாடி சின்னக்கடை யாழ்ப்பாணம்



வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்



### றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: றாஜ் - 077 679 6623 (7901)

### வேலைவாய்ப்பு

எமது AIA காப்புறுதி யாழ்ப்பாணக் கிளையில் கீழ்வரும் பதவிகளுக்கான வெற்றிடங்கள் உள்ளன.

- அலுவலக உத்தியோகத்தர்
  - ஆங்கில மொழி பேசுதல்
  - கணனி அனுபவம்
  - A/L சித்தியடைந்திருத்தல்
- **Wealth Planner Manager**
  - ஒருவருட வேலை அனுபவம்
- **Wealth Planner**
  - O/L சித்தியடைந்திருத்தல்.



முடிவுத்திகதி: 15/03/2019

மேற்படி வெற்றிடங்களுக்கு தகுதி உடையவர்கள் தங்கள் சுயவிபரக்கோவையினை இரண்டு உறவு அல்லாத சிபாரிசுகளின் விபரத்தோடு கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**AIA காப்புறுதி நிறுவனம்,**
**No.62/6, Stanly Road, Jaffna.** (7796)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.03.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.